


16-1-1982
75காசு






சென்னையில் நடைபெற்ற முதறிஞர் ராஜாஜியின் **104**-வது பிறந்தநாள் விழாவில் (**26.12.81**) அன்னாரது திருவுருவப்படத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.





ஈரோட்டில் தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண் டிசம்பர் **24**ல் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் திறந்து வைக்கப் பட்டது.

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் இணைப்பு இயக்கத்தினர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு **3.1.1982** அன்று ''அண்ணா செங்கோல்'' வழங்கினர்.



# தமிழரசு

மலர் : 12 இதழ் : 14

16–1–1982

திருவள்ளுவர் ஆண்டு 2013

துன்மதி—தை-3





## முகப்பு அட்டையில்...

தன்னிறைவுத் திட்ட இரண்டாவது கட்டமாக நெல்லை மாவட்டத்திலுள்ள கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெறும் இணைப்புச் சாலை சிறு பாலப் பணி.

தென்காசி ஊராட்சி ஒன்றியத்தில் அத்திட்டத்தின் கீழ் விரைந்து நிறைவேறி முடியும் தறுவாயில் உள்ள மகப்பேறு மருத்துவ மனைக் கட்டடம்.



# சமுதாய நீதி

## மாண்புமிகு நிதியமைச்சர்
## நாவலர். இரா. நெடுஞ்செழியன்

**மதுரையில் நடந்த மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர்களின் மாநில மாநாட்டில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

1981-ஆம் வருட கணக்கெடுப்பின்படி, தமிழ் நாட்டின் மக்கள் தொகையின் அளவு 483 இலட்சம் ஆகும். இதில் பின் தங்கிய மிகவும் பின் தங்கிய மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களின் மக்கட் தொகை சுமார் 261 இலட்சம் ஆகும். 177 வகுப்பினர்களைப் பின் தங்கிய சமூகத்தினர் என்று நமது அரசு அங்கீகரித்துள்ளது. இவர்கள் அனைவரும், கல்வி, சமுதாயம், மற்றும் பொருளாதாரம் ஆகிய நிலைகளில் மிகவும் பின் தங்கியுள்ளார்கள். கடந்த பல ஆண்டுகளாக இப்படிப் பின் தங்கியுள்ள மக்களை முன்னுக்கு கொண்டு வரவேண்டும் என அரசு செயல்பட்டு வந்துள்ளது என்றாலும், கடந்த 2,3 ஆண்டுகளில் இத்துறையின் பணிகள், பல வகையிலும் விரிவு படுத்தப்பட்டு முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பேரறிஞர் அண்ணா அவர்களின் அருளாசியின்படி முதன் முதலில் 1969-ஆம் ஆண்டு பிற்பட்டோர் நலத்துறை என இத்துறை துவங்கப் பெற்றது. அந்த ஆண்டில் இத்துறைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 248 இலட்சம் ஆகும். இது படிப்படியாக 1980-81-ம் ஆண்டில் ரூ. 761 இலட்சம் ஆக உயர்ந்துள்ளது. 1981-82ஆம் ஆண்டில் இத்துறைக்கு ரூ.783 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்ற மூதுரைக்கிணங்க, பிற்பட்ட மக்களின் கல்வி மேம்பாட்டுக்கென தமிழக அரசு ஒருகணிசமான தொகையைச் செலவிடுகிறது. 1978-79-ஆம் ஆண்டில் 3.57 இலட்சம் மாணவர்கள் ரூ. 295.96 இலட்சம் வரை உதவித் தொகையாகப் பெற்றுள்ளார்கள். 1979-80ஆம் ஆண்டில் உதவித்தொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 3,86,008 ஆக உயர்ந்துள்ளது. செலவிடப்பட்ட தொகை ரூபாய் 330.66 இலட்சம் ஆகும். 1980-81ஆம் ஆண்டில் 3,96,598 மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர். இவர்களுக்குச் செலவிடப்பட்ட உதவித் தொகை ரூ. 332.92 இலட்சம் ஆகும்.

இதுகாறும் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500-க்கும் குறைவாக உள்ள மாணவர்களுக்குத்தான் உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த ஆண்டிலிருந்து உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் மேலும் பல மாணவர்கள் பயன் அடையும் வாய்ப்பை அரசு ஏற்படுத்தியுள்ளது. இதுவரை 31 விழுக்காடாக இருந்த இட ஒதுக்கீட்டை, அண்மையில் அதாவது 1-2-80 முதல் தமிழக அரசு 50 விழுக்காடு என்ற அளவிற்கு உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

பிற்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஏழை மாணவர்கள் தங்கிப்படிக்க இலவசமாக உண்டி, உறையுள் ஆகிய வசதிகளைப் பெருக்கி இல்லங்களை ஏராளமாக நடத்தி வருகிறது. 1969-70ஆம் ஆண்டில் பிற்பட்டோர் நலத்துறையின் சார்பில் 48 உணவுவிடுதிகள் தான் இருந்தன. அதில் அப்போது தங்கிப் படித்தவர்களின் எண்ணிக்கை 4598 ஆகும். இந்த எண்ணிக்கை நாளடைவில் உயர்ந்து 1977-78-ல் 284 இல்லங்களாக உயர்ந்து. அதில் 19,284 மாணவ, மாணவியர்கள் படிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால் கடந்த 3 ஆண்டுகளில் மாத்திரம் ஏராளமான இல்லங்கள் திறக்கப்பட்டு இன்றைக்கு தமிழ்நாட்டில் 397 இல்லங்கள் உள்ளன. இவ்வில்லங்களில் 24,732 மாணவ மாணவியர்கள் தங்கிக் கல்வி பயின்று வருகிறார்கள். இவற்றில் 50 விடுதிகள் கல்லூரி மாணவ-மாணவியர்களுக்காக நடத்தப்படுகின்றன. இங்கு 4,000 மாணவ மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். இதுகாறும் மாணவ மாணவியர்களுக்கு மாதம் ரூ. 45 ஆக இருந்த உணவுக்கானஉதவித் தொகை ரூ. 60 ஆகவும் கல்லூரி விடுதிகளில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு ரூ. 65 ஆக இருந்ததை ரூ. 80 ஆகவும், சென்னையில் உள்ள கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவமாணவியர்களுக்குமாதம் ரூ. 80 என்று இருந்ததை ரூ. 95 ஆகவும் செலவு செய்ய அரசு இந்த ஆண்டில் ஆணை பிறப்பித்துள்ளது. இதனால், மாணவ மாணவியர்களுக்குப் போதுமான நல்ல உணவு அளிக்க வாய்ப்பாக இருக்குமென நம்புகிறேன்.

அரசு விடுதிகளில் பணியாற்றி வந்த பகுதி நேர சமையற்காரர்கள் இதுவரை ரூ. 55 ரூ.65 என்று மாதச் சம்பளம் பெற்று வந்தார்கள். அவர்கள் எல்லோரையும் அடிப்படை ஊழியர்களாக மாற்றி இலவச உணவோடு தக்க அடிப்படை ஊதியம் வழங்கி அவர்களை முழுநேர அரசு அலுவலர்களாக மாற்றி தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

இத்துறையின் மூலம் 2 மேல் நிலைப் பள்ளிகளும், 8 உயர் நிலைப் பள்ளிகளும், 30 நடு நிலைப் பள்ளிகளும், 235 ஆரம்பப் பள்ளிகளும் ஆக மொத்தம் 275 பள்ளிகள் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட



சமூக மாணவர்களுக்காக நடத்தப்பட்டு வருகின்றன. இங்கு சுமார் 50,000 மாணவ மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். இவர்களுக்கு 10-ம் வகுப்புவரை இலவசமாக எல்லாப் பாடப் புத்தகங்களும், வழங்கப் படுகின்றன. இப்பள்ளிகளில் 1 முதல் 8ம் வகுப்புவரை படிப்பவர்களுக்கு மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகின்றது. மற்றும் 1 முதல் 5ம் வகுப்பு வரை படிப்பவர்களுக்கு மட்டுமே இலவசச் சீருடைகள் இதுகாறும் வழங்கப்பட்டு வந்தன. ஆனால் இந்த ஆண்டில் இருந்து 8-ம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவ மாணவியர்களுக்கும் இலவசச் சீருடைகள் வழங்க அரசு ஆணை பிறப்பித்து இருப்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

பின்தங்கிய மக்களில் முடி திருத்துவோர், மற்றும் சலவைத் தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கு இலவசத் தொழிற் கருவிகள் வழங்கும் திட்டம் பல ஆண்டுகளாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது. எனினும் இத் திட்டம் துவங்கிய நாளிலிருந்து 1977-78 வரை 27,247 தொழிலாளர்களுக்கு மட்டுமே இலவசத் தொழிற்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் கடந்த 3 ஆண்டுகளில் இத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தி 1978-79 முதல் 1980-81 வரை, 23,249 தொழிலாளர்களுக்கு இலவசத் தொழிற்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இச்சாதனை கடந்த 10 ஆண்டுகளில் நிகழ்த்திய சாதனைக்கு சற்றேறத்தாழ சமமாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 3 ஆண்டு களாகத்தான், கல்லுடைப்போருக்கும், இலவசத் தொழிற் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் பயன் பெற்றவர்கள் 600 ஆகும். இதை மேலும் முனைப்புடன் செயல் படுத்த ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பது நீங்கள் அறிந்ததே. சலவைத் தொழிலாளர்களின் நன்மைக்காக நகர ஊராட்சி, மற்றும் மாநகராட்சிகளில் சலவைத் துறைகள், பாதி கடன், பாதி மானியம் என்ற அளவில் கட்டப் பட்டு வருகிறது. சென்ற ஆண்டு வரை 58 இடங்களில் சலவைத் துறைகள் கட்டப்பட்டுள்ளன.

குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மக்களுக்கு பாசனக் கிணறுகள் வெட்ட ரூ. 2,500 வரை மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் இதுவரை 753 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. 1981-82-ம் ஆண்டில் 55கிணறுகள் வெட்டுவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளன.

வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் கடந்த 2 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ் ஒரு வீட்டிற்கு ரூ. 3225வரை மானியமாக வழங்கப்படுகிறது. பயன்பெற்றவர்களின் பங்குத் தொகையாக ரூ. 1075 கட்ட வேண்டும். மொத்தம் ரூ. 4300 செலவில் 'தாட்கோ' மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 1000 வீடுகளுக்கு மேல் இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வருகின்றன.

நடப்பு ஆண்டில் நரிக்குறவர், ஒட்டர், சலவைத் தொழிலாளர், முடிதிருத்துவோர் ஆகிய மிகவும் பின் தங்கிய வீடற்ற மக்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டம் முதன் முதலாக அமல்படுத்தப்படுகிறது. இதற்கு அரசு ரூ. 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ்., மற்றும் அரசு உயர் பதவிகளுக்கான பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் 1971-72-ம் ஆண்டில் இருந்து நடைபெற்று வருகிறது. சென்னையில் இயங்கி வரும் இத்தனிப் பயிற்சி நிலையத்தைப் போன்று ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ்., தேர்வுக்கான பயிற்சியைக் கொடுப்பதற்கு, மதுரை, திருச்சி, கோவை ஆகிய 3 இடங்களில் துணைப் பயிற்சி நிலையங்கள் 1980-81ல் ஆரம்பிக்கப்பட்டன. இங்கு பயின்று தேர்வு பெற்ற மாணவர்கள் சென்னையில் உள்ள பயிற்சிக் கூடத்தில் சேர்க்கப்பட்டு பயிற்சி பெற்று இறுதித் தேர்வுக்கு அனுப்பப்படுகிறார்கள். இதனால், பிற்பட்ட மாணவர்கள் அதிக அளவில் சிறப்புப் பயிற்சிகளைப் பெற இந்த அரசு வாய்ப்பினை ஏற்படுத்தி யுள்ளது கடந்த ஆண்டில் 2 மாணவர்கள் தேர்வு பெற்றுள்ளார்கள் இதுகாறும் இப்பயிற்சி நிலையத்திலிருந்து 14 மாணவர்கள் தேர்வு பெற்று, ஐ. ஏ. எஸ்., ஐ.பி.எஸ். போன்ற உயர்ந்த பதவிகள்

[தொடர்ச்சி 41-ஆம் பக்கம் பார்க்க]



# தன்னிறைவுத் திட்டமும் தமிழகப் பொருளாதாரமும்

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
ப. குழந்தைவேலு

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களின் சிந்தனையில் உதித்த எண்ணற்ற சீரிய திட்டங்களுள் தன்னிறைவுத் திட்டமும் ஒன்றாகும். ஆதவன் எழுவது தொடக்கம் வீழ்வது வரையிலே, உழைப்பில் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கும் கிராம வாழ் மக்களின் வாழ்க்கையில் புத்தொளி என்றும் வீசிக் கொண்டிருக்க, பொன் மனச் செம்மல் அவர்கள் தீட்டித் தந்து, நிறைவேற்றும் திட்டம்தான் தன்னிறைவுத் திட்டம்.

தேவையும் வளர்ச்சியும் என்றென்றும் இணையாத இரயில் பாதைகளாகச் சென்று கொண்டிருந்ததைக் கண்டு, தன்னிறைவு நிலையை எய்த வேண்டுமெனில் இவ்விரண்டும் ஒன்றையொன்று சந்தித்து, தேவைகளுக்கு முற்றுப்புள்ளி இடவேண்டும் என்ற அரிய, சீரிய நோக்கோடு செயல்படும் திட்டமே தன்னிறைவுத் திட்டம்.

கிராம மக்களின் அடிப்படை வசதிகள் அனைத்தையும் பெற்று, தன்னிறைவுடன் திகழவேண்டும்மென்ற எண்ணத்தில் மட்டும் இத்திட்டம் தீட்டப்படவில்லை. அடிப்படை வசதிகளை அளிப்பதன் வாயிலாக, தமிழக கிராமமக்கள் சமுதாய வாழ்விலும், பொருளாதார மேம்பாட்டிலும் ஓர் உயரிய நிலையை அடைய வேண்டுமென்ற பெரும் நோக்கத்தை உள்ளடக்கியே இத்திட்டம் வகுக்கப்பட்டது.

தன்னிறைவுத் திட்டத்திலே, ஒன்பது தலையாய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவையாவன: பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளித்தல், இணைப்புச் சாலைகள், சிறுபாலங்கள் அமைத்தல், பள்ளிக் கட்டடங்கள், ஊரக மருந்தகங்கள், தாய்-சேய் நல நிலையங்கள் நிறுவுதல், ஆதி திராவிட மக்களுக்கு மயானப்பாதைகள் போடுவதுடன், அவர்களுக்கென்று வீட்டு வசதிகளும் செய்து தருதல், சிறு பாசனங்களை மேம்பாடு செய்தல் ஆகியவையாகும்.

இத்திட்டம் மூன்று நிலைகளில் நிறைவேற்றப்படுகிறது. முதல்கட்டத்தில் 69 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மேற்கூறிய ஒன்பது பணிகளும் நிறைவேற்றப் பட்டுவிட்டன. இதற்கென தமிழ்நாடு அரசு ரூ. 4641.83 இலட்சத்திற்குத் திட்டங்கள் தீட்டி, அத்தொகையில் ரூ. 4629.17 இலட்சம் செலவிட்டு 7506.77 கி.மீ. நீள மயானச்சாலைகளும், இணைப்புச்சாலைகளும் போடப்பட்டுள்ளன.

2554 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதிகளும் சிறுபாலங்கள், சிறுபாசன வசதி, ஊரக மருந்தகங்கள், தாய்-சேய் நலநிலையங்கள், பள்ளிக்கட்டடங்கள் ஆகியவற்றில் 5320 பணிகளும் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.

தற்போது இரண்டாவது கட்டமாக 150 வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டம் செயலில் உள்ளது. இதற்கென அரசு ரூ. 7691.71 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இத்தொகையில் 31.11.81 முடிய ரூ. 4433.30 இலட்சம் செலவிட்டு 4197.50 கி.மீ. நீள மயானப் பாதைகளும் சாலைகளும், 5007 பணிகளும் 2637 குடியிருப்புகளுக்குக் குடிநீரும்8215 வீடுகளும் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.

இந்த 150 வட்டாரங்களில் எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் 31.3.82க்குள் முடிவடையும். இறுதிக் கட்டமாக 159 வட்டாரங்களில் தன்னிறைவுத்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக முடிவடையும்போது, தமிழ்நாட்டின் கிராமப்புறங்கள் அனைத்தும் சிறுசிறு நகரங்களாக அனைத்து வசதிகளும் பெற்று பொலிவுடன் திகழும்; இந்திய நாட்டிற்கே தமிழகக் கிராமங்கள் தான் முன்னோடியாக, உதாரணங்களாக அமையும் என்பதில் இஞ்சிற்றும் ஐயப்பாடே இல்லை.

இனி, தன்னிறைவுத் திட்டத்திலே எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் கிராம மக்களின் அன்றாட வாழ்விலே பொருளாதார மேம்பாட்டை எங்ஙனம் ஏற்படச்



செய்திருக்கிறது என்பதனைச் சற்று ஆய்வோம்.

இத்திட்டத்தில் தலையாய இடம் பெறுவது பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதாகும். குடிநீருக்காகப் பல காததூரம் நடக்க வேண்டிய சிரம நிலையை அறவே அகற்றுவது இத்திட்டம். எனவே ,மகளிர் குடிநீர் கொண்டுவர செலவிடும் நேரத்தை இன்னபிற வேலைகளைச் செய்து தம் குடும்ப வருவாயைப் பெருக்கிக் கொள்ள இத்திட்டம் வழிவகுக்கிறது.

அடுத்து, இணைப்புச்சாலைகள். காற்றில் கலைந்த மேகத் திட்டுக்களாகச் சிதறிக் கிடக்கும் கிராமங்களை இணைக்கவும், முக்கியச் சாலைகளிலிருந்து விலகி நிற்கும் கிராமங்களை ஒன்றோடொன்று இணைக்கவும் வழி செய்யும் திட்டமே இது, காலத்தின் தேவைகளும், வாய்ப்புகளும் பெருகிக் கொண்டேயிருக்க, மனிதன் எப்போதும் இயங்கிக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. ஓரிடத்திலிருந்து வேறோர்இடத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. ஒரு கிராமத்தில் விளைந்த பொருள்களை வேறு கிராமத்திற்கு—நகரத்திற்கு எளிதில் எடுத்துச்செல்ல வேளாண்மை வீரர்களுக்கு இச்சாலைகள் தக்க வசதிகளை அளிக்கின்றன. இதனால் நாள்தோறும் பாடுபடும் உழவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் நல்ல பயனளிக்கின்றன. உழைப்பிற்கேற்ற ஊதியம் அவர்களுக்குக் கிடைக்கிறது.

ஆங்காங்கே கட்டப்படும் சிறுபாலங்கள் பல்லாயிரக்கணக்கான பொருள் செலவில் அமைக்கப்படும் சாலைகளை திடீர் வெள்ளங்கள் மற்றும் ஓடைகளிலிருந்து காத்து சாலைகள் நீண்ட நாட்கள் பயன்படும் வகையில்பராமரிக்கின்றன. சாலைகள் சிறந்ததாக அமைந்திருந்தால் தான் பொருளாதாரம் சிறக்க முடியும். எனவே, சிறு பாலங்களும் மறைமுகமாகப் பொருளாதார உயர்விற்குப் பயன்படுகின்றன.

'இறந்த பின்னரும் ஒதுங்கியே வாழவேண்டும்' என்ற கொடுமை காரணமாக, ஒதுங்கியே வாழும் ஆதிதிராவிட மக்களுக்கு இறந்தவர் உடலை இடுகாட்டிற்கு எடுத்துச் செல்வதில் பல இடர்ப்பாடுகள் இருந்தன. இடுகாட்டிற்குச் செல்ல நல்ல பாதை வசதி இல்லாமையே இதற்குக் காரணம். இந்த மோசமான நிலை அகற்றப்பட அமைக்கப்படும் பாதை, பல இடங்களில் பிற இனத்தவர் வாழுகின்ற பகுதிகளை ஒட்டிச் செல்கின்றன. இதனால் சாதி வேற்றுமை ஒழியவும், அதன் வாயிலாக எல்லா இனத்தவர்களுக்கிடையேயும் ஒற்றுமை நிலவி, வேளாண்மை மற்றும் பிற தொழில்கள் வளரவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

சிறு பாசன அமைப்புகளுக்கான மேம்பாடுத்திட்டம் பொருளாதார உயர்விற்கு வழி வகுக்கிறது என்பதனை விளக்கிக் கூறவும் வேண்டுமோ?


ஊரக மருந்தகங்களும், தாய்-சேய் நல நிலையங்களும், பிணி நீக்கி, இன்னபிற பணிகளில் ஊக்கமுடன் ஈடுபட உதவுவதன் வாயிலாகப் பொருளாதாரம் மறைமுகமாக வளர்கிறது.

பள்ளிக்கட்டடங்கள் எதிர்காலக் குடிமக்களின் வாழ்விற்கு அடிக்கல் நாட்டுகின்றன.

தங்குதற்கு வீடின்றித் தவிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டமும் அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கவே அமைக்கப்பட்ட திட்டமாகும்.

தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்படும் போது, தேவைப்படும் மனித உழைப்பின் அளவும் அதற்காக அளிக்கப்படும் ஊதியமும் பெருமளவில் அமைந்துள்ளன. கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டமும், இத்திட்டமும் நிறைவேற்றப் படும்போது உழைக்கும் ஆற்றல் பெற்ற அனைவருக்கும் வேலை வாய்ப்புக் கிட்டியுள்ளது. பல இடங்களில் வேலைக்கு ஆள் இல்லை என்ற நிலைமை ஓரளவு மகிழ்ச்சியையே தருகின்றது.

மொத்தத்தில், தன்னிறைவுத்திட்டம் அடிப்படை வசதிகளில் மட்டுமின்றி பொருளாதார மேம்பாட்டிலும் தன்னிறைவுப் பாதையை வகுத்துள்ளது என்பது காலம் காட்டும் உண்மை.





# தண்ணீர் வழங்கி கண்ணீர் துடைப்போம்!

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்

**எஸ். இராகவானந்தம்**

“நான் சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் மாட மாளிகைகள் கேட்கவில்லை... குடிக்கத் தண்ணீர், நல்ல தண்ணீர்தான் கேட்டார்கள்....விடுதலை பெற்று இத்தனை ஆண்டுகளாகியும், நம் மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கூட இல்லை.....தண்ணீரின்றி கண்ணீர் வடிக்கும் இந்நிலையைக் களைவதுவே இவ்வரசின் முதல் இலட்சியம்'' என புரட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அன்று ஆற்றிய உரை, குடிநீர் வழங்குத் திட்டங்களுக்கான அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள என் உள்ளத்தில் எப்போதும் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

ஆழிசூழ் இவ்வுலகில் மூன்றில் இரண்டு பங்கு நீரால் அமைந்திருக்கிறது எனப் புவி இயல்கள் கூறினும் தண்ணீருக்கு ஏன் தட்டுப்பாடு?

எப்போதாவது வானம் பொய்த்தாலும் தண்ணீருக்கு ஏன் தட்டுப்பாடு? நிலத்தடி நீர் என்னவாயிற்று?

‘தண்ணீர் மாதிரி செலவழிக்காதே’ என எளிமைப் பொருளாகக் கூறப்பட்ட நீர் இப்போது ஏன் தங்கத்திற்கும் மேலான உயர்வைப் பெற்றிருக்கிறது?

இவை போன்ற ஐயப்பாடுகள் பலருக்குத் தோன்றலாம்.

தண்ணீர் கொடுப்பது ஒரு சாதனையா? எனக் கேட்பவர்களும் உண்டு. தண்ணீர் இல்லை எனப் படம்பிடித்துக் காட்டி தன் பணப்பையை நிறைத்துக் கொள்பவர்களும் உண்டு. அத்தனைப்பேர்களுக்கும் நான் பதிலாகக் கூறுவது....

''தண்ணீர் அளிப்பதில் சிரமமே இல்லை. சில குளங்களை வெட்டி, மழைநீரைத் தேக்கி கால்வாய்களை அமைத்து தண்ணீர் வழங்கி விடலாம். இதில் சிரமங்கள் இல்லை...சிக்கல்கள் இல்லை. சிரமங்களும் சிக்கல்களும் எழுவது பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீரை வழங்குவதில் தான். நீர் நிலையிலிருந்து நீர் நிறைக்கப்படும் பானை வரை பயணம் செய்கின்ற நீரை, எவ்விதத்திலும் கெடாமல்-பாதுகாப்பாக எடுத்துச் செல்கின்றவேளையில் தான் செலவு அதிகரிக்கிறது. நீர் பயணம் செல்லும் பாதையாகிய குழாய்களைப் பல்லாண்டு காலம் நீடித்து உழைக்கும் வகையில் அமைக்கும் போதுதான் தண்ணீர் வழங்குவதற்கான செலவு நமக்கு வியப்பை அளிக்கிறது.

நீர் இல்லை எனக் கூறப்படும் இடமோ-தண்ணீர் இல்லை எனப் படம்பிடித்துக் காட்டப்படும் பகுதியோ எத்தகையன என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டின் நிலப்பரப்பு முழுவதும் ஒரே தன்மையானதாக இல்லை. இருக்கவும் முடியாது.

சில குடியிருப்புகள் எவ்வித நீர் ஆதாரமும் இன்றி அமைந்திருக்கின்றன.

சில இடங்களில் நீர் ஆதாரங்கள் இருந்தும் அவை குடிக்கத் தகுதியற்ற உவர் நீராக அமைந்துள்ளது.

மேலும் சில இடங்களில் குடிநீர் ஆதாரங்கள் இருந்தும் ஆண்டு முழுவதும் அவற்றில் நீர் இருப்பதில்லை.

வற்றாத தன்மை உடையதும் குடிநீருக்குப் பயன்படக் கூடியதுமான ஆதாரங்கள் இருந்தும் அவை தனிப்பட்டவர்கள் உடைமையாகவோ அல்லது பாதுகாக்கப்படாமலோ இருக்கும் குடியிருப்புகளும் உண்டு.

வேறு சில இடங்களிலோ குடிநீர் ஆதாரங்கள் இருக்கும். ஆனால் அவை ஊரை விட்டு சில காத தூரங்களுக்கு அப்பால் இருக்கும்.

நீர் வசதி எளிதாகக் கிடைக்கின்ற நன்றாக உள்ள இடங்களில் மட்டுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தைச்செயல்படுத்த வேண்டும் என்று அரசு விரும்பியிருந்தால் ஒரு சில இலட்ச ரூபாய் செலவில்-ஒன்றிரண்டு மாபெரும் திட்டங்களை நிறைவேற்றி-'தண்ணீர் அளித்து விட்டோம்'' என்றுகூறமுடியும். ஆனால் புரட்சித் தலைவரவர்கள் தலைமையிலே அமைந்த இந்த அரசு அத்தகைய விளம்பரத்தைப் பெற விரும்பவில்லை. நீர் ஆதாரங்கள் இருக்கும் இடங்களில் மட்டுமின்றி நீர் ஆதாரமே இல்லாத இடங்களுக்கும் குடிக்கத் தகுதியற்று உவர்நீருள்ள இடங்களுக்கும் நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கொள்கையோடு முனைப்புடன் அரசு செயலாற்றி வருகிறது. இதனால் எழுந்த பிரச்னைகளைப் பட்டியலிட காலமும் காகிதமும் போதா.

சில இடங்களில் கிணறுகள் முழுமையாகத் தோண்டி முடிக்கும் முன்பு அதிகமாக வெளிப்படும் நீர் கிணறு வெட்டும் வேலையைத் தாமதப்படுத்தியிருக்கிறது.

வேறுசில இடங்களிலோ, இரண்டடி ஆழம் தோண்டியதுமே, நிலம் சரிந்து விடும் தன்மை கொண்ட நிலபரப்பு கொண்டதாய் இருக்கும்.

பல இடங்களில் எத்தனை அடி ஆழம் தோண்டினாலும் ஒரு சொட்டு நீரைக் காண்பது கூட அரிது.

இதுபோன்ற இடங்களுக்குவெகுதொலைவிலிருந்து நீரைக் கொண்டு வர வேண்டியுள்ளது.

மேலும் சில இடங்களில், தொடக்கத்தில் நீர் நன்றாக அமைந்து, சில காலங்களுக்குப் பிறகு உவராக மாறும் விந்தையான நீர் நிலைகளும் காணப்படுகின்றன.

நீர் வழங்கலில், அண்மைக் கால அறிவியல் முறைகளைப் பின்பற்றி, குழாய்கள் வழியே குடிநீர் வழங்கினாலும் நீர் வழங்கப்படும் இடங்களில் பல சிக்கல்கள் - இடையூறுகள் ஏற்படுகின்றன.

நீரை இறைக்கும் தொடக்க நிலையிலிருந்து மக்களுக்கு அளிக்கப்படும் இறுதிநிலை வரை, மின் இணைப்புத் தேவைப்படுகிறது.





மேலும், குடிநீரைச் சேதப்படுத்தாமல் — வீணாக்காமல் மக்கள் பயன்படுத்துவதற்காக ஆங்காங்கே கை இறைப்பான்கள் நிறுவப்படு கின்றன. அரசால் நிறுவப்பட்டுள்ள அந்த இறைப்பான்கள் நம் சொத்து என்பதை உண ராத சிலரும் உணர்ந்த பலரும் வேண்டு மென்றே அவற்றை உடைத்து பழுதுபடுத்தி விடுகின்றனர். தண்ணீரை வீணே இறைத்து வீணாக்கி-விளையாடுவது சில சிறுவர்-சிறுமி யர்க்குப்பொழுது போக்கு. அவர்களுக்கு அறி வுரை கூற பெற்றோரும் முன் வருவதில்லை. இவைகளின் விளைவாக நிறுவப்பட்ட கை இறைப்பான்கள் மிகக் குறைந்த கால அள விலே பழுதுபட்டு பயனற்றதாகி விடுகிறது. இத்தகைய உண்மை நிலையை எண்ணாமல் அரசையும், குடிநீர் வாரியத்தையும் குறை கூறுபவர்கள் உண்டு. ''குடிநீர் வாரியமே! என்ன செய்கிறாய் நீ!'' என உடைந்த கை இறைப்பான்களைப் படம்பிடித்து வெளியிடு பவர்கள், அந்த இறைப்பான்கள் உடைய - பழுதடையக்காரணம் என்ன என்பது பற்றி சிந்தித்துச் செயல்பட்டால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்.

குழாய்கள் ( Taps ) வழியாக நீர்வழங் கும் திட்டம் நிறைவேற்றப்பட்ட பல ஊர் களில் நான் கண்ட ஒரு காட்சியை இங்கு மனச்சுமையோடு குறிப்பிட வேண்டியுள்ளது.



நீர் வழங்கு பெருங்குழாயிலிருந்து- கிளைக் குழாய் வழியாக ஆங்காங்கே குடிநீர் வழங்கப்படுகிறது. பல ஊர்களில் இக்குழாய் களைக் கழற்றிச் சென்று விடுகின்றனர். அதன் விளைவாக இரவும் பகலும் நீர் வீணா கக்கொட்டிக் கொண்டிருக்கும். இதன் விளை வாக அப்பகுதியின் குடிநீர் வழங்கல் முற்றி லும் தடைப் பட்டுவிடுகிறது.

எனவே தண்ணீர் வழங்குவது என்பது இமாலய சாதனையாகத் தான் அமைந் துள்ளது. இத்தனை இடர்ப்பாடுகளையும், ஏற்று - எதிர்த்து - சமாளித்து குடிநீர் வழங் கும் திட்டத்தில் அரசு வெற்றி கண்டு வரு வதற்குச் சான்றாகச் சில எடுத்துக்காட்டு களைக் கூற விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின் முதற்கட்ட மாக எடுத்துக் கொள்ளப்பட்ட 69 ஒன்றியங் களில் 2554 குடியிருப்புகளுக்கும், தன்னிறை வுத் திட்டத்தில் இணைக்கப்படாத 740 குடி யிருப்புகளுக்கும் ஆக மொத்தத்தில் 3294 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவு ரூ. 20.33 கோடி.

மேலும் தன்னிறைவுத் திட்டத்தின் இரண் டாவது கட்டமான 150 ஒன்றியங்களிலமைந்த 5922 குடியிருப்புகளில் 3900 குடியிருப்புகளுக் காவது ,31.3.81க்குள் குடிநீர் வழங்க அரசு இவ்வாண்டு முனைப்புடன் செயல்பட்டு வரு கிறது. இவை மட்டுமின்றி, இவ்வாண்டில் வறட்சி நிவாரணத் திட்டப் பணிகளின் கீழ் ரூ. 8 கோடி செலவிட்டு, 7358 ஆழ்துளைக் கிணறுகளைக்குடிநீர் வாரியம் அமைத்துள்ளது. ஊரகப் பணித் திட்டம் வாயிலாகவும் குடி தண்ணீர் அவசரத் தேவைகளைத் தீர்க்கும் பணித் திட்டத்தின் கீழும் நீர் வழங்கும் பணி நிறைவேறி வருகிறது.

நகரக் குடிநீர்த் திட்டங்களைப் பொறுத் தவரையில், ரூ. 38.78 கோடி செலவில் அரசு அனுமதி வழங்கிய 89 நகரக் குடிநீர் வழங்கும் திட்டங்களில், இதுவரை ரூ. 55.51 கோடி செலவிடப்பட்டு, 77 நகரக் குடிநீர்த் திட்டங் கள் முடிவடைந்துள்ளன. ரூ. 17.93 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்ட 7 வடிகால் திட்டங்களில் ரூ. 16.44 கோடி செலவிடப் பட்டு ஐந்து வடிகால் திட்டங்கள் நிறைவேற் றப்பட்டுள்ளன.

நடைபெற்ற - நடைபெற்றுக் கொண்டி ருக்கும் திட்டங்களோடு - நடைபெறவிருக்கும் திட்டங்கள் பற்றியும் சிறிது கூற விரும்பு கிறேன்.

கோவை, மதுரை, சேலம், மற்றும் 75 நகரங்களுக்கு உலக வங்கியின் உதவியோடு நிறைவேற விருக்கும் திட்டம் இங்கே குறிப் பிட்டு கூறத்தக்கது. ரூ. 100- கோடி மதிப்பி லான இத்திட்டத்திற்கான துணைத் திட்டங் கள் வாரியத்தின் ஆய்வில் உள்ளன. இத்திட் டங்கள் மீது உலக வங்கி அலுவலர்களின் முதற்கட்ட ஆய்வு முடிந்துள்ளது. உலக வங்கி யின் இரண்டாவது கட்ட ஆய்வு 1982ஆம் ஆண்டுப் பிப்ரவரித்திங்களில் எடுத்துக் கொள் ளப்பட்டு பின்னர் 1982ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் உலக வங்கியின் நிதி உதவி கோரப் படும். இத்திட்டம் நிறைவேறியதும் குடி நீரைப் பொறுத்தவரையில், தமிழகத்தின் நகரங்கள் தன்னிறைவு பெறும் என்பதில் ஐய மில்லை.

மொத்தத்தில் தமிழக அரசு பாதுகாக்கப் பட்ட குடிதண்ணீர் வழங்குவதில் ஓர் இமா லய சாதனையே செய்துள்ளது என்று சொன் னால் அது மிகையாகாது. என்றாலும் புரட்சித் தலைவர் அரசு மக்களின் இந்த அடிப்படைத் தேவையைக் குறிப்பிடப்பட்டுள்ள கால கட் டத்திற்குள் நிறைவேற்றிட ஆவன வெல்லாம் செய்து வருகிறது. வெற்றி நிச்சயம்.



# தன்னிறைவு பெறும் தமிழகக்கிராமங்கள்


**திரு எச். பி. என். ஷெட்டி, இ.ஆ.ப.**

ஆணையாளர் மற்றும்
அரசுச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறை


ஓரிரு மனிதர்கள் அல்லது ஒன்றிரண்டு குடும்பங்கள் பரந்து விரிந்த உலகிலே ஏதோ ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து, தம் தேவைகளுக்கும் வசதிகளுக்கும் ஏற்பச் சில வீடுகளை அல்லது குடிசைகளைஅமைத்துக்கொண்டு வாழ முற்படும்போது அங்கே ஒரு சிறு கிராமம் உருவாகி விடுகிறது. இவ்வகையிலேதான் நம் நாடெங்கும் கிராமங்கள் உருவாகி 'இந்தியா கிராமங்களில்தான் வாழ்கிறது' என்று கூற வைத்துள்ளது.

கிராமங்கள் நாள்தோறும் வளர்ந்து கொண்டே செல்லும்போது, நாகரிகமும் தேவைகளும் கூடவே அதிகரிக்கும்போது நேற்றிருந்த தேவை இன்று அவசியமாகி, தேவைகள் பெருகிய வண்ணமுள்ளன.

இம்முறையிலே வளர்ச்சியின் பெரும்பங்கை நகரங்கள் எடுத்துக் கொண்டு வாழ்க்கை வசதிகளை நகர்ப்புற மக்களே அனுபவிக்கத் தொடங்கினர். கிராமங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டன.

நகர மக்களுக்கும் சேர்த்து உணவு, காய்கறிகள், பழங்கள் போன்ற அடிப்படைத் தேவைகளை அயராது அளித்து வரும் கிராம வாசிகளுக்கு அவர்களுடைய அன்றாட வாழ்க்கையிலே அடிப்படை வசதிகள் கிடைக்கவில்லை.

தமிழ்நாடு அரசு இப் பிரச்னையை அணுகி, ஊராட்சி ஒன்றியங்கள் வாயிலாகப் பற்பல திட்டங்களைத் தீட்டி வசதிகளைப் பெருக்கிவந்தது. ஆனால் அவை ஒருகாலக் கெடுவிற்குள் நன்மைகள் பலவற்றை ஒருங்கிணைத்துத் தருவதாக அமையவில்லை.

ஆனால் தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்கள் உருவாக்கிய தன்னிறைவுத் திட்டம் மூன்று ஆண்டுகளுக்குள்ளாகத் தமிழ் நாட்டிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் அடிப்படை வசதிகளைப் பெற்றுத் தர வேண்டு மென்ற இலக்கினை நோக்கித் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரும், கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை ஆங்காங்கே எடுத்துச் சென்று சிறந்த விலையில் விற்றுப் பயனடைய இணைப்புச் சாலைகளும் உழவர்களுக்கு உதவக் கூடிய வகையில் சிறிய நீர்ப்பாசன வசதிகளுடன் சிறுபாலங்களும் கிராமத்திலுள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உடனடியாக வைத்திய வசதி கிடைக்க மருந்தகங்களும், வருங்காலச் சந்ததியினர் சிறப்பான கல்வியுடன் நல்வாழ்வும் பெற பள்ளிக் கட்டடங்களுடன் தாய் சேய் நல நிலையங்களும் ஆங்காங்கே அமைக்கப்படுகின்றன. இவற்றினால் சமுதாயத்திலுள்ள அனைவருக்கும் நன்மைகள் பொதுவாகக் கிடைக்கும் என்பது ஒருபுறமிருக்க, ஆதி — திராவிட மக்களுக்கென்றே மயானங்களுக்குச் செல்ல பாதைகளும், அவர்களுக்கென்றே வீடுகளும் கட்டித் தரப்படுகின்றன. மேலும் மகளிர்க்கென்று கழிவறைகளும் ஊராட்சிகளுக்கெனத் தனியே கட்டடங்களும் கட்டப்படுகின்றன.

இத்தகைய பணிகள் எல்லாம் தற்போது 69 ஊராட்சி ஒன்றியங்களில் முடிவுற்றுவிட்டன. அங்கெல்லாம் தன்னிறைவுத் திட்டத்தின் பயனை மக்கள் நுகரத் தொடங்கி விட்டனர். அடுத்த கட்டமாக 150 ஒன்றியங்களில் இத்திட்டம் வெகுவேகமாகச் செயல்படத் தொடங்கியுள்ளது. இறுதியாக மூன்றாம் கட்டத்தில் 159 வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டம் செயலாகும்.

இன்னும் சில காலங்களிலே தமிழகக் கிராமங்கள் அனைத்தும் அடிப்படை வசதிகளைப் பெற்று மேலும் பொலிவுடன் விளங்கும். கிராம மக்கள் வசதிகளை நாடி நகரங்களுக்குச்செல்ல முனைவது குறித்து அவர்கள் சிந்திக்கத் தொடங்கி, நகரங்களுக்குக் கிராமங்கள் குறைவில்லை எனற முடிவிற்கு வந்து, கிராமங்களிலேயே தங்க முடிவு செய்வார்கள். அத்துணை வசதிகள் அங்கே ஏற்பட்ட வண்ணமுள்ளன.

ஊரக வளர்ச்சித் திட்டங்களிலே தமிழகம் அடைந்துள்ள வெற்றிகள் இன்று ஒவ்வொருவர் மனத்திலும் ஆழப் பதிந்திருக்கின்றன. இம்மாநிலத்தில் உள்ளவர்கள் மட்டுமின்றி, வெளிமாநிலத்தவரையும் நம்முடைய தன்னிறைவுத் திட்டங்கள் கவர்ந்து, நம் மாநிலத்திற்கு வருகை புரிய வைத்துள்ளன.

உழைப்பிற்கு ஊதியமாக அரிசி வழங்கப்பட்டு, கிராமங்களில் வேலை வாய்ப்பின்மையை ஒழிக்க மத்திய அரசின் உதவி யோடு நிறைவேற்றப்பட்ட ''தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்' நமக்கு மன நிறைவையும் பிறகு வியப்பையும் அளித்திருக்கின்றன.


கடந்த ஆண்டு மத்திய அரசு அளித்த உதவி முழுவதையும் பெற்று, அவற்றைச் சிறந்தமுறையில் செலவிட்டு, மத்திய அரசிற்குத் தக்க கணக்குகளைக் காட்டிய ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழகம்தான். எனவே அடுத்த ஆண்டு இந்தியாவிலுள்ள மாநிலங்களிலேயே தமிழ்நாட்டிற்கு மட்டுமே இத்திட்டத்தில் உதவி செய்யப்போவதாக மத்திய அரசு தெரிவித்துள்ள தென்று 12-12-81 நாளிட்ட ''Financial Express'' பாராட்டும் போது ஏற்படும் மன நிறைவு, கிராம மக்களுக்குச் சில வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தோம் என்ற மனநிறைவேயாகும்.

# கிராமங்களில் குடிநீர்!

திரு. வி. சங்கரசுப்பையன் ஐ.ஏ.எஸ்.
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
சென்னை

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் மிக முக்கிய அங்கம் வகிக்கின்ற குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியது அரசின் பொறுப்பு என்பதோடு, மனிதனின் அடிப்படைச் சுகாதாரத்தைப் பேணுகின்ற பொறுப்பும் அரசுக்கு உள்ளது. ஆகவே, பொது மக்களின் குடிநீர்த் தேவையை அதிலும் பாதுகாக்கப்பட்ட நிலையில் தேவையான அளவிற்கு வழங்க வேண்டியது அரசின் மிக முக்கிய பொறுப்பாகும்.

நமது தமிழகத்தைப் பொறுத்த வரையில், நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, நகர்ப்புறங்களுக்கு மட்டுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தகைய திட்டங்களைக் கிராம மக்களும் நுகர்ந்திட வேண்டும் என்ற அடிப்படையிலும், திட்டங்களை விரைவு படுத்திடும் வகையிலும், தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் துவக்கப்பட்டு, சாதனை மலிந்த பத்தாண்டுகளைத் தாண்டி பணி தொடர்ந்து கொண்டிருக்கின்றது.



''என்று இந்தியாவிலுள்ள கிராமங்கள் அனைத்தும் அடிப்படை வசதிகளைப் பெற்ற 'கிராம ராஜ்யங்கள்' உருவாகின்றனவோ அன்றுதான் நாடு முழுமையான சுதந்திரத்தை எய்துவதாகக் கருத முடியும்'' என்றார் அண்ணல் காந்தியடிகள். அதே போன்று 'தீட்டப்படுகின்ற திட்டங்கள் அனைத்தும் கிராம மக்களின் அடிப்படை நலன்களைத் தொடுகின்ற வகையில் தீட்டப்பட்டாக வேண்டும்'' என்றார் பேரறிஞர் அண்ணா. ஆக, நகர்ப்புற மக்களுக்குக் கிடைப்பதைப் போன்ற அடிப்படை வசதிகள் கிராம மக்களுக்கும் கிடைத்திடச் செய்திட வேண்டும் என்ற மகத்தான குறிக்கோளின் அடிப்படையில் தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 'தன்னிறைவுத் திட்டம்' என்ற தன்னிகரற்ற திட்டத்தை அறிவித்தார்கள்.

'தன்னிறைவுத் திட்டம் நிறைவு' பெறத் தண்ணீருக்கே முதலிடம் என்ற அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போர்க்காலத் தீவிரத்தோடு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. 1980-81-ல் தன்னிறைவுத் திட்டத்தில் முதற்கட்டமாகத் தேர்வு செய்யப்பட்ட 69 ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கியுள்ள 2,208 குடியிருப்புக்களோடு, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் நீர் ஆதாரமே இல்லாதவைகளும் (வகை 1) நீர் ஆதாரம் இருந்தும் பருகுவதற்கு ஏற்ற நிலையில் இல்லாதவைகளுமான (வகை 11) 900 குடியிருப்புகளுக்கும் ஆக மொத்தம் 3108 குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடத் திட்டமிடப்பட்டு, அக்டோபர் '81 முடிய ரூ. 18.03 கோடி ரூபாய் செலவில் 2,509 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 407 குடியிருப்புகளுக்கு 1982 ஜனவரித் திங்களுக்குள் குடிநீர்த் திட்டங்களை நிறைவு செய்திடும் வகையில் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மீதமுள்ள 192 திட்டங்களில், நீலகிரி மாவட்டத்தில் பருவ நிலை, கடினமான நில அமைப்பு மற்றும் குடியிருப்புக்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பரவி இருக்கின்ற காரணத்தாலும் 117 திட்டங்கள் நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 5 குடியிருப்புகள் 10 குடியிருப்புகள் என்று வகைப்படுத்தி ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டங்களாக நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளதாலும், அதே போல் செங்கை மாவட்டத்தில் திருப்பெரும்புதூர் ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டத்தில் 6 குடியிருப்புகள் சேர்க்கப்பட்டு நிறைவேற்றப்பட இருப்பதாலும்,மேலும் 11 இடங்களில் திட்டங்களை நிறைவேற்றப் பொது மக்களின் எதிர்ப்பு காரணமாகவும் திட்டங்களை விரைவு படுத்துவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டத்தில் 2-வது கட்டமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள 150 ஊராட்சி ஒன்றியங்களில் அடங்கியுள்ள 5,694 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட திட்டங்கள் தீட்டப்பட்டு அக்டோபர் '81 வரை 2,227 குடியிருப்புகளுக்கு ரூ. 9.07 கோடி செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுவிட்டது.

மேலும், நடப்பு நிதியாண்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 12 மாவட்டங்களில் 6,708 இடங்களில் ரூ. 12.02 கோடி செலவில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து வறட்சி நீங்கிட வழி வகுத்து அப்பகுதி மக்களின் குடிநீர்த் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன என்பது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

எனவே, நம் தமிழக அரசைப் பொறுத்தவரையில் 'குடிக்க நீர் இல்லை என்ற நிலையை இல்லாமல் செய்திட வேண்டும்' என்ற மகத்தான குறிக்கோளோடு திட்டங்களை நிறைவேற்றிடப் பிறப்பித்திடும் ஆணைகளுக்கேற்ப வாரியம் மிக முனைப்போடு பணிகளை நிறைவேற்றி வருகிறது. எனினும், மேலே குறிப்பிட்டுள்ளவாறு நீர் ஆதாரமே இல்லாத கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கிட அருகிலுள்ள நீர் ஆதாரம் உள்ள இடங்களை அணுகும் போது, பொதுமக்கள் தடுக்கக் கூடிய நிலை மிக வருந்தத்தக்க ஒன்றாகும். சகோதர மக்களின் குடிநீர்த் தேவைகளைப் புறக்கணிப்பதில் சிறிதளவும் நியாயம் இருக்கின்றதா? என்பதைஎண்ணி வாரியம் தீட்டும் திட்டங்களுக்குப் பயனடையும் பொதுமக்கள் அரசுக்கும் வாரியத்திற்கும் முழு ஒத்துழைப்புத் தருவது அவர்களது கடமை என்பதை உணருவார்கள் - ஒத்துழைப்பார்கள் என்று நம்புவோமாக!



அந்த ஆண்டில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்ற தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

தன்னிறைவுத் திட்டத்தில் 1980 81ல் எடுத்துக் கொள்ளப்பட்ட முதற்கட்ட பணிகளும் முடிக்கப் பட்ட பணிகளும்.

இம்மாநிலத்தில் தன்னிறைவுத் திட்டம் முதற்கட்டமாக 1980-81ல் 69 ஊராட்சி ஒன்றியங் களில் செயல்படுத்தப்பட்டது.

# நிகரற்ற திட்டம்!

ஊர்ப்புறங்களில் வாழும் மக் களின் முக்கிய அடிப்படைத் தேவைகளான நல்ல சாலை வசதிகள், ஆதிதிராவிடர்களின் ம்யானத்திற்கானபாதைவசதிகள் சிறு பாலங்கள், பள்ளிக்கட்ட டங்கள், தாய், சேய் நலவிடுதிகள் ஊரக மருந்தகங்கள் மற்றும் சிறு பாசன மேம்பாடுகள் ஆகிய அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் நிறைவேற்றி ஊர்ப்புறங்கள் எங்கும் இன்றி யமையாதன என்றும் நிலையாக மக்களுக்குப் பயன்படும் வகை யில் சமுதாயச் சொத்துக்களை உருவாக்கித்தர வேண்டும் என் றும் சீரிய நோக்கத்துடன்மாண்பு மிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட தன்னிகரில்லாத் திட்டம் தான் இத் தன்னிறைவுத் திட்டம்.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 376 ஊராட்சி ஒன்றியங்களிலும் மூன்று கட்டங்களில் இத்தன்னி றைவுத் திட்டத்தை வெற்றிகர மாக நிறைவேற்றித் தருவதின் மூலம் அண்ணல் காந்தி அடிகள் கனவு கண்ட கிராம இராச்சி யத்தை உருவாக்கித் தர முடியும் என்கிற திடநம்பிக்கையுடன் நமது மாண்புமிகு முதலமைச் சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்தி முனைப்போடு செய லாற்றி வருகிறார்.

மாநில அளவில் வேறு எந்த மாநில அரசும் மேற்கொள்ளாத இப்புதிய திட்டம் தமிழகத்தில் சிறப்புடன் செயல்பட்டு வரு கிறது. இத்திட்டத்தைத் தீட்டி அதை நன்கு செயல்படுத்தவேண் டும் என்ற அக்கறையுடன்மாண்பு மிகு முதல் அமைச்சர் அவர்களே முன்னின்று இதனை நடத்துவ தால் அனைத்துத்துறை அதி காரிகளும், அலுவலர்களும் பெரி தும் இத்திட்டத்தில் ஈடுபாடு கொண்டு, அல்லும் பகலும் பாடு பட்டு மிகக் குறுகிய காலத்தில் பல குறிப்பிடத்தக்க முன்னேற் றங்களை ஏற்படுத்தி ஒவ்வொரு திட்டத்தின் கீழும் பல சமுதாய சொத்துக்களை உருவாக்கி வரு கின்றனர்.

இத்தன்னிறைவுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பின்தங்கிய மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், வேலை வாய்ப்புத் திட்டங்களை பெருக்கு வதும் ஆகும். மற்றும் ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மக்களு டைய முக்கிய தேவை என்ன என்று அறிந்து அதற்கானசிறப்புத் திட்டங்களை உருவாக்கி செயல் படுத்தி பற்பல சமுதாய சொத்து களை உருவாக்குவதாகும். இத் திட்டங்களை அரசு நிதி ஒதுக் கீட்டின் கீழ் செயலாக்கும்போது, சிறப்புத் திட்டங்களைப் பயன் படுத்தி அத்தகைய திட்டங்கள்

**கே. எஸ். லோகவிநாயகம்,**
**தலைமைப் பொறியாளர்,**
**நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறை**

இரண்டாவது கட்டமாக 1981-82-ல் 150 ஊராட்சி ஒன்றியங் களில் செயல்படுத்தப்பட்டு வரு கிறது. மீதமுள்ள 157 ஊராட்சி ஒன்றியங்களிலும் மூன்றாவது கட்டமாக 1982-83ஆம் ஆண்டு நிறைவேற்றப்படும்.

இத்திட்டத்தின்கீழ் நெடுஞ் சாலை துறையினரால் கீழ்கண்ட பணிகள் செயலாக்கப்படுகின் றன.

1. இணைப்புச் சாலைகள்
2. ஆதிதிராவிட மக்களின் மயானங்களுக்குப் பாதை அமைத்தல்
3. சிறுபாலங்கள்
4. பள்ளிக்கட்டடங்கள்

5. சிறுபாசன வசதி மேம்பாடு

6. தாய்சேய்நல விடுதி கட்டடங்கள்.

7. ஊரக மருந்தக கட்டங்கள்..

மீதமுள்ள 28 பணிகளும் 23.6 கி.மீ. நீள சாலை வேலையும் கி.மீ. நீளத்திற்கு ஆதிதிராவிட குடியிருப்பிலிருந்து மயானத்திற்கான பாதைகள் 1023 சிறுபாசன திட்டங்கள் 950 பள்ளி கட்டடங்கள், 3044 சிறுபாலங்கள், 237 தாய்சேய்நல விடுதிக் கட்டடங்கள் மற்றும் 82 ஊரக மருந்தகங்கள் ஆகியவை மொத்தம் ரூ. 2420.79 இலட்சம் செலவில் 69 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள

82ம் ஆண்டு 150 ஊராட்சி ஒன்றியங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள இரண்டாவது கட்டப் பணிகள்:

இரண்டாவது கட்டமாக1981 82ம் ஆண்டு இத்தன்னிறைவுத்

## முதற்கட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளும் முடிக்கப்பட்ட பணிகளும்


| பணிகளின் விவரம் | இலக்கு | | திட்ட ஒதுக்கீடு லட்சத்தில் | சாதனை இலக்கு | | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | நீளம் கி.மீ. | | எண்ணிக்கை | நீளம் கி.மீ. | செலவினம் லட்சத்தில் |
| இணைப்புச் சாலைகள் | | 6565,06 | 1272.69 | | 6542.0 | 1220.52 |
| சிறுபாலங்கள் ... | 3044 | | 334.55 | 3030 | | 342.14 |
| ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்து மயானத்திற்குச் சாலை ... | | 927.71 | 84.57 | | 927.71 | 83.52 |
| சிறுபாசன வசதி மேம்பாடு. | 1023 | | 68.98 | 1023 | | 68.88 |
| பள்ளிக் கட்டடங்கள் | 950 | | 493.93 | 937 | | 487.92 |
| தாய்சேய் நலவிடுதிகள் ... | 237 | | 122.36 | 236 | | 118.18 |
| ஊரக மருந்தகங்கள் | 82 | | 43.71 | 82 | | 48.22 |
| மொத்தம் ... | 5336 | 7492.77 | 2420.79 | 5308 | 7469.71 | 2369.38 |

டிசம்பர் திங்களுக்குள் முடிக்கப்பட்டுவிடும். இவ்வாறு முதற்கட்ட தன்னிறைவுத் திட்டத்தின் பயனாக 6565-06 கி.மீ. நீள இணைப்புச் சாலைகள் 927.71 அனைத்து ஊர்ப்புறங்களின் சமுதாய சொத்துக்களாக உருவெடுத்துள்ளன.

தன்னிறைவுத் திட்டத்தில் 1981- திட்டத்தை நிறைவேற்ற 150 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இரண்டாவது கட்டத்தில் செயலாக்கப்பட இருக்கும் பணிகள்

| பணிகளின் விவரம் | இலக்கு | | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் |
|---|---|---|---|
| | எண்ணிக்கை | நீளம் கி.மீ. | |
| இணைப்புச் சாலைகள் ... | 8960 | 11684.55 | 2680.49 |
| ஆதிதிராவிட குடியிருப்பிலிருந்து மயானத்திற்குப் பாதை ... | 1748 | 1269.95 | 53.22 |
| சிறுபாலங்கள் ... | 10539 | | 1451.65 |
| பள்ளிக்கட்டடங்கள் ... | 1808 | | 908.23 |
| சிறுபாசன வசதி மேம்பாடு ... | 1250 | | 59.31 |
| தாய்சேய் நல விடுதி ... | 499 | | 265.42 |
| ஊரக மருந்தகங்கள் ... | 169 | | 109.50 |
| மொத்தம் ... | 24973 | 12954.50 | 5527.82 |



இரண்டாவது கட்டத் தன்னிறைவுத் திட்டம் முடிவுறும்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 150 ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள அனைத்து ஊர்ப்புறங்களின் இன்றியமையாத சமுதாய உடமைகளாக 11684.55 கி. மீ. நீளஇணைப்புச் சாலைகள், 1269.95 கி.மீ. நீள ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கான மயான பாதைகள், 10539 சிறுபாலங்கள், 1808 பள்ளிகட்டடங்கள் 1250 சிறுபாசனந் திட்டங்கள் 499 தாய்சேய்நல விடுதிக் கட்டடங்கள் மற்றும் 169 ஊரக மருந்தகக் கட்டடங்கள் அனைத்தும் ரூ. 5527.82 இலட்ச மதிப்பீட்டில் உருவாகி வருகின்றது. இவ்விரண்டாவது கட்டத் தன்னிறைவுத் திட்டப் பணி போர்க்கால அடிப்படையில் முனைப்போடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1982-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் தேதிக்குள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது

இதே முனைப்போடு எஞ்சிய 157 ஊராட்சி ஒன்றியங்களிலும் மூன்றாவது கட்டமாக 1982-83ம் ஆண்டில் ஒவ்வொருஊராட்சி ஒன்றியத்திலும் ரூ 45 இலட்சத்திற்குக் குறையாத மதிப்பீட்டில் மொத்தம் 7965 இலட்சம் மதிப்பீட்டில் தேவைக்கேற்ப திட்டங்களை அமைத்துச் சீரிய முறையில் செயலாற்ற 1982-ம்ஆண்டு சனவரித் திங்கள் முதல் மூன்று மாதங்களில் இம்மூன்றாவது கட்டத் தன்னிறைவுத் திட்டப் பணிகள் துவங்குவதற்கு முன்னால் பணியினை நிர்ணயம் செய்யவும் பின்பு அவைகளுக்கான திட்டங்களையும், மதிப்பீடுகளையும் தயாரிக்கவும் மற்றும் தொடர்புடைய பணிகளைக் கவனிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கிராம முன்னேற்றத்தில் தன்னிறைவுத் திட்டம் ஒரு புதிய வரலாற்றைப் படைத்து வருகிறது. மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அளிப்பதில் புதிய அணுகுமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. காலவரையறையுடன் நிர்ணயிக்கப்பட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதால் சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவு மக்களுக்கும் உரிய காலத்தில் பயனளிக்கும் வகையில் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தை வழங்கி இந்த இனிய தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெறும் பலன்கள் பலப்பல. மூன்றாவது கட்ட தன்னிறைவுத் திட்டப் பணி முடிவுற்றதும் நமது தமிழ் நாட்டிலுள்ள அனைத்துக்கிராமப் புறங்களிலும்அடிப்படைவசதிகள் அனைத்தும் பெற்றுப் புத்துணர்ச்சியும், புதுப்பொலிவும், புதுநம்பிக்கையும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

''உற்சாகத்துடனும் உறுதியுடனும் உழைப்போம் மக்களுக்குப் பயன்பெறும் பல சமுதாய உடமைகளைப் படைப்போம்''.

**கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்**

நதி வழி நாகரிகம் நாம்அறிந்த வர்லாறு :
வேறெந்த வழிமுறையும் மனிதன் காணாத காலத்தில் நதிகள்தாம் இயற்கை தந்த எழில் வழித் தடமாக விளங்கின. நாகரிகத்தின் அடிப்படை போக்குவரத்து, என்பது வரலாறு கூறும் உண்மை. நாகரிகம், அதன் மறுபெயர் வளர்ச்சி. எனவே வளர்ச்சியைக் கொணர விரும்பும் ஒவ்வொருவரும் முதற்கண் விழைவது சீரான சாலை வழிகளேயாகும்.

விடுதலை கண்ட பாரதம் சாலை அபிவிருத்தியில் ஒரு புதிய வேகத்தைக் காட்டியது. வணிக அடிப்படை மட்டுமே இன்றி, வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளையும் கருத்தில் கொண்டு, சாலைகள் அமைப்பதைத் திட்ட வல்லுநர்களும் அரசும் தங்கள் கடமையென எண்ணத் தொடங்கினர். அவ்வெண்ணத்தின் உயர் வடிவமே இன்று நாம் காணும் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டமாகும். வேகமாகச் செல்லும் களவகை வண்டிகளின் எண்ணிக்கையையும், திட்டத்திற்கான திருப்பி எடுக்கும் கால அளவையும் கணக்கிட்டுப் பார்த்தால் நகரங்களை இணைக்கும் பல தரச் சாலைகளின் பராமரிப்புக்கும் மேம்பாட்டுக்கும் பகிர்ந்தளிக்கவே போதாதநிதிநிலைமை நம்முடையதாகும். இருப்பினும் குறிப்பிடத்தக்க பங்கு நிதியைக் குறைந்த அளவே போக்குவரத்துள்ள (வணிகக் கண்ணோட்டத்தில்) கிராமச் சாலைகள் மேம்பாட்டுக்கு ஒதுக்கிக் காலவரையறையுடன் கூடிய திட்டம்தீட்டி செயல்படுவது, கிராம மக்களின் எல்லா வகை முன்னேற்றத்திலும் அரசு கொண்டுள்ள நல்

லெண்ணத்தைப் பிரதிபலிக்கிறது

பரந்து விரிந்து கிடக்கும் இப் பாரத நாட்டில், பல்வேறு துறைகளில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் பரப்பளவு ஒரு இலட்சத்து முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட சதுர கிலோ மீட்டர்களாகும். ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்றாம் ஆண்டுக் கணக்கெடுப்பின் படி இம்மாநிலத்தில் மக்கட் தொகை நான்கு கோடியே பன்னிரண்டு இலட்சமாகும். எடுத்து முடிந்த எண்பத்தொன்று கணக்கீட்டின்படி மக்கட் தொகை நான்கு கோடிய்ப எண்பதுஇலட்சமாக உயர்ந்துள்ளது. இதில் நான்கில் மூன்றிற்கு மேற்பட்ட மக்கள் கிராமப்புறங்களிலேயே வசிக்கிறார்கள்.

குன்றிவரும் வேலை வாய்ப்புக்கள் காரணமாகவும் சிறு, பெரு நகரங்களில் பெருகிக் காணப்படுகின்ற பல்வேறு சமூக பொருளாதார வாய்ப்புக்கள் காரணமாகவும், கிராம மக்களின் நாட்டம் தொடர்ந்து நகரங்களின் மீது இருந்து வருகின்றது. இந்நிலையினைக் கட்டுப்படுத்திச் சிறு நகரங்களில் கிடைக்கின்ற வாய்ப்புக்குச் சற்று இணையான வகையிலாவது கிராமங்களை உயர்த்தும் பொருட்டு அரசு பலவகையான திட்டங்களைக் கிராமங்களில் செயல்படுத்தி வருகிறது விவசாயம், கல்வி, தொழில், சாலைப் போக்குவரத்து அத்தகைய திட்டங்களில் முதன்மையான இடம் வகிக்கின்றன.

தமிழகத்தில் உள்ள சாலை வசதிகள் அனைத்திந்தியசராசரியோடு ஒப்பிட்டு கீழ்க்காணும் விவரங்கள் தரப்படுகின்றன

**பரப்பையும் மக்கட் தொகையும் பொறுத்துக் கணக்கிடப்பட்ட சாலைகளின் சராசரி செரிவு.**

| | 100 சதுர கி.மீ. பரப்பில் சாலை நீளம் (கி.மீ.) | ஒரு லட்சம் மக்கட் தொகைக்கு சாலைகளின் நீளம் (கி.மீ.) |
|---|---|---|
| தமிழ்நாடு | 84.69 | 264.64 |
| அனைந்திந்தியா | 41.83 | 250.88 |

**தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பலதரப்பட்ட சாலைகளின் நீல விவரங்கள்**

| சாலையின் தரப்பாகுபாடு | | நீளம் கி.மீ. |
|---|---|---|
| தேசிய நெடுஞ்சாலைகள் | ... | 1865 |
| மாநில நெடுஞ்சாலைகள் | ... | 1814 |
| மாவட்டப் பெருஞ்சாலைகள் | ... | 14028 |
| மாவட்டப் பிறசாலைகள் | ... | 17714 |
| ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் | ... | 57920 |

**போக்குவரத்து வசதிகள் துறை:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறையில் ஏற்படும் முன்னேற்றங்கள் மற்ற துறைகளில் முன்னேற்றம் காண பெரிதும் உதவியாக, ஏன், அடிப்படையாக அமைந்துள்ளன என்பதை உணர்ந்து, நெடுஞ்சாலைஅமைப்பையும் மற்றும் கிராமப்பணி அமைப்பையும், ஒரே அமைச்சரின் கீழ் ஒருங்கிணைத்து செயலாற்றி வருவது பெரும்பாராட்டு தலுக்குரியதாகும். ஏனைய மாநிலங்களுக்கு இது ஒரு முன்னோடிச் செயலாக விளங்குகிறது

**ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒனறிய சாலைகள்:**

1961-ஆம் ஆண்டில் ஊராட்சி முறை திருத்தி அமைக்கப்பட்ட பிறகு சுமார் 40,000 கி.மீ. நீள மாவட்ட வரிய சாலைகள் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன. அவற்றில் 17,000 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ஊராட்சி ஒன்றியங்களிடமும், 23,000 கி.மீ. நீளமுள்ளசாலைகள் ஊராட்சிகளிடமும் ஒப்படைக்கப்பட்டன.

தற்சமயம் தமிழகத்தில் 376 ஊராட்சி ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றிய சாலைகள், ஊராட்சி ஒன்றியங்களால் உள்ளூர் சாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் பராமரிக்கப்படுகின்றன. இந்த நிதி ஒதுக்கீடு நில அமைப்பையும் மக்கட் தொகையையும் பொறுத்து செய்யப்படுகிறது.

**கிராமப் பணித் திட்டம்:**

நிதி பற்றாக்குறையால் ஊராட்சிகளால் சாலைகளை நன்கு பராமரிக்க இயலவில்லை. கிராமப் பணிகள் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்கள் புதிய சாலைகள் அமைப்புதுடன் தற்போதுள்ள சாலைகளையும் மேம்பாடு செய்கின்றன. இதற்கான நிதி உதவி அரசிடமிருந்தும், ஊராட்சி மன்றங்களிடமிருந்தும் மற்றும் பொது மக்களிடமிருந்தும் பெறப்படுகிறது.

**பிறசாலைத் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மேம்பாடு செய்யப்படுகின்றன; பாலங்கள் கட்டப்படுகின்றன. இத்திட்டத்தின்

கீழ் மேம்படுத்தப்பட்டசாலைகள் பராமரிப்புக்காக மீண்டும் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களிடமே ஒப்படைக்கப்படுகின்றன.

**பேருந்துச் சாலைத் திட்டம்:**

தமிழ்நாடு அரசு கிராமப்புறங்களில் பேருந்து இயக்குவதை முனைப்புடன் செயலாற்றி வருகிறது. அதன்படி தொடர்ந்து பல புதிய தடங்களில்பேருந்துகள் இயங்கத் தொடங்குகின்றன. இத்தகைய பேருந்து இயக்கம் நடைபெறும் சாலைகள் அரசின் தனிப்பட்ட கவனத்தை ஈர்த்துள்ளன. அதன் விளைவே பேருந்துத் தடச் சாலைகள் திட்டம் இத்தகைய சாலைகள் உள்ளாட்சி மன்றங்களிடமிருந்தாலும் அரசு நிதியுடன் மேம்படுத்தப்பட்டு படிப்படியாக அரசுச் சாலைகளாக மாற்றுவதற்கு இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.

**கிராமச் சாலைத் திட்டம்:**

தனித்து நிற்கும் கிராமங்களை நாகரிகம் வளர்ந்து காணும் நகரங்கள் மற்றும் விவசாயப் பொருட்களுக்கு விலை கிடைக்கும் சந்தைகளோடு இணைத்து அத்தகைய கிராமத்தில் வாழும் மக்களை ஏனைய மக்களுடன் கலந்து முன்னேற்றம் காண வழி செய்யும் வகையில் கிராமச் சாலைத் திட்டம் 1972-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதற்படி 1500-ம் அதற்கு மேற்பட்ட மக்கட் தொகையுள்ள கிராமங்களுக்குச் சாலை வசதிகள் கொடுப்பது. அடுத்து 1000 முதல் 1500 வரை மக்கட் தொகையுள்ள கிராமங்களின் பாதி எண்ணிக்கைக்கு இவ்வசதியை நீட்டிப்பது. இவ்விரண்டு குறிக்கோள்களை எட்ட ஆறாவது மற்றும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் வழி வகுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தைப் பொறுத்த மட்டில் இதற்கு சுமார் 140 கோடி ரூபாய் தேவைப்படும். ஆறாவது திட்டக் காலத்திற்கு வரையறுக்கப்பட்ட குறிக்கோளை எட்ட, இத்திட்டத்திற்குச் சுமார் 70 கோடி ரூபாய் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கிராமங்களிடையே தேவையற்ற போட்டிகளைத் தவிர்க்க ஒரு வழி முறையாகவே 1500 மக்கட்தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பின்தங்கிய மாவட்டங்களைப் பொறுத்த மட்டில், இந்த வழிமுறை சற்று மாற்றிஅமைக்கப்படுகிறது. அதாவது தனிப்பட்ட ஒரு கிராமத்தின் மக்கட் தொகையை மட்டும் எடுத்துக் கொள்ளாமல், அக்கிராமத்தையும் அதைச் சுற்றியுள்ள குக்கிராமங்களையும் இணைத்து, அத்தொகுப்பின் மக்கட்தொகை அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. தருமபுரி, புதுக்கோட்டை இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிக்கும் மீனவர் பகுதிக்கும் மாற்றி அமைக்கப்பட்ட அடிப்படை பொருந்தும்.

தமிழகத்தில் உள்ள கிராமங்கள் மற்றும் அவைகளை இணைக்கத் தேவையான சாலை, நீளம், மதிப்பீடு முதலிய விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| | மொத்த கிராம எண்ணிக்கை | இதுவரை சாலைகளால் இணைக்கப்பட்ட கிராமங்கள் | இன்னமும் இணைக்கப்படவேண்டிய கிராமங்கள் | அமைக்க வேண்டிய சாலைகளின் நீளம் கி.மீ. | மதிப்பு கோடி ரூபாயில் |
|---|---|---|---|---|---|
| 1500 மற்றும் அதற்குமேல் | 3762 | 1234 | 2528 | 5733 | 103 |
| 1000—1500 | 2563 | 539 | 2029 | 5890 | 106 |
| 1000-க்கு குறைவாக | 16717 | 9234 | 7483 | 25611 | 461 |
| மொத்தம் | 23047 | 11007 | 12040 | 35366 | 670 |






**கிராமச் சாலைத் திட்டத்தின் பயன்:**

நடப்பு நிதி ஆண்டில் (1981-82) ரூ. 10.50 கோடி இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் உடனடிப் பயன் இத்திட்டம் நடைபெறும் கிராமங்களில் மக்கள் தற்காலிக வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள்.

நீண்டகாலப் பயன்களாகக் கருதத்தக்கன.

1. விவசாய விலைபொருட்களை விரைந்து சந்தைகளுக்கு எடுத்துச் செல்லலாம்.

2. கல்வி, மருத்துவம் மற்றும் பொழுது போக்கு வாய்ப்புக்கள் கிராமங்களுக்கு எட்டுகின்றன.


3. நகரங்களில் நிலவி வரும் சமூக சமத்துவப் போக்கு, கிராமங்களில் மெல்லப் பரவ வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன.

4. கிராமப் புறங்களில் உள்ள நிலம் மற்றும் இதர அசையா சொத்துக்களின் மதிப்பு கூடுதலாக வாய்ப்பு உள்ளது.

இதுவரை கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் அமைந்த சாலைகளின் நீளம் முதலியன கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்படுகின்றன.

| ஆண்டு | பயன் பெற்ற கிராம எண்ணிக்கை | | | சாலையின் நீளம் (கி.மீ.) | மதிப்பு லட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| | முக்கிய கிராமங்கள் | இதர கிராமங்கள் | மொத்த கிராமங்கள் | | |
| 1972—73 | 58 | 116 | 174 | 113 | 228 |
| 1973—74 | 303 | 368 | 671 | 701 | 327 |
| 1974—75 | 315 | 342 | 657 | 1002 | 313 |
| 1975—76 | 217 | 311 | 528 | 714 | 247 |
| 1976—77 | 134 | 149 | 283 | 350 | 241 |
| 1977—78 | 88 | 113 | 201 | 281 | 149 |
| 1978—79 | 67 | 100 | 167 | 228 | 167 |
| 1979—80 | 59 | 49 | 108 | 126 | 181 |
| 1980—81 | 261 | 262 | 523 | 510 | 600 |
| மொத்தம் | 1502 | 1810 | 3312 | 4025 | 2453 |

இத்திட்டம் படிப்படியாக அனைத்துக் கிராமங்களும் பயன் பெறும் வகையில் நீட்டிக்கப்பட்டு நிறைவேற்றப்படும். இந்தியாவின் முதுகெலும்பாய் விளங்கும் கிராமப்புறத் தொழில் வளமும், நாகரிக முன்னேற்றமும் கண்டுள்ள நகரங்களோடுபோக்கு வரத்தால் நெருங்கிய தொடர்பு பெற்று, இருவேறு நாகரிகம் இனி இல்லை என்ற நிலைமாறி, எல்லா வசதிகளையும் பெற்று இனிதே விளங்கிட இத்திட்டம் பெரிதும் உதவும் என நம்பலாம்.



# கிராமங்களில் தன்னிறைவு

**திரு தி. ச. சிவப்பிரகாசம், இ.ஆ.ப.**
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை-

நம் நாட்டைப் பொறுத்த வரையில் கிராமப்புற வளர்ச்சிதான் நாட்டின் வளர்ச்சி என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். கிராமங்கள் செழித்து வளர தேசிய அளவிலே பல திட்டங்கள் புகுத்தப்பட்டுள்ளன. மக்களின் பொருளாதார மேம்பாடு, சமூக அரசியல் விழிப்புணர்ச்சி ஆகியவைகளை மேம்படுத்த நீண்ட நாட்களாக முயற்சிகள் நடந்து வந்திருக்கின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கிராமப் புறங்களிலே பஞ்சாயத்து முறை சோழ அரசர் காலங்களிலே ஜனநாயகமுறைப்படி நடந்து வந்துள்ளன என்பதற்கு உத்திரமேரூர் கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. முதலாம் பராந்தக சோழன் ஆட்சியில் கிராம நிர்வாகத்திற்காகப் பல வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டு குட ஓலை மூலம் வாரியங்களுக்கு மக்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இம்முறை மக்களாட்சிக்கு வித்திட்டது எனக்கூறலாம். ஆனால் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் நம் நாடு அடிமைப்பட்டிருந்ததால் இந்த மக்களாட்சி முறை துளிர் விட்டு வளர முடியாமல் நலிந்துவிட்டது.

ஆங்கிலேயர் ஆட்சி செய்த காலத்திலும் மக்களின் சுயமரியாதையைக் காப்பாற்ற வேண்டுமென்ற நல் எண்ணம் கொண்ட அதிகாரிகள் இருக்கத்தான் செய்தார்கள். லார்டு ரிப்பன் பிரபு அத்தகைய உயர்ந்த குண நலங்கள் பெற்ற ஒரு ஆங்கிலேயராகத் திகழ்ந்தார். அவரது தூண்டுதலின் பேரில் தான் தாலுகா போர்டுகள் நகராட்சி மன்றங்கள் ஆகியவைகள் தோன்றுவதற்கான 1894-வது வருடத்திய சட்டங்கள் தோன்றின. அதன் பின் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு சுய ஆட்சி நிறுவனங்களான பஞ்சாயத்துக்கள், தாலுகா போர்டுகள் நகராட்சிகள் ஏற்படுவதற்கான சென்னை லோக்கல் போர்டுகள் கூட்டம், சென்னைக் கிராமப்பஞ்சாயத்துச் சட்டம் ஆகியவைகள் 1920ல் ஏற்படுத்தப்பட்டன. இச்சட்டங்களின்படி அமைக்கப்படும் நிறுவனங்கள் அவைகளின் எல்லைகளுக்குள் மக்களின் நல்வாழ்வுக்கான சுகாதாரம், சாலைகள் அமைத்தல், மருத்துவவசதி ஆகியவைகளை தாங்களே திட்டம் தீட்டி நிறைவேற்றலாம். இருந்தாலும் ஆங்கிலேயர் ஆட்சியில் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டன; வறுமையும், நோயும், அறியாமையும் கிராமங்களில் மண்டி கிடந்தன என்பதை உணர்ந்த நாட்டின் நலனைக் கருத்தில் கொண்ட தலைவர்கள் கிராம வளர்ச்சித் திட்டங்களைப் புகுத்த வாய்ப்பை எதிர்நோக்கி இருந்தனர். சுதந்திரம் கிடைப்பதற்குச்சற்று முன்பாக 1946ல் அப்போது இருந்த வட்டார வளர்ச்சித்திட்டம் என்ற ஒரு திட்டத்தை கிராம வளர்ச்சிக்காக 34 வட்டாரங்களில் புகுத்தப்பட்டது. சுதந்திரம் பெற்றபின் அரசியல் நிர்ணய சட்டத்தில் கிராமப்புற நல்வாழ்வுக்காகப் பஞ்சாயத்துக்கள் அமைப்பதை முக்கிய குறிக்கோளாக வலியுறுத்தப்பட்டன. எனவே, தமிழ்நாட்டில் கிராமப் பஞ்சாயத்துச்சட்டம் 1950ல் நிறைவேற்றப்பட்டது. இதற்கிடையில் கிராமங்களின் நல்வாழ்வுக்காகத்தேசிய வளர்ச்சித் திட்டம், சமுதாய வளர்ச்சித்திட்டம் ஆகிய திட்டங்கள் தீட்டப்பட்டு ஒருங்கிணைந்த புதிய கிராமச்சமுதாயத்தை உருவாக்குவதைக்கருத்தில் கொண்டு வட்டாரங்கள் அமைக்கப்பட்டன.

இந்த வட்டாரங்கள் நிறைவேற்றும் கிராமப்புற நல்வாழ்வுந்திட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளாகிய ஊராட்சி மன்றத் தலைவர்கள் பங்குகொள்ளும் வகையில் தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 1958ல் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி மாவட்டக் கழகங்கள் ஒழிக்கப்பட்டன. வட்டாரங்கள் ஊராட்சி ஒன்றியங்களாக மாறின. விவசாய அபிவிருத்தி, கால்நடை பராமரிப்பு, கூட்டுறவு, நீர்ப்பாசனம்,

கிராமக் கைத்தொழில், கிராம வேலைத் திட்டம், மாவட்டக் கழகங்கள் செய்து வந்த பணிகளான கட்டாய ஆரம்பக் கல்வி, தாய் சேய் நல விடுதிகள் பராமரிப்பு, மருத்துவ வசதி, பொதுச் சந்தைகளை நிர்வகித்தல் ஆகிய வேலைகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்பட்டன.


நாட்டில் நிலவி வந்த அறியாமையைப் போக்கப்பட்டி தொட்டிகளிலெல்லாம் பள்ளிகள், ஜனநாயக மரபுகளை வலுவாக்க கிராமங்கள் தோறும் ஊராட்சி மன்றங்கள், ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிகள் மூலம் பொருளாதார நலன்களைப் பெறக்கூட்டுறவு சங்கங்கள் ஆகிய நிறுவனங்களை நிறுவுவதில் அக்கறை காட்டப்பட்டன. குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கொடுக்க குடிநீர் ஆதாரங்கள் போக்குவரத்து வசதிகளைப் பெருக்க இணைப்புச்சாலைகள் பள்ளிகளுக்கான நல்ல கட்டடங்கள் ஆகியவைகள் அடங்கிய கிராம வேலைத் திட்டம் முனைந்து செயலாக்கப்பட்டது. இருப்பினும் கிராமங்களிலே குடிநீர் இல்லை என்ற குறை இருந்துவந்தது. எனவே, தமிழக அரசு ஒரு முனைப்புத்திட்டம் தீட்டி அனைத்து கிராமங்களுக்கும், குடிநீர் இல்லை என்ற குறையைப் போக்குந்திட்டம் வகுக்க ஒரு கணக்கெடுப்பு நடத்தியது. அதன்படி தமிழ்நாட்டிலுள்ள 47,075 குடியிருப்புகளை ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டு முதல் இரண்டு வகைகளுக்கு முதல் இடம் கொடுத்து வேலைகளைத் துவங்க ஆணையிடப்பட்டு நிறைவேற்றப்பட்டுவந்தது. இந்நிலையில் நாடு சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகள் ஆகியும் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் எல்லா இடங்களிலும் இல்லையே" என்பதை அறிந்து நம் முதல்வர் அவர்கள் மக்கள் துயர் துடைக்கப்புதிய திட்டங்கள் தீட்ட ஆணையிட்டார்கள். பல்வேறு கிராம வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி இருந்தாலும் ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கபட்டு 18 ஆண்டுகள் ஆகியும் கீழ்க்கண்ட குறைகள் இருந்தன.

1. குடிநீர் வசதி செய்ய வேண்டிய குடியிருப்புகள் 12,603
2. மேம்படுத்த வேண்டிய இணைப்புச் சாலைகள் 25,611 கி.மீ
3. கட்ட வேண்டிய பாலங்கள் 23,612
4. அரிசனங்கள் குடியிருப்புகளிலுள்ள மயானங்களுக்கு அமைக்கப்பட வேண்டிய சாலைகள் 4,268 கி.மீ
5. பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டியவை 7,133
6. கட்ட வேண்டிய மகப் பேறு இல்லங்கள் 1,262
7. கட்டப்படவேண்டிய கிராம மருந்தகங்கள் 455
8. அரிசனங்களுக்குக் கட்ட வேண்டிய வீடுகள் 1,07,338

எனவே, இக்குறைகளை அகற்ற தன் நிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. முதல் கட்டமாக 1980-81ல் 69 வட்டாரங்களில் வேலைகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டன. இரண்டாவது கட்டமாக 150 வட்டாரகளிலே திட்டம் 1981-82ல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மூன்றாவது கட்டமாக 157 வட்டாரங்களிலே செயல்படுத்தப்படும். முதல் கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 69 வட்டாரங்களிலே 45.41 கோடி ரூபாய் பெறுமானமுள்ள வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. நடைமுறை ஆண்டிலே ரூபாய் 109.76 கோடி பெறுமானமுள்ள வேலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த அளவிலே நாட்டின் வரலாற்றிலேயே பெரிய திட்டம் கிராம வளர்ச்சிக்காக எப்போதும் செய்யப்பட்டதில்லை. வேறு மாநிலங்களிலும் இத்தகைய முயற்சிகள் நடந்துள்ளதாகத் தெரியவில்லை.

கிராம வளர்ச்சித் திட்டங்கள் கடந்த ஒரு பத்து ஆண்டுகளிலேயே வட்டாரங்கள் மூலம் செலவு செய்யப்பட்ட தொகைகளையும், தற்போது நடைபெற்றுவரும் வேலையின் அளவுகளையும் பார்த்தால் பார்ப்பவர்கள் மலைத்துப் போவார்கள்.

| வரிசை எண். | ஆண்டு | நிதி ஒதுக்கீடு அல்லது செலவு செய்தது அரசு மான்யம் மட்டும் [ரூபாய் இலட்ச கணக்கில்] |
|---|---|---|
| 1. | 71—72 | 22,67.09 |
| 2. | 72—73 | 24,36.24 |





| | | |
|---|---|---|
| 3. | 73—74 | 29,24.02 |
| 4. | 74—75 | 29,18.46 |
| 5. | 75—76 | 33,09.50 |
| 6. | 76—77 | 34,94.84 |
| 7. | 77—78 | 35,05.69 |
| 8. | 78—79 | 37,31·3.4 |
| ·9. | 79—80 | 39,52.25 |
| 10. | 80—81 | 60,95.18 |
| 11 | 81—82 | 80,43.67 |

திட்ட மதிப்பீடு

பள்ளிக் கட்டடங்கள் இல்லாத ஊரில் கட்டடம் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியம் செலுத்த வேண்டிய பங்குத் தொகை இல்லாததால் கட்டடம் கட்ட முடியாத நிலை இருந்தது. பங்குத் தொகை செலுத்தும் வசதி இருந்த இடங்களில் அரசு ஆண்டுதோறும் வழங்கி வந்த தொகை போதுமானதாக இல்லாது இருந்ததால் அனுமதி கிடைக்கவில்லை என்ற காரணமும் இருந்தது. ஆனால் தன் நிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டபின் பங்குத் தொகை இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றியத்தின் பங்குத் தொகையைக் கடனாக வழங்க முன் வந்தது. எப்படியும் திட்டமிட்டபடி நிர்ணயிக்கப்பட்ட கெடுவான ஒரு ஆண்டுக்குள் வேலை நடைபெறவேண்டும் என்பதற்காக ஆள் பலம், பணம் வேலை துரிதமாக நடைபெறுவதற்குகான சூழ்நிலை ஆகிய எல்லாவற்றையும் முதல்வர் அவர்கள் நேரடி ஆய்வின் கீழும் ஆணையின்படியும் நிறைவேற்றப்பட்டன. குடிநீருக்கான குடியிருப்புகள் அறுவகைப்படுத்தப்பட்டிருப்பினும் தன்னிறைவுத் திட்ட வட்டாரங்களில் பாகுபாடின்றி எல்லா வேலைகளையும் முனைப்பாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செய்து முடித்தது. எனவே, தன் நிறைவுக்கு முன் இருந்த நிலை வேறு, திட்டம் நிறைவேற்றியபின் இருக்கும் நிலை வேறு. தற்போது நல்ல பள்ளிக் கட்டிடங்கள் இல்லாத ஊர் இல்லை. எல்லா சாலைகளும் கப்பி போடப்பட்டு துரிதப் போக்குவரத்துக்கு ஈடு கொடுக்கும் சாலைகள். அச்சாலைகளை மழைநீர், வெள்ளம் அடித்துச் செல்லாமல் புதிதாக அமைக்கப்பட்ட பாலங்கள் பாதுகாப்பளிக்கும்.

கிராமங்களில் உள்ள அரிசனக் குடியிருப்புகளுக்கு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அவர்களின் மனயாங்களுக்கான கவலையின்றிச் செல்ல சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. நல்ல குடிநீர் தடங்கலின்றிக் கிடைக்கும். அங்குள்ள மருந்தகம், மகப்பேறு நிலையம், வசதிபடைத்த கட்டிடங்களிலே இயங்குகின்றன. தவிர ஊராட்சி மன்றங்கள் ஜனநாயக மரபுகளை மேலும் மேலும் மேம்படுத்த சமுதாயப் பொறுப்புணர்ச்சிகளை விரிவாக்க சொந்தக் கட்டடங்களை பெற்றுள்ளன.

சுற்றுப்புறச் சுகாதாரத்தை மேம்படுத்தவும் கிராம மகளிர் பயன்படுத்தவும் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. விவசாய நிலங்களுக்குப் பாசன நீர்வசதியைப் பெருக்க சிறு பாசன ஆதாரங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள வட்டாரங்களிலே உள்ள மக்கள் கிராமங்கள் அடைந்துள்ள மேம்பாடுகளை அறிந்து பெருமிதம் அடைகின்றனர். நிறைவேற்றப்பட விருக்கும் வட்டார மக்கள் என்று இந்த திட்டம் தங்களுக்கு வரும் என்று ஏங்கி நிற்கின்றனர்.

# உசிலம்பட்டியில் உன்னத முன்னேற்றம்

எம். அண்ணாமலை
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) மதுரை.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி கோட்டத்தில் 6 ஊராட்சி ஒன்றியங்களில், தன்னிறைவுத் திட்டப்பணிகளுக்காக (கல்லுப் பட்டி, உசிலம்பட்டி, கள்ளிக்குடி வத்தலக்குண்டு, சேடபட்டி, அலங்கா நல்லூர்) ரூ. 187.51 இலட்சம் அனுமதிக்கப்பட்டு ரூ. 117.36 இலட்சம் செலவழிக்கப் பட்டுள்ளது.


உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், இரண்டாவது கட்ட தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. தன்னிறைவுத் திட்டப்பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூ. 36.93 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இணைப்புச்சாலைகளுக்காக ரூ. 21,30,000 அனுமதிக்கப்பட்டு ரூ. 6,95,000 செலவழிக்கப் பட்டு 33 வேலைகளில் 16 வேலைகள் முடிக்கப்பட்டு விட்டன. 56 சிறு பாலங்களுக்காக ரூ. 14,52,000 அனுமதிக்கப் பட்டு 34, பாலங்கள் ரூபாய் 10,77,000 செலவில் முடிக்கப் பட்டுள்ளன. ஆதி திராவிட மக்களின் மயானப் பாதைகள் 11-க்காக ரூ. 1,32,000 அனுமதிக்கப்பட்டு, ரூ. 50,000 செலவழிக்கப்பட்டுள்ளது. சிறு பாசனத் திட்டத்திற்காக ரூபாய் 1,60,000 அனுமதிக்கப்பட்டு ரூ. 64,000 செலவழிக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ. 6,60,000 அனுமதி வழங்கப்பட்டு ரூ. 4,30,000 செலவில் 5 பள்ளிக்கட்டடங்கள் முடிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் 76 வேலைகளுக்காக ரூபாய் 23.61 இலட்சம் செலவழிக்கப் பட்டுள்ளது.


குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மேல்நிலைத் தொட்டிகள் 19-ம், கைப்பம்புகள் 11-ம், ரூ. 21 இலட்சத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

நல்லுத்தேவன்பட்டிச் சாலையிலிருந்து போத்தம்பட்டிச் சாலை வரை 100 மீட்டர் நீளத்திற்கு ரூ. 30 ஆயிரம் செலவில் காட்டாற்று வெள்ளத்தைத் தடுப்பதற்கு மதில் சுவர் கட்டப்பட்டு வருகிறது. சுமார் 70 மீட்டர் சுவர் முடிந்துவிட்டது. இதனால் போத்தம்பட்டிக்குப் போக்கு வரத்து பாதிக்கப்படாமல் மக்கள் எளிதாகச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.


நல்லுத்தேவன்பட்டியிலிருந்து சடையாள் வரை(லிங்கநாயக்கன் பட்டி, அழகபப்கோன்பட்டி, நல்லுத்தேவன்பட்டி, சடையாள் ஆகிய நான்கு கிராமங்கள்)1,000 மீட்டர் நீளம் ரூ. 3.5 இலட்சம் செலவில் காட்டாற்று வெள்ளத் தடுப்புச் சுவர்கள் தீவிரமாகக் கட்டப்பட்டு வருகின்றன. இங்குள்ள மக்கள் அடிக்கடி மலையிலிருந்து வரும் காட்டாற்று வெள்ளத்தினால் தங்கள் உடைமைகளை இழந்து மேட்டுப்பகுதிகளுக்குச் சென்று கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலை இனி வராத நிலைமையில் அரசு தீவிரமான முயற்சிகள் எடுத்து, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இந்தத் தடுப்புச் சுவர்கள் கட்டப்பட்டு வருகின்றன. இச்சுவர் கட்டுவதால் சுமார் 100 ஏக்கர் விவசாய நிலங்கள் காட்டாற்றினால் மண் மூடிப்போவது தடுக்கப்பட்டு, அங்குள்ள ஏழை மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது.

இம்மாதிரி, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டப்பணிகள் மிகச் சிறப்பான முறையில் ஏழை மக்களின் நலன் கருதி, அவர்கள் வாழ்வு மறுமலர்ச்சி பெற பணிகள் தீவிரமாகச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.





# மூதறிஞர் பிறந்த நாள் விழா!



தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னைக் கலைவாணர் அரங்கில் 26.12.81-ஆம் நாள் ''மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 104-வது பிறந்த நாள் விழா'' திருமதிமணி கிருஷ்ணசாமி குழுவினரின் இசை நிகழ்ச்சியுடன் சீரோடும் சிறப்போடும் துவங்கியது.

**இயக்குநர் வரவேற்புரை**

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு கே.ஏ. சுந்தரம், இ.ஆ.ப., அவர்கள் தமது வரவேற்புரையில்,

''தமிழகத்திற்குப் புகழ்தேடித் தந்த ஆன்றோர்களுக்கும் சான்றோர்களுக்கும் பிறந்த நாள் விழா எடுத்தும், அவர்கள் விட்டுச் சென்ற அறிவுரைகளை இன்றையத் தலைமுறையினர் உணர வேண்டும் என்ற வகையிலும் இது போன்ற இனிய விழாக்களைத் தமிழ்நாடு அரசு எடுத்து அவர்களுக்கு மேலும் புகழ்சேர்க்கிறது என்று குறிப்பிட்டார்.

**மாண்புமிகு அமைச்சர் அரங்கநாயகம்**

கருத்தரங்கு விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில் மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கும் எங்களுக்கும் கருத்து வேற்றுமை பல உண்டு. அவைகளை எல்லாம் மறந்து மூதறிஞர் இராஜாஜி அவர்கள் நாட்டுக்குச் செய்த சேவையினைப் பாராட்டுவதற்காக இந்த விழாவைத் தமிழக அரசு எடுத்துச் சிறப்பிக்கிறது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையில் இருந்துவரும் இந்த அரசு, 1977-ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு கட்சி மாச்சரியங்களை எல்லாம் மறந்து அறிஞர் பெருமக்களைப் பாராட்டுவதில் ஒரு சிறப்பான நிலையை எடுத்துள்ளது. மக்களை மறந்து, தான் வாழவேண்டும் என்று நினைக்காமல், நாடு வாழ வேண்டும் என்ற உயரிய லட்சியத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டியவர் மூதறிஞர் அவர்கள்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தன் மனத்தில் பட்ட கருத்துக்களைத் துணிச்சலுடன் இப்படிப் பேசினால் இப்படிப்பட்ட விளைவுகள் வருமே என்று கூடப்பாராமல் தெரிவித்து வந்தவர். பி.சி.ஜி. தடுப்பு ஊசி போடுவதை பலமாக எதிர்த்தவர் இராஜாஜி. வாத - பிரதிவாதத்தை ஆதாரத்துடன் எடுத்து வைப்பதில் அவருக்கு நிகர் அவரே. ஆட்சியில் பல்வேறு பொறுப்புகளை வகித்த போது பல அரிய காரியங்களை மக்களுக்காகச் செய்தார். 'கடன் நிவாரணச் சட்டம்' விற்பனை வரி' போன்றவைகளைக்கொண்டு வந்தவரே இராஜாஜி அவர்கள் தான். மூதறிஞர் இறுதி மூச்சு உள்ளவரை நாட்டிற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்'' என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சித் தொகுப்பு: ஆனந்தன்

**நீதிபதி சாமிக்கண்ணு**

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் வரலாற்றுக் கண்காட்சியைத் திறந்துவைத்த மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி திரு எஸ். சாமிக்கண்ணு அவர்கள் பேசுகையில், ''அப்பழுக்கற்ற வாழ்க்கையை - வாழ்ந்து காட்டியவர் இராஜாஜி அவர்கள். அமைச்சர் என்பவர் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு இலக்கியமாகவும் இலக்கணமாகவும் விளங்கிய

பெருமை படைத்தவர். 'கலப்புத் திருமணம்', 'சம்பந்தி போஜனம்' போன்றவைகளை 60 ஆண்டுகளுக்கு முன்பே நாட்டுக்கு அறிமுகப்படுத்தியவர். இப்படிப்பட்ட தலைவர்களின் வழியைப் பின்பற்றி நாம் நடக்க வேண்டும் என்றார்.

**எம்.ஏ. மாணிக்கவேலர்**

விழாவைத் தொடங்கிவைத்த முன்னாள் மேலவைத் தலைவர் திரு எம்.ஏ. மாணிக்கவேலர் அவர்கள் பேசுகையில்,

''இராஜாஜி நிர்வாகத்தில் திறமைமிக்கவர். அவர் நிர்வாகத்தில் எந்தத் தவறும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர். அரிசன மக்கள் மற்ற மதத்தவரை விட எதிலும் குறைந்தவர்கள் அல்லர் என்பதைப் பல கட்டங்களில் செயல்படுத்த நாட்டிய பெருமை இராஜாஜி அவர்களுக்கு உண்டு'' என்று குறிப்பிட்டார்.

**பாடப்புத்தகத்தில் இடம் பெற வேண்டும்**

'இராஜாஜியின் தீர்க்கதரிசனம்' என்ற தலைப்பில் டாக்டர் எம். சந்தோஷம் அவர்களும் 'இராஜாஜியின் நிர்வாகம்' என்ற தலைப்பில் திரு எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்களும் 'இராஜாஜியின் நட்புறவு' என்ற தலைப்பில் திருமதி சௌந்தரா கைலாசம் அவர்களும் 'இராஜாஜியின் எழுத்தாற்றல்' என்ற தலைப்பில் ''கலைமகள்'' ஆசிரியர் திரு கி.வா.ஜகந்நாதன் அவர்களும், 'இராஜாஜியின் மனிதாபிமானம்' என்ற தலைப்பில் திரு வி.கே.என். சாரி அவர்களும் உரை நிகழ்த்தினார்கள். இராஜாஜி அவர்களின் அறிவுரைகளையும் அவர் எழுதிய ''வியாசர் விருந்து'', ''சக்கரவர்த்தித் திருமகன்'' என்ற நூல்களையும் அரசு மலிவு விலையில் வெளியிட வேண்டும் எனவும் மாணவர்களுக்கு இராஜாஜி நூல்கள் பாடப் புத்தகங்களாக வெளிவரவேண்டும் என்றும் இவர்கள் தமது உரையில் வற்புறுத்தினார்கள்.

மாலை நிகழ்ச்சி திருப்பாம்புரம் சகோதரர்கள் திரு சுவாமிநாதன் திரு மீனாட்சிசுந்தரம் ஆகியோரின் நாயன இசையுடனும், அரித்துவார மரியம் திரு பழனிவேல் அவர்களின் தவில் இசையுடனும் துவங்கியது. தமிழ்ப் பழங்கலை இயக்ககத்தின் இயக்குநர் திரு மீ.ப. சோமசுந்தரம் அவர்கள் வரவேற்புரையில்,

''மூதறிஞர் இராஜாஜி அவர்கள் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் மீது நல்ல மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். பல கட்டங்களில் அவரது சிறப்பு இயல்புகளை முழு மனதோடு பாராட்டியிருக்கிறார். கருத்து வேறுபாடு கொண்டவராக இருந்தாலும் அவர்களிடம் இருக்கிற திறமைகளை இராஜாஜி பாராட்டத் தவற மாட்டார். நிர்வாகத்தில் ஒழுக்கச் சீலராகவும் நிர்வாகத்தில் திறமை மிக்கவராகவும் விளங்கிய இராஜாஜி அவர்கள் கருணை குணம் படைத்தவராகவும் கண்டிப்பில் இம்மியும் குறையாதவராகவும் இருந்தார். இராஜாஜி அவர்கள் அரசியல் வரலாற்றில் ஓர் உயர்ந்த இடத்தை வகிக்கிறார்.

**மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் இராசாராம்**

விழாவுக்கு மாண்புமிகு சட்ட பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தமது தலைமையுரையில்

''ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தலைசிறந்த கிரிமினல்வழக்கறிஞராக இராஜாஜி திகழ்ந்தவர். பல நேரங்களில் காந்தியடிகள்கூட இவரின் கருத்தைக் கேட்டுச் செயல்பட்டவர்தான் என்று வரலாறு கூறுகிறது. இராஜாஜி, தான் எடுத்துக் கொண்ட எந்தக் காரியத்தையும் திட்டமிட்டுக் செயல்படுகிற நிபுணத்துவம் கொண்டவர். பிறர் பாராட்ட வேண்டுமே என்று தமது காரியத்தைச் செய்யமாட்டார்-எதையும் துணிச்சலுடன் செய்து முடிக்கிற நிர்வாகத் திறமை மிக்கவர் இராஜாஜி. அப்படிப்பட்ட தலைவர்கள் நடந்து காட்டிய பாதையை இளையதலைமுறையினர், நன்கு தெரிந்து செயல்பட வேண்டும். இந்தியாவுக்கே வழிகாட்டியாக விளங்கி ஒரு புதிய மறுமலர்ச்சியை உருவாக்கியவர். இராஜாஜி நாட்டைப் பற்றித்தான் வேகமாகச் சிந்தித்து செயலாற்றினாரே தவிர, தன்வீட்டைப் பற்றியோ தன்னைப் பற்றியோ அவர் கவலைப்பட்டதில்லை. இராஜாஜி நடந்து வந்த பாதையை நினைத்துப் பார்க்க வேண்டும். அவர் வாழ்ந்த எல்லா வாழ்க்கையும் தூய்மையானது எளிமையானது என்று குறிப்பிட்டார்.

**மாண்புமிகு அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி ஹண்டே அவர்கள் தமது உரையில், ''நேர்மைக்கும் நாணயத்திற்கும் இலக்கணமாக விளங்கியவர் இராஜாஜி அவர்கள். என்றைக்கும் பிறர்மனம் புண்படும் படியாக அவர் நடக்கமாட்டார்.

## டூரிங் திரையரங்குகளின் உரிம கால வரம்பு ஐந்து ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது

இதுவரை, டூரிங் திரையரங்குகள் ஓர் இடத்தில் முதன்முறையாகச் செயல்படத் துவங்கும்போது ஒவ்வொரு ஆண்டாக மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் பெற விதிகள் வகுக்கப்பட்டிருந்தன. பிறகு மூன்று மாத இடைவெளிக்குப் பிறகு அதே இடத்தில் இரண்டாவது முறையாகவும் திரை அரங்கு நடத்தவும் வழிவகை உள்ளது. தூத்துக்குடியில் ஏற்பட்ட தீவிபத்திற்குப் பிறகு, நடமாடும் திரை அரங்குகளில் கல்நார் கூரை, நிலக்கீலினால் பூசப்பட்ட கூரை அல்லது துத்தநாகத் தகட்டினால் வேய்ந்த கூரைதான் போடப்பட வேண்டுமென்று விதி முறைகள் மாற்றி அமைக்கப்பட்டன. இம்மாதிரி மாற்றங்கள் செய்து திரை அரங்குகள் அமைக்க மிக அதிகமாக முதலீடு செய்யப்பட வேண்டியுள்ளது. அத்தொகையை மீண்டும் பெற உரிமைக்கால அளவை 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கைகள் அரசினால் பெறப்பட்டன.

தீவிர ஆலோசனைக்குப்பிறகு அரசு இக்கோரிக்கையை ஏற்று ஆணை பிறப்பித்துள்ளது. ஆண்டுதோறும் விதிகளின்படி கொடுக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் சமர்ப்பித்து 5 ஆண்டு வரை உரிமம் பெறலாம்.

அதே நேரத்தில் கண்டிப்பையும் கடைப்பிடித்து வந்தார். அவர் காட்டிச் சென்ற பாதையில் நடப்போம்'' என்று குறிப்பிட்டார்.

விழாவில் முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதி திரு பி.எஸ்.கைலாசம் அவர்கள் இராஜாஜி அவர்களின் குமாரர் திரு சி.ஆர்.நரசிம்மன் அவர்கள், திரு சித்ரா நாராயணசாமி அவர்கள், திரு என். எஸ். வரதாச்சாரி அவர்கள் திரு செங்கல்வராயன் அவர்கள் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

**மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர்.**

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தமது சிறப்புரையில்,

''தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பதவியிலிருந்தபோதும் இல்லாதபோதும் போராடித் தம் மனச்சாட்சிப்படி எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பொறுப்போடு செயல்பட்டார். என்னைப் போன்றவர்கள் பொறுப்பிலிருந்தாலும் நாங்கள் எவ்வளவு தெரிந்து கொள்ள வேண்டுமோ அதைத் தெரிவித்ததற்காக அவருக்கு என் கட்சியின் சார்பிலும் அமைச்சரவைச் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழ்ப் பண்பாடு போகவில்லை**

நான் ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். நாம் பொதுக் கூட்டத்திற்குப் போகும் நிலை வேறு. இது போன்ற கூட்டத்திற்கு வருவது வேறு - யாருடைய பேச்சைக் கவனிக்க வேண்டும் - கேட்க வேண்டும் என்பதைவிட இந்தக் கூட்டத்தில் பேசுபவர்களின் கருத்துக்களைக் கவனிக்கவேண்டும். இங்கே வந்திருப்பவர்கள் பேச்சாளர்களுக்காக வந்தவர்களில் மூதறிஞர் இராஜாஜிக்காக வந்தவர்கள். தமிழ்ப்பண்பாடு இன்றும் போய்விடவில்லை என்பதற்கு எடுத்துக் காட்டாகவிளங்க வேண்டும். அதைக் கடைப்பிடிப்பீர்கள் என்று கருதுகிறேன்.

மறைந்த ஏ.வி.ராமன் மூலம் தான் இராஜாஜி அவர்கள்எனக்கு அறிமுகம் ஆனார்கள். அதுவரை தூரத்திலிருந்து பார்த்தேன். தூரத்திலிருந்து பார்ப்பதிலும் பல விசேஷம் தெரியும். உடனிருப்பவர்கள் சிலவற்றை மட்டும் விமர்சிப்பார்கள் -தூரத்திலிருந்து பார்க்கும்போதும், தான் கேள்விப்பட்டவைகளுக்கு விளக்கம் பெற நினைக்கும்போதும் பல உண்மைகள் வெளிவரும்.

**நியாயத்தின் பக்கம்**

சென்னை மாகாணத்தின் பிரதமராகப் பொறுப்பேற்றபோது இராஜாஜி பேசிய பேச்சு இன்னமும் எனக்குப் பசுமையாக நினைவில் இருக்கிறது. சட்டமன்றம் ஆனாலும் வெளியே யானாலும் பிரச்சனைகளைச் சமாளிப்பதில்-பதிலளிப்பதில் இராஜாஜி சாமார்த்தியசாலி. இராஜாஜி பிடிவாதக்காரராக இருந்தாலும் நியாயமாக இருந்தால் மட்டும் அதனைச் செய்வார்.

நாட்டிற்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அதை இந்த தமிழக அரசு செய்யும் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை'' என்று குறிப்பிட்டார்.

முடிவில் செய்தி - மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் நன்றி கூறினார்.

மூதறிஞர் ராஜாஜி அவர்களின் பிறந்தநாள் விழா, போதனை வழங்கும் விழாவாக -குறிக்கோள்களுக்கு மக்களைத் தயார்ப்படுத்தும் விழாவாக அமைந்தது.

# மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் இவற்றை ஒருங்கிணைத்துப் பயன்படுத்தும் திட்டம்

மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் ஆகியவற்றை ஒருங்கிணைத்துப் பயன்படுத்தும் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்துகிறது என்று மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கா. இராசாமுகமது அவர்கள் கூறியுள்ளார்கள்.

இத்திட்டம் பற்றி அவர் கூறி இருப்பதாவது:

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் 15 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் செலவில் ஆய்வு மேற்கொள்ள தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது.

இத்திட்டத்தின்படி நீரோடை, நீர்த்தேக்கம் ஆகியவற்றில் இருந்துவரும் நீரைத் திறமையான முறையில் பயன்படுத்துவதன் மூலம் பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்துவது, பாசனக் கால்வாய்களை மேம்படுத்துவது, நீரூற்றுக்களைக் கட்டுப்படுத்துவது. வேளாண்மையில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் பழக்கங்களை விளக்குவது, மேற்பரப்பு-நிலநீர் ஏற்பாடுகளை ஒருங்கிணைந்த முறையில் நிர்ணயித்தல் ஆகியவை குறித்து ஆய்வுகளை இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

## விடுதலை வீரர் திரு. யோகி சுத்தானந்தபாரதிக்கு அரசு நிதி உதவி

இந்தியத் திருநாட்டின் சுதந்தரத்திற்காக இன்னல்கள் பல ஏற்றுப் புகழுடம்பு எய்திய அமரர்கள் வ. வே. சு. அய்யர், வ. உ. சி., மகாகவி பாரதியார், யோகி அரவிந்தர், சுப்பிரமணிய சிவா போன்றோருடன் தொடர்பு கொண்டு, நாட்டின் விடுதலைக்காகத் தொண்டாற்றியுள்ளவரும், தமிழுக்குச் சீரிய தொண்டாற்றி வருபவருமான முதுபெரும் விடுதலைப் போராட்ட வீரர் திரு யோகி சுத்தானந்த பாரதி அவர்கள், நாட்டின் விடுதலைக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் ஆற்றியுள்ள தொண்டினைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு, அதன்படி, 22.12.81 முதல் மாதந்தோறும் ரூ. 500/- நிதி உதவி அளித்திட ஆணை பிறப்பித்துள்ளது.



# தமிழ்நாட்டில் இலவச சட்ட உதவி

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர்

**திரு பி.எச்.பாண்டியன்**

தமிழ்நாடு சட்ட உதவி ஆலோசனைக்குழு ஒரு பதிவு பெற்ற சங்கமாகும். 4-1-1976-ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியான அரசாணையின்மூலம் தமிழ்நாடு அரசு இதைப் பதிவு செய்து ஆதரவு அளித்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39-அ பிரிவின் கீழ் குடிமக்களுக்கு அரசு நிறைவேற்ற வேண்டிய கடமைகளைப் பூர்த்தி செய்யவல்ல ஓர் அமைப்பாகும் இது.

இந்நாட்டில் உள்ள சட்ட உதவி நிறுவனங்களில் இது சமீப காலத்தில் ஏற்படுத்தப்பட்டதாகும். தமிழ்நாடு அரசு இதற்கு நிதி உதவி செய்கிறது. மேதகு ஆளுநரைத் தலைவராகக் கொண்டு தற்போது அமைக்கப்பட்ட உயர் அதிகாரக் குழுவின் நிர்வாகத்தில் இது செயல்படுகிறது. இந்த உயர் அதிகாரக் குழுவில் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி, உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதிகள், அரசுச் செயலாளர்கள், மற்றும் உயர் மட்ட அலுவலர்கள் முதலானோர் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுவின் நோக்கங்களும், கருத்துக்களும் வருமாறு :

(அ) ஏழைகளுக்கும், தகுதி வாய்ந்தவர்களுக்கும் சட்டஉதவி மற்றும் ஆலோசனை வழங்குதல்.

(ஆ) மத்திய-மாநில அரசுத் திட்டங்களின் நலனைச் சமூகத்தின் நலிந்த பிரிவினரும் பெறுவதற்கு உதவியளித்தல் ;

(இ) இயற்றப்பட்ட சட்டங்களின் நலன்களை எளிய பிரிவினர் எய்த வகை செய்தல், மக்கள் மத்தியில் சட்ட அறிவைப்புகுத்துதல்;

(ஈ) குறைந்தளவு ஊதியங்கள் தொழிலாளர், மகளிர், சிறார், உழவர்கள், கொத்தடிமைகள் முதலியவர்களின் நலனுக்கு வகை செய்தல்;


(உ) சமூகத்தின் நலிந்த பிரிவினருக்கு சமூக பொருளாதார உயர்விற்கு வழி வகுத்து வறுமையை ஒழிப்பது.

**சட்ட ஆலோசனைக்கும், இணக்க உடன்பாட்டிற்கும் முன்னுரிமை அளித்தல்:**

இது பற்றிய அரசின்கொள்கை பற்றி பேரவையும் மேலவையும் இணைந்த கூட்டத் தொடரில் 7-7-1977ஆம் தேதியன்றுமேதகு ஆளுநர் அளித்த உரையில் பின் வருமாறு தெரிவித்துள்ளார்.

நீதித் துறையிலும், நிர்வாகத் துறையிலும் ஏழை, எளிய மக்கள் தங்கள் பக்கமுள்ள நியாயத்தை நிலைநாட்டிக் கொள்ள மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்தப் புதிய அரசு அவர்களுக்கு இலவச சட்ட உதவி அளிப்பதன் மூலம் அக் குறையை அகற்றுதல் வேண்டும்.

நீதி மன்றம் அல்லது நடுவர் மன்றத்திற்குப் போவதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளுடன்தொடர்புகொண்டு இணக்க முறையில் எளிய பிரிவினருக்கு நியாயம் கிடைக்க




வகைசெய்யப்படுகிறது. இவ்வாறு செய்வதால் வழக்கு நடைமுறையின் சிரமம் குறைக்கப்படுகிறது.

**அமைப்பு முறை :** இது மாவட்டக் குழுக்களாகவும், வட்டக் குழுக்களாகவும் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட நீதிபதியின் அலுவலகம் செயல்பட்டு வருகிற இடத்தில் மாவட்டக் குழுக்களும, தலைமை ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட், சார்நிலை நீதிபதி மாவட்ட முன்சீப், சப்-டிவிஷனல் ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட் அல்லது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் இவர்களில் யாரேனும் ஒருவரின் அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் இதன் வட்டக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டக் குழுவிற்கு மாவட்ட நீதிபதி அலுவல் முறை தலைவராவார். மாவட்டக் குழுவிற்கு முதுநிலை ஜுடிஷியல் அலுவலர் தலைமை வகிப்பார். நிர்வாகக் குழு அவ்வப்போது இதற்கான வழி முறைகளை வகுக்கும்.

அந்தந்த இடங்களிலுள்ள வழக்கறிஞர் சங்கங்களின் தலைவரும் அலுவல் முறை உறுப்பினராவார். அரசுத் துறைகளும் இதில் அங்கம் வகிக்கும். இவ்வாறு இம்மாநிலத்தில் 90 குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

மாவட்ட வட்டக் குழு ஒவ்வொன்றும் 'அ', 'ஆ' என்கிற இரண்டு வழக்கறிஞர் பட்டியல்களை வைத்து வருகின்றன. இப்பட்டியல்களைத் துணைக் குழு தேர்வு செய்கிறது. இக்குழுவின் நோக்கங்களை நிறைவேற்றும் ஆர்வம் கொண்ட சமூக நலப் பணியில் நாட்டம் கொண்ட வழக்கறிஞர்கள் இதற்குத் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

**விண்ணப்பங்களைத் தாக்கல் செய்தல்:**

'அ' பட்டியலில் இருக்கும் வழக்கறிஞர்கள் குறிப்பிட்ட நேரங்களில் அன்றாடம் விரிவாக ஆய்வு செய்கிறார்கள். பிரச்சினை சிறியதாக இருந்தால் தேவையான ஆலோசனையை நல்கி சமாதானத்திற்கு வகை செய்கிறார்கள். சட்டப் பிரச்சினை இல்லாத நேர்வுகள் நிர்வாகத் துறைகளுடன் தொடர்பு கொள்ள வகை செய்யப்படுகிறது. நீதிமன்றம் அல்லது நடுவர் மன்றங்களில் கிடைக்க வேண்டிய நிவாரணம் துல்லிதமாக விளக்கப்படுகிறது.

**சமாதானப் பணிகளின் விளைவு:**

வழக்குகளுக்கான செலவு மற்றும் கால விரையங்களை மிச்சப்படுத்தும் வகையில், யோகமான வழிவகை இல்லாத வழக்குகளில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு இடையே வழக்கறிஞர்கள் சமாதானம் செய்து வைக்கிறார்கள். வழக்கின் ஆதாரம் மேலெழுந்தவாரியாகத் தெரிந்தால்தான் சம்பந்தப்பட்ட விண்ணப்பம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதன் ஒவ்வொரு முயற்சியும் தரப்பினர்களுக்கிடையே சமாதானம் செய்து வைப்பதாகவே இருக்கும்.

**வழி வகை ஆய்வு:**

ஆலோசனை வழங்குவதற்கென்று தொடக்க ஆய்வு செய்வதற்கு விண்ணப்பதாரர் தனது வழி வகை குறித்து விண்ணப்பத்தில் குறித்துள்ளதை அப்படியே எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதற்கென்று விரிவான ஆய்வு செய்யப்படுவதில்லை. பிறநேர்வுகளில் வழக்குகளுக்கேற்ப சில நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

**நீதிமன்றம் மற்றும் நடுவர் மன்றம் செல்வதற்கு முன்பாக சட்ட உதவி வழங்கும் விவரம்:**

இது பின்வரும் தலைப்புகளின் கீழ் பரிசிலனை செய்யப்படுகிறது

(1) உரிமை வழக்கு நீதிமன்றங்கள் முன்பாகச் சட்ட உதவி அளித்தல்;

(2) மோட்டார் விபத்து இழப்பீடு கேட்பு நடுவர் மன்றங்கள் போன்ற ஏனைய நடுவர் மன்றங்கள் முன்பாக உதவியளிக்கும் சட்ட உதவி ;

(3) குற்ற வழக்கு நீதிமன்றங்கள் முன்பாக சட்ட உதவி;

(4) சிறைக் கைதிகளுக்குச் சட்ட உதவி ;

(5) படைவீரர்கள் அவர்கள் குடும்பத்தினருக்குச் சட்ட உதவி;

(6) நடைபெற்று வரும் வழக்குகளுக்கு சட்ட உதவி ;

**வழக்கில் மேலெழுந்த வாரியாகத் தெரியும் ஆதாரத்தை ஆய்வு செய்தல்:**

வழக்குரைஞர் மையத்தில் ஆய்வு செய்யப்படுகையில் பிரதிவாதி வரவில்லை என்றால் அல்லது நல்ல முயற்சிக்கு ஒத்துழைக்கவில்லை என்றால் சமாதான முயற்சி தோல்வியுற்றால் விண்ணப்பதாரரின் கேட்பு ஒரு தலைப்பட்ச அடிப்படையில் ஆய்வு செய்யப்பட வேண்டும். இத்தகைய நேர்வுகளில் விண்ணப்பதாரரின் மேலெழுந்தவாரியான வழக்கு ஆதாரங்கள் உட்பட வழக்கிலுள்ள பிரச்சினைகள் ஆய்வு செய்யப்படும்.

**மோட்டார் வண்டி விபத்து இழப்பீடு கேட்பு நடுவர் மன்றம்:**

மோட்டார் வண்டி விபத்திற்கு ஆளான ஒருவர் வழக்கறிஞரின் உதவியைப் பெற முடியாதவராக இருந்தால், அவருக்கு இக்குழு உதவி அளிக்கிறது. விபத்திற்கு ஆளானவர்களைத் தரகர்களும், பஞ்சாயத்தார்களும் சிறிய அதிகாரிகளும் சில நேர்வுகளில் வழக்கறிஞர்களும் சுரண்டுகிற கொடுமையை இக்குழு தவிர்த்து முறையாக உதவுகிறது. விபத்துகளில் மரணம் அடைந்தவர்களுக்கும், கடும் காயம் அடைந்தவர்களுக்கும் உரிய முறையில் நடுவர் மன்றத்தை நாடி தகுந்த இழப்பீடு கிடைக்க இக்குழு உதவுகிறது.

**விசாரணைக் கைதிகள், வழக்கு விசாரணையில் உள்ள கைதிகள், தண்டனை பெற்ற கைதிகளுக்கு உதவும் திட்டம்:**

1977-ஆம் ஆண்டு இக்குழு அமைக்கப்பட்டபோது 'ஆர்கர் சிங்கர் எதிர் ரைமான்ட்' வழக்கில் அமெரிக்க உச்ச நீதிமன்றம் எந்த நபரும் சிறு குற்றத்திற்காக இருந்தாலும், தண்டனைக்குரிய குற்றமாக இருந்தாலும், நீதிமன்ற விசாரணையில் அவரது சார்பில் வழக்குரைஞர் இருந்தாலன்றி சிறையில் அடைக்கப்படக் கூடாது' என்று தெரிவித்துள்ள கருத்து பரிசீலிக்கப்பட்டது.

அதாவது, நீதிமன்றவிசாரணை நியாயமாக இருக்க வேண்டுமாயின் குற்றம் சாட்டப்பட்டவரின் தரப்பை எடுத்துரைக்க வழக்கறிஞர் இருக்க வேண்டும். இது இந்திய அரசியலமைப்பின் 21-ஆவது பிரிவில் சொல்லப்பட்டுள்ள நிலையாகும். எனவே, மாஜிஸ்ட்ரேட் முன்னர் குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்ற விசாரணைசெய்யப்படும்போதும் மேல் முறையீடுகள் விசாரணை செய்யப்படும்போதும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு உதவும் வகையில் திட்டம்ஒன்றைத் தயாரிப்பது நலமாகுமென்று இக்குழு கருதியது. இக்குழு மத்திய சிறைச்சாலைக்கு துறை வழக்குரைஞர் ஒருவரை தற்போது நியமித்துள்ளது. இவர் நாள் தோறும் இரண்டு மணி நேரம் சிறைச்சாலைகளைப் பார்வையிட்டு சட்ட உதவி தேவைப்படுகிற கைதிகளின் பிரச்னை துறை ஆய்வு செய்கிறார். துணைச் சிறைகளைப் பார்வையிடுவதற்கான வழிமுறைகளையும்அவர்கள் தெரிவிக்கிறார்கள். சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் பிரச்னைகளைக் கவனிப்பதுடன் அவர்களது குடும்ப நலனிலும் இக்குழு நாட்டம் கொள்கிறது.

**தமிழ்நாடு திட்டத்தின் முக்கியக் கூறுகள் வருமாறு:**

(1) இக்குழுவின் சட்ட உதவித் திட்டம் சமூக - பொருளாதார திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்களின் வாயிலாக சட்ட உதவியளித்து சட்ட நிவாரணம் அளிப்பதோடல்லாமல், நிர்வாக அமைப்பிலும் நிவாரணம் தேடிக் கொடுக்க இது முயல்கிறது. நாட்டின் ஏழை, எளியவர்களுக்குச் சட்ட உதவி அளிப்பதே இதன் சிறப்புச் செயலாகும்.

(2) இத்திட்டம் செயல்படும் இடங்களில் ஏழையாய் இருப்பவர்களுக்கு வழக்குரைஞர்களைக் கொண்ட ஆலோசனை மையங்களால் சட்ட ஆலோசனை வழங்கப்படுவதோடு, இயலும் இடங்களிலெல்லாம் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குரிய திறம்பட்ட அமைப்பாகவும்விளங்குகின்றன.

(3) ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு மட்டுமே உரிய இந்த வாய்ப்பை இத்திட்டத்தை தகர்க்கக் கூடிய அளவிற்கு ஏழ்மை நிலையில் இல்லாதவர்கள் இவ் வாய்ப்பைத் தவறாகப் பயன் படுத்தக் கூடாதென்பது இவ் வாரியத்தின் நோக்கமாகும்.

(4) இம்முறையினால் குறிப்பிட்ட ஒரு சிலரிடமே வழக்குகள் குவிவதைத் தடுத்து பல வழக்குரைஞர்களுக்கு அவற்றை அளிக்க முடியும்.

(5) அரசின் மானியத்தை இவ்வாரியம் தனக்கு வேண்டிய நிதிக்கு எதிர் நோக்குகிறது;

(6) இவ்வாரியத்தின் நிர்வாகம் நீதித்துறையிடம் உள்ளது.

(7) இத்திட்டத்தின் பிறிதொரு பயன் யாதெனில் பணியை நன்முறையில் பரவலாக்குவதாகும்.

(8) ஒருவருக்குச் சட்ட ஆலோசனை உதவி வழங்குவதா இல்லையா என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு சட்ட அறிஞர்களிடம் வழங்கப்படுகிறது.

(9) நமது சட்டத்தில் குறைபாடுகளை உன்னிப்பாகக் கண்டறிந்து அவற்றை நீக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கும் செயற் குறிப்புகளை அனுப்பி வைப்பதும் நமது சட்ட ஆலோசனை உதவியின் முக்கிய நோக்கமாகும்.

ஜப்பான் கோஹ நகரத்தில் நடைபெற்ற ஆசிய வழக்கறிஞர் முதல் மாநாட்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவரும், தமிழ்நாடு வழக்கறிஞர் மன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் மாண்புமிகு திரு பி.எச். பாண்டியன் அவர்கள் தமிழ்நாடு மாநில இலவச சட்ட உதவி ஆலோசனைக் குழு என்ற பொருள் குறித்து அளித்த உரை.



# தன்னிகரற்ற தன்னிறைவு!

**நெல்லை மாவட்டம்:**



பி.எல்.ராஜேந்திரன்

நம் நாடு விடுதலை பெற்று இத்தனை ஆண்டுகளாகியும் - கிராமங்கள் பல இன்னமும் எத னோடும் தொடர்பற்ற தீவுகள் போலவே விளங்கி வருவதை நாம் மறுப்பதற்கில்லை.

சமுதாய நலத்திட்டம், சமூகக் கல்வித் திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் எனப் பல திட்டங்கள் நிறைவேற்றப் பட்டும்கூட சவலைப் பிள்ளை களாகக் காட்சிதரும் கிராமங்கள் ஏராளம். இந்த நிலை மாறிட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்டதே தன்னிறைவுத் திட்டம்!

குடிநீர் வசதி, சிறுபாலங்கள், இணைப்புச் சாலைகள், ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கான இடுகாட்டுச் சாலை வசதி, சிறு பாசனத் திட்டம், கிராம மருந் தகங்கள், தாய்சேய் நல நிலை யங்கள், பள்ளிக் கட்டடங்கள், ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு வசதி-இவையின்றித் தமிழகத்தில் எந்த ஒரு கிராமமும் இருக்கக் கூடாது என்கிற உன்னத நோக் கில் தீட்டப்பட்ட இந்தத் தன் னிறைவுத் திட்டத்தை நிறைவே அந்தந்த ஊராட்சி ஒன்றியத் தோடு அரசின் நிதியும் இணைந்து செலவிடப்படும்.

இதன்படி, *1980-81*ல் 69 ஊராட்சி ஒன்றியங்களில் தன்னி றைவுத் திட்டம் முதலாவது கட்டமாகச் செயல்படுத்தப்பட் டது.

*1981-82*-ல் இரண்டாவது கட்டமாக 150 ஊராட்சி ஒன்றி யங்களில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வரு கின்றன. இந்தப் பணிகளைப் பற்றி மக்கள் எப்படி உணர் கிறார்கள்-திட்டங்களைச் செயல் படுத்தும் விதம் எவ்வகையில் உள்ளது-குறித்த காலத்தில் அவையாவும் நிறைவு பெற்று விடுமா என்பதைப் பற்றியெல் லாம் நேரில் கண்டறிவதற்காக அண்மையில் திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டோம் நாம்.

**நெல்லை மாவட்டம்:**

கோயில்பட்டி, கயத்தாறு, விளாத்திகுளம், புதூர், ஒட்டப் பிடாரம், சங்கரன்கோயில், மேல நீலித நல்லூர், குருவிக்குளம், வாசுதேவ நல்லூர், பாளையங் கோட்டை மானூர், ஆலங்குளம் கீழப்பாவூர், கடையநல்லூர் தென்காசி, செங்கோட்டை, புதுக் கோட்டை, உடன்குடி, சாத் தான்குளம், திருவைகுண்டம், திருச்செந்தூர், ஆழ்வார் திருநகரி, சேரன்மாதேவி, அம்பாசமுத்தி ரம், கடையம், பாப்பாகுடி, களக்காடு, ராதாபுரம், வள்ளி யூர், நான்குநேரி, கருங்குளம் — ஆகிய 31 ஊராட்சி ஒன்றியங் களைத் தன்னுள் கொண்டது திருநெல்வேலி மாவட்டம்.



பட்டு விட்டதாக் நமக்குத் தெரி விக்கப்பட்ட போதிலும் மேலே குறிப்பிட்ட 12 ஒன்றியங்களில் முதல் மூன்றையும் நேரில் கண்டு வர வேண்டி நெல்லை மாவட்டச் சுற்றுப் பயணம் மேற்கொண் டோம்.

மாவட்ட முழுமைக்குமாக, இரண்டாவது கட்ட தன்னிறை வுத் திட்டத்தின் கீழ் நிறைவேற் றுவதெனத் தீர்மானிக்கப்பட்ட பணிகள் 2,123ல் கடந்த டிசம் பர் 20-ம் நாள் வரையிலே 957 பணிகள் நிறைவேற்றப்பட்டுள் ளதையும், மீதமிருப்பவை இந்த சனவரி அல்லது பிப்ரவரிக்குள் நிறைவு பெற்றுவிடும் வேகத்தி லிருப்பதையும் நம்மால் காண முடிந்தது.



இவற்றில் தன்னிறைவுத்திட்ட முதற்கட்டப்பணிகள் நான்கு ஊராட்சி ஒன்றியங்களில் நிறை வேற்றப்பட்டன.

இரண்டாவது கட்டப்பணிகள் தென்காசி, கடையம், கோயில் பட்டி, மேலநீலிதநல்லூர், கயத் தாறு, மானூர், சேரன்மாதேவி வள்ளியூர், நான்குநேரி, ராதா புரம், தூத்துக்குடி, திருச்செந் தூர் ஆகிய 12 ஊராட்சி ஒன்றி யங்களில் மிக விரைவாக நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

குறிப்பிட்ட பணிகள் யாவும் இந்த ஒன்றியங்களிலெல்லாம் 50 சதவீத அளவு நிறைவேற்றப்

**தென்காசி:**

19 ஊராட்சிமன்றப் பிரிவுகள் உடையதான தென்காசிஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு. பி. கிருஷ்ண மூர்த்தி, உதவி கோட் டப் பொறியாளர் எம். அகமது பஸீர் இருவரும் நமக்கு அப் பகுதியில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வரும் விவரங்கள் பற்றி விளக்கி னார்கள்.


எந்த ஓர் ஊராட்சியும் பாக்கி யில்லாமல் அத்தனை ஊராட்சிப் பிரிவுகளிலுமே இங்கே திட் டங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஒன்றியத்தில் மொத்தத் தில் 197 பணிகள் நிறைவேற்றுவ தெனத் திட்டமிடப்பட்டதில் 97 பணிகள் முழுமையாக நிறைவு பெற்றுள்ளன. மீதமிருக்கும் - பள்ளிக் கட்டடங்கள், சிறு

பாலங்கள், தடுப்புச் சுவர்கள, கிராமப்புற மருந்தகக் கட்ட டங்கள், தாய்சேய் நல மருத்துவ மனைக் கட்டடங்கள்போன்றவை எதிர்பார்த்தபடி சிமெண்ட் கிட்டப் பெறாத தட்டுப் பாட் டால் மேல்பூச்சுக் காத்திருக்கின் றன.

''ஜனவரி 15ஆம் தேதிக்குள் சிமெண்ட் கிடைத்து விடும்; பிப்ரவரி முதல் வாரத்திற்குள் எல்லாப் பணிகளுமே எங்கள் ஒன்றியத்தில் நிறைவேற்றப்படும் என்று பெரிதும் தன்னம்பிக்கை யோடு நமக்குச் சொன்னார் ஒன்றிய ஆணையாளர்.





இந்தப் பகுதிக்கெனத் திட்ட மிடப்பட்ட பணிகள் —60 இணைப்புச் சாலைகள், 126 சிறு பாலங்கள், ஓர் ஆதிதிராவிடர் இடுகாட்டுச் சாலை வசதி, ஒரு சிறு பாசன வசதி, 3 கிராமப்புற மருந்தகம், 5 தாய்சேய் நல மருத்துவ மனை, ஒரு பள்ளிக் கட்டடம் ஆகியவைகளாகும்.

இந்த ஒன்றியத்திலுள்ள குத்து கல் வலசை என்ற கிராமத்தில் மகப்பேறு மருத்துவமனை கட்டு வதற்காக ஊர்மக்களே 5செண்ட் நிலத்தைத் தானமாக அளித்துள் ளார்கள் என்பதோர் பாராட்டுக் குரிய அம்சம்.

தென்காசி ஊராட்சி ஒன்றிய யத்தில் இரண்டாவது கட்டத் தன்னிறைவுத் திட்டப்பணிகளை நிறைவேற்ற என ஒதுக்கப்பட் தொகை ரூ. 37 இலட்சமாகும்.



இப்பகுதியிலேயே மிகப்பெரிய ஊராட்சி வடகரைதான். இங்கே மட்டும் குறிப்பிட்ட பணிகளில் ஏறத்தாழ 30 இடம் பெற்றுள் ளள. இவற்றில் பாதிக்கு மேல் முடிவடைந்திருப்பதை ஒவ்வொரு ஊராட்சியாகப் பயணம் தொடர்ந்த நாம் கண்கூடாகக் கண்டோம்.

**கடையம்:**

அடுத்து நமது பயணம் கடை யம் ஊராட்சி ஒன்றிய இரண்டா வது கட்டத் தன்னிறைவுத் திட் டப் பணிகளைப் பார்வையிடு வதற்கெனத் தொடர்கிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. எம். பத்மனாபன் உதவி கோட்டப் பொறியாளர் திரு ஏ. ஆர். மொகிதீன் இருவரும் நமது வருகையின் நோக்கமறிந்த அப்பகுதித் திட்டங்கள் பற்றி எடுத்துச் சொல்கிறார்கள். நாம் விவாதிககிறோம்.

திட்டப் பணிகளை நிறை வேற்ற இந்த வட்டாரத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 36 இலட்சமாகும்.

23 ஊராட்சி மன்றப் பிரிவு களைக் கொண்ட கடையம் ஒன் யத்தில் ஆழ்வார் குறிச்சி மட்டும் நகரியமாக (டவுன்ஷிப்) உள்ளது. ஏறத்தாழ 76 ஆயிரம் மக்கட் தொகை உடையதான இந்த

ஒன்றியத்தின் பெரும்பான்மை மக்களின் தொழில் விவசாயமே. அதற்கடுத்த இடம் பெறுவதுபீடி சுற்றும் தொழில்.

''பதினைந்து இருபது ஆண்டுக் காலமாக இணைப்புச்சாலைகள் இல்லாமல் இருந்த பகுதிகளுக் கெல்லாம் இங்கே இத்திட்டத் தின் கீழ் இணைப்புச் சாலைகள் போட்டிருக்கிறோம்'' என்று பெருமையோடு நமக்குத் தெரி வித்த திரு பத்மனாபன், 'இந்தப் பகுதியில் இன்னொரு சிறப்பு என்னவென்றால், திட்டங்கள் நிறைவேற்றப்படும் அந்தந்தப் பகுதி மக்களேகூட அந்தந்த இடங்களில் பணிகள் நிறைவே றுவதை ஆர்வத்தோடு கவனிக் கிறார்கள்; வேண்டிய உதவி களும் செய்கிறார்கள்'' என்றும் உற்சாகத்தோடு கூறினார்.

மேட்டூர் தெற்கு ரயில்வே கேட் ரோடு, (கடையம்) என்ற இடத்தில், இணைப்புச் சாலைப் போடுவதைப் பார்வையிடச் சென்றபோது அவர் சொன் னதை நேரிலேயே நாம் காண முடிந்தது.

''ரோலர் நேத்திக்குத் தாங்க வந்தது. கப்பி பரப்புன வேகத் துக்கு முன்னயே வந்திருந்தா இந்த வேலை எப்பவோ முடிஞ்சி ருக்கும்'' என்றார் ஊர்ப் பெரிய வர் ஒருவர். ''ரோட்டுமேல எப் பங்கையா மண்ணு பரப்பறது?'' என்று கேட்டான்'' ஒரு சிறுவன்.

''நாளைக்கே'' என்ற ஆணை யாளர் ''இந்தப் பகுதியில் ஒரே ரோலர் தாங்க இருக்கு; இதுவே எல்லா யூனியனுக்கும் போயாக ணும்'' என்று நம்மிடம் சொன் னார் கவலையோடு.

கடையம் ஊராட்சி ஒன்றியத் தில் இரண்டாம் கட்டத் தன்னி றைவுத் திட்டத்தின் கீழ் நிறை வேற்றப்படவிருக்கும் மொத்தப் பணிகள் 192 ஆகும். அவை நிறைவேற்றப்பட்டுவரும் விவ ரங்களை - ஆம்பூர் கறுத்தபிள் ளையூர் ரோடு, வடமலைபட்டி பண்டாரக் குளம், ஐந்தாம் கட் டளை - நான்காம் கட்டளை, மேட்டூர் தெற்கு ரயில்வே கேட் ரோடு, வடக்கூர் போன்ற பல இடங்களில் நாமே நேரில்சென்று பார்த்து சேகரித்தோம்.

இந்த ஒன்றியத்தில் -25 புதிய இணைப்புச் சாலைகள் 18.4 கி. மீ. தூரம் அமைக்கும் பணி ரூ. 3,82,500-ல் நிறைவேறியுள் ளது. ரூ. 6, 47,200 திட்டத்தில் ஏற்கெனவே இருந்த சாலைகள் 37-ல் (34 கி. மீ. தூரம்) சரல் பரப்பும் பணி நடந்திருக்கிறது. கல்பரப்பும் பணி 32 இடங்களில் (29.3 கி.மீ. தூரத்திற்கு ரூ. 8,88,300 என்ற குறியீட்டில் நிறைவேறி வருகிறது. 88 சிறு பாலங்கள் கட்டும் பணி ரூபாய் 13,97,000 திட்டத்தில் பெரும் பகுதி முடிவு பெற்றிருக்கிறது. பாசனக் குளங்கள் மண் பரா மரிப்புப் பணிக்கென ரூ. 43,000 செலவிடப்பட்டுள்ளது. ரூபாய் 1,24,000 திட்டத்தில் இரண்டு தாய் சேய் நலவிடுதிக் கட்டங்கள் எழுந்துள்ளன. இரண்டு கிராமப் புற மருந்தகக் கட்டடங்கள் ரூ. 1,18,000-ல்உருவாகியுள்ளன.

கட்டடங்கள் தரைப்பூச்சுக்குக் காத்திருக்கின்றன. சிமெண்ட் பற்றாக்குறை.

''உங்கள் ஒன்றியத்தில்பள்ளிக் கட்டடமே இந்தப் பணியின் கீழ் கட்டப்படவில்லையோ?'' என்று கேட்கிறோம்.

''எங்கள் ஒன்றியத்தில் ஏற் கெனவே 27 கட்டப்பட்டுள்ளன. எய்டெட் ஸ்கூல்50-ம் மேல் நிலைப் பள்ளிகள் நான்கும், ஆழ்வார் குறிச்சி நகரியத்தில் கல்லூரி ஒன்றும் இருக் கின்றன. இவை தவிர இப் போது தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒன் பது பள்ளிக் கட்டடங்கள் கட்டப் பட்டு வருகின்றன. அப்பணி களும் இம்மாதமே முடிந்துவிடும் என்று கூறி இரண்டாவது கட்டத் தன்னிறைவுத் திட்டத்தில் இப் பகுதியில் பள்ளிக் கட்டடம் கட்ட எடுக்கப்படாததற்கான காரணத்தைத் தெரிவித்த திரு. பத்மனாபன் ''இப்போதைக்கு இதுவே போதுமானதாக உள் ளது'' என்றும் கூறினார்.

மொத்தம்திட்டமிட்டப்பணிகள் 192-ல் ஏறத்தாழ 88 பணிகள் 27-12-81 வரை முடிவுற்றிருந் தன. மற்றவை சனவரித் திங் களுக்குள்ளேயே நிறைவேறிவிடும் என்று மிகவும் உறுதியாகத் தெரி வித்தார் அவர்.



**கோயில்பட்டி :**

கோயில்பட்டி ஊராட்சி ஒன்றி யத்தில் நமது பயணம் தொடர் கிறது.

ஊராட்சி ஒன்றிய அலுவலகத் திற்குச் சென்று - வட்டார வளர்ச்சி அலுவலர் திரு பி.பேச்சி முத்து, ஆணையர் திரு ஏ. முரு கேசன், விரிவாக்கத் திட்ட அலு வலர் திரு எஸ். பரமசிவம் ஆகி யோரைச் சந்தித்து அப்பகுதியில் நிறைவேற்றப்பட்டு வரும் தன் னிறைவுத் திட்டத்தின் இரண்டா வது கட்டப்பணிகள் குறித்து கலந்து பேசுகிறோம்.

ஒரு நகரியம் (எட்டயபுரம்) உட்பட, மொத்தம் இந்த வட் டாரத்தில் 39 ஊராட்சி ஒன்றி யங்கள் உள்ளன.


தன்னிறைவுத் திட்டத்தின் கீழான-இணைப்புச் சாலைகள் 42 சிறுபாலங்கள் 122, தாய்சேய் நல விடுதி 3, கிராமிய மருந்த கம் 1, ஊராட்சி மன்றக் கட்ட டம் 1 என்று 169 பணிகள் இந்த வட்டாரத்தில் எடுக்கப்பட்டு விரைந்து முடிக்கப்பட்டு வரு கின்றன.

78,489 மக்கட் தொகையுள்ள இந்த ஊராட்சி ஒன்றியத்தின் மொத்தப் பரப்பளவு 41,916.75 எக்டேர் ஆகும்.

இணைப்புச் சாலைகளுக்கென ரூ. 42,50,000 சிறுபாலங்களுக் காக ரூ. 23,57,500 தாய்சேய் நல விடுதிக்கென ரூ. 2,37,000, கிராமப்புற மருந்தகத்திற்கென ரூ. 66,000, ஊராட்சி மன்றக் கட்டடத்திற்கென ரூ. 50,000 என்ற அளவில் நிதி ஒதுக்கப்பட்டு கோயில்பட்டி ஊராட்சி ஒன்றி யத்தில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் துரிதகதியில் நடை பெற்று வருவதை அவ்வப்பகுதி களுக்கே நேரில் சென்று நாம் கண்டோம்.

42 இலட்சம் ரூபாய் திட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணிகளில் சுமார் 70 மட்டுமே நிறைவேறியிருப்பதைக் கண்ட நாம் வேலை மந்தத்திற் கான காரணம் பற்றிக் கேட் டோம்.

''கெடச்ச சிமெண்டுலே இவ் வளவுதான் பண்ண முடிஞ்சிது. எங்கள் ஒன்றியத் திட்டங்களுக் கான சிமெண்ட் ஒதுக்கீடு 1,200 டன்னாகும். அதில் 650 டன் தான் கிடைச்சிது. மீதம் பத்துப் பதினஞ்சி நாள்ல கிடைக்கலாம்.



அதுக்கப்புறம் ஒரு பிடி பிடிச்சம்னா பிப்ரவரி பத்து தேதிக்குள்ளாற எல்லாத்தையுமே கம்ப்ளீட்டா முடிச்சிட எங்களால் முடியும் சார்' என்று பெரிதும் நம்பிக்கையோடு தெரிவித்தார் ஆணையாளர்.

கடலையூர், வேலம்பட்டி ரோடு, வள்ளிநாயகிபுரம், எட்டயபுரம், அஞ்சுரம்பட்டியிலெல்லாம் நடக்கின்ற தன்னிறைவுத் திட்டப்பணிகளையெல்லாம் பார்வையிட்டு விட்டு மஞ்சநாயக்கன்பட்டி வழியே வரும்போது அண்மையில் வெளியான தமிழ்த் திரைப்படம் ஒன்று இப்பகுதியில் தான் பிடிக்கப்பட்டது என்றார் ஊர்தி ஓட்டுநர் செபஸ்தியான்.

''அதென்ன இந்தப் பக்கத்துல அவ்வளவு தண்ணீர்ப் பஞ்சமா?'' என்று உடன் வரும் வட்டார வளர்ச்சி அலுவலரைக் கேட்கிறோம் நாம்.

''அதெல்லாம் சும்மா டூப்புங்க. அதாலதான் இந்தஊர்ப்பேரையே சினிமாவுல மத்தி வெச்சி எடுத்துருங்காங்க. ஒரு போகம் இருபோகம் வெளையற பகுதிங்க இதெல்லாம். அந்த அளவுக்குத் தண்ணி உண்டு. அதபாருங்களேன்..'' என்று சாலையின் இருமருங்கிலும் செழித்து வளர்ந்துள்ள சோளத்தைக் காட்டுகிறார் ஆணையாளர். அவர் சொல்லில் உள்ள உண்மை நமக்குப் புலப்படுகிறது. ரோடெல்லாம் பரப்பி காய வைக்கப்பட்டுள்ள சோளக் கதிரின் மேலாக அல்லாமல் ஜீப்பை வளைத்து வளைத்து ஓட்டவே சங்கடப்படுகிறார் ஊர்தி ஓட்டுபவர்.

சுற்றுப் பயணத் துவக்கத்தில் நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் திரு எம்.கே. தாமோதரன் அடியோடியைச் சந்தித்தபோது அவர் பெரிதும் நம்பிக்கையோடும் உறுதியோடும் சொன்ன சில சொற்கள் நம் நெஞ்சில் நிழலாடுகின்றன—

''இரண்டாவது கட்டத் தன்னிறைவுத் திட்டப்பணிகளை நிறைவேற்றுவதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேகத்தை நல்லாப் புரிஞ்சிகிட்டு எல்லா ஒன்றியத்திலும் வேலைகளை வேகப்படுத்தி வர்றோம் சார். இப்ப ஐம்பது பர்ஸெண்டுக்கு மேல—அதாவது பெரும்பாலும் போன அக்டோபர்ல துவக்கியே முடிச்சிருக்கோம். வர்ற பிப்ரவரிக்குள்ளே எங்க மாவட்டத்துல எல்லா தன்னிறைவுத் திட்டப்பணிகளுமே நிச்சயமா நிறைவேறிடும்!''

பல்வேறு ஒன்றியங்களில் தமிழக அரசின் தன்னிறைவுத் திட்ட இரண்டாவது கட்டப் பணிகள் மிகத் துரிதமாக நிறைவேறி வருவதை நேரிலேயே போய் கண்கூடாகக் கண்ட நமக்கு அவர் சொல்லில் நம்பிக்கை உண்டாகிறது.






# ஆதரவற்றோருக்கு உதவிடும் அரிய தொண்டு!

முர்துசாவியா கல்வி மற்றும் கலாச்சார நிறுவனத்தினரால் ஏற்று நடத்தப்படும் திக்கற்ற மற்றும் உடல் ஊனமுற்ற பெண்டிருக்கு சுய வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கை உள்ளடக்கிய சமூக பொருளாதாரத் திட்டத்தின் துவக்க விழாவும், பள்ளிக் குழந்தைகளுக்கான மூன்று வார இலவச மருத்துவ ஆய்வுத் திட்டத்தின் நிறைவு விழாவும் 19-12-1981 அன்று மாலை சென்னை இராசாசி மண்டபத்தில் வெகு சிறப்புடன் நடந்தேறியது. சமூகப் பொருளாதாரத் திட்டம் சமூக நலத்துறை மற்றும் கனரா வங்கியின் நிதி உதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்றாகும்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மேதகு தமிழக ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள், சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ளோரின் முன்னேற்றத்திற்காகவும், நல் வாழ்விற்காகவும் 25 பல்வேறு திட்டங்களை ஏற்று திறம்பட செயல்படும் முர்துசாவியா கல்விமற்றும் கலாச்சார நிறுவனத்தைப் பாராட்டினார். பிறரைப் போலவே ஆசைகளையும் நம்பிக்கைகளையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் உடல் ஊனமுற்றோரும் தங்களுக்கு மிகவும் அடிப்படையாகத் தேவைப்படும் உணவு, உடை, உறையுள்பெற்று நல்வாழ்வு நடத்த ஏற்பாடு செய்வதும் மக்கள் தொகையில் பத்து சதவீதமுள்ள குழந்தைகளுக்கு நோய் நொடியற்ற பயனுள்ள வாழ்வைக் கொடுப்பதும் அரசு மற்றும் சமூகத்தினரின் தலையாய கடமை என்று மேதகு ஆளுநர் எடுத்துரைத்தார். பள்ளிக் குழந்தைகளுக்கான இலவச மருத்துவ ஆய்வுப் பணியில் தாமாக முன் வந்து பணியாற்றிய மருத்துவர்களுக்கு நற்சான்றிதழ்களையும் மேதகு ஆளுநர் அவர்கள் வழங்கினார்.


விழாவிற்கு தலைமை தாங்கிய மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு கா. இராசா முகம்மது அவர்கள் சமுதாயத்தில் பின்தங்கியுள்ளோரை முன்னுக்கு கொண்டுவர தொடர்ந்து முனைப்புடன் செயல்படும் நிறுவனத்தைப் பாராட்டி, கல்வி, பண்பாடு மற்றும் மதம் ஆகிய துறைகளில் 1952 விருந்து ஆண்டொன்றுக்கு 4,000 பேருக்கு அறிவை ஊட்டி வரும் இந்நிறுவனம் திக்கற்ற மற்றும் உடல் ஊனமுற்றோருக்கும் உதவ முன்வந்திருப்பதை பாராட்டினார். இத்தகையோருக்கு சுயவேலை வாய்ப்பளிக்க இந்நிறுவனம் நடத்தும் எல்லாத் திட்டங்களுக்கும் அரசின் ஊக்கமும் உதவியும் கிடைக்கும் எனவும் உறுதியளித்தார்.

திக்கற்ற மற்றும் உடல் ஊனமுற்ற 20 பெண்களுக்குப் புது தையல் இயந்திரங்களை திரு. அகமது யாசீன் அவர்கள் வழங்கினார்.

விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசுகையில் நிறுவனர் - தலைவர் டாக்டர் எஸ். கே. காதிரி அவர்கள், சமுதாயத்தின் பல முறை கேடுகளின் ஆணி வேர் ஏழ்மை ஆகையால் அவ்வேழ்மையின் கோரப்பிடியிலிருந்து ஏழைகள், திக்கற்றோர் மற்றும் உடல் ஊனமுற்றோரை விடுவிக்க எந்தவித மத, மொழி மற்றும் இனவேறுபாடின்றி முர்துசாவியா கல்வி மற்றும் கலாச்சார நிறுவனம் தன் 25 நிறுவனங்களின் மூலம் தொடர்ந்து பணிபுரிவதாகவும், திக்கற்ற மற்றும் உடல் ஊனமுற்ற 20 பெண்களுக்குப் புதிய தையல் இயந்திரங்களை இவ்விழாவில் வழங்கியிருப்பது அத்தகைய அரும்பணியின் ஓர் அம்சமாகும் எனவும் எடுத்துரைத்தார்.

திரு. சையத் அலி நவாஸ் நன்றி கூற விழா இனிது நடந்தேறியது.






# 'தாய்' பெற்ற தனிச் சிறப்பு!

**திரு கா. லியாகத் அலிகான்**
தலைவர்,
தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம்.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் 1966-ஆம் ஆண்டு ரூ. 4 கோடி மூலதனத்துடன் நிறுவப்பட்டது. தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் என்னும் பொருள்தரும் வகையில் இதனை 'தாய்' ( Tai ) என்று சுருக்கமாக அழைக்கிறோம்.

வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளம் போன்ற தொழில்களையும், அவற்றைச் சார்ந்த தொழில்களையும், உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழில்களையும், ஊக்குவித்தல் ஆகியவை இக்கழகத்தின் நோக்கமாகும்.

கோழி வளர்ப்பு, கால்நடை பராமரிப்பு இவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு 'லூசரின் என்ற குதிரை மசால் தொழிற்சாலை ஒன்றினை இக் கழகம் உடுமலைப் பேட்டையில் நிறுவியுள்ளது. இத்தொழிற்சாலையை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் அதன் அருகாமையில் 2,00,360 ரூபாய்க்கு மூன்று ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள விவசாயிகள், குறிப்பாகக் குடிமங்கலம், வாளவாடி, பூலாங்கினர், அந்தியூர், ராகல்பாவி ஆகிய கிராம விவசாயிகள் நிரந்தரமாகக் குதிரைமசால் இலையை இக்கழகத்திற்குத்தருவதாக இருந்தால், தற்போது டன் ஒன்றுக்குத் தரப்படும் ரூ. 110-லிருந்து, ரூ. 125 ஆக உயர்த்தித் தரப்படும். இதுபோன்று தொழிற்சாலை மூலப்பொருளைக் கணக்கிற் கொண்டு, விரைவில் இப்பகுதியில் ஏற்படுத்தப்படும்.

மீன் வலைகளைத் தயாரிக்கும் நான்கு இயந்திரங்களைக் கொண்ட தொழிற்சாலை ஒன்றினை இக்கழகம் 1976-ஆம் ஆண்டு துவக்கியது. 1978-ஆம் ஆண்டு, மற்றும் ஓர் இயந்திரம் வாங்கப்பட்டதின் மூலம் உற்பத்தித் திறன் 50 மெட்ரிக் டன்னிலிருந்து 60 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. இந்தத் தொழிற்சாலையில் நைலான் நூலினாலும், பாலிதின் நூலினாலும் தயாரிக்கப்பட்ட மிக நுண்ணிய வலையிலிருந்து, மிகக் கெட்டியான வலைகள் வரை, தயாரிக்கப்படுகின்றன.

ஏழை மீனவர்களின் தேவையை நிறைவுசெய்வதிலும், மீன் பிடித்தலை நவீன மயமாக்கும் முயற்சியிலும் இக்கழகம் வெற்றி பெற்று வருகிறது.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை விவசாயிகளுக்கு வழங்கி வந்த இத் தொழிற்கழகம் தற்போது Be Indian; Buy Indian என்பதற்கேற்ப நமது நாட்டிலேயே தயாரிக்கப்படும் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்ட டிராக்டர்களையும், பவர் டில்லர்களையும், விவசாய வங்கிகளின் பண உதவியுடன், விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப வழங்கிவருவது குறிப்பிடத் தக்கதாகும்.

விவசாயிகளின் டிராக்டர்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்களை விவசாயிகளுக்குத் தரும் பொருட்டு சென்னை, பண்ருட்டி, மதுராந்தகம், திருச்சிராப்பள்ளி, மதுரை, மாயவரம், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், பாண்டிச்சேரி ஆகிய விற்பனை நிலையங்கள் மூலம் சிறப்பான முறையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

1976-ஆம் ஆண்டு 9.79 லட்சம் முதலீட்டில் அம்பத்தூரில் நிறுவப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துத் தொழிற்சாலை மூலம், தரமுள்ள பூச்சிக்கொல்லி மருந்தை இக்கழகம் தயார்செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறது. பெருகி வரும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தேவையை சடுகட்ட ரூ. 4 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்ட 2-வது தொழிற்சாலை நவம்பர் 1981-லிருந்து உற்பத்தியைத் துவங்கியுள்ளது.


நமது இந்தியத் திருநாட்டில் உபயோகப்படுத்தப்படும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் மொத்த அளவில், தென்னிந்திய மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்கள் மட்டும் சுமார்50சதவிகித அளவிற்குப் பயன்படுத்துகின்றன. தென் மாநிலங்களின் வேளாண் தொழில் கழகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து சுதர்சன் பெஸ்டிசைட்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் ( Spec )

என்ற புதியதொரு நிறுவனத்தை ஆந்திர மாநிலம் கோலூரில் ஏற்படுத்த உள்ளன. இந்தப் புதிய தொழிற்சாலை ரூ.1 கோடியே 80 இலட்சம் செலவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. அதில் தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் ரூ. 26 இலட்சம் முதலீடு செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

குறைந்த விலையில் தரமுள்ள ரசாயன உரங்களை 'தாய்' நிறுவனம் விற்பனை செய்து வருகிறது. சூரியகாந்தி விதையை நியாயமான விலை கொடுத்து வாங்குவதால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவும், மக்களுக்குக் கொழுப்புச் சத்துக் குறைந்த எண்ணெய் கிடைக்கவும் வழி வகுக்கும் வகையில், சுமார் ரூபாய் 56 லட்சம் செலவில், போச்சம் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள எண்ணெய் பிழியும் தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய 60 டன் வரை எண்ணெய் பிழிந்து உற்பத்தி செய்து, 'சனோலா' என்ற பெயருடன் பாட்டில்களில் அடைத்து 1 கிலோ, 5 கிலோ எனும் அளவில் விற்பனை செய்து வருகிறோம். விலையைக் குறைக்கும் பொருட்டு இந்தியாவிலேயே முதன் முதலாகப் பாலிதீன் பைகளில் சூரியகாந்தி எண்ணெய்யை 1981 ஏப்ரலிலிருந்து விற்பனை செய்து வருகிறோம். தற்போது 12 ஆயிரம் டன் நிலக்கடலையிலிருந்து எண்ணெய் பிழிய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இதன் மூலம் வருடம் 26 லட்சம்ரூபாய் லாபம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உரிமம் கொடுத்த மத்திய அரசுக்கும், இந்த உரிமத்தைப் பெற்றுத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களுக்கும், தொழிற்துறை அமைச்சர் அவர்களுக்கும் கார்ப்பரேஷன் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 'சனோலா' என்னும் சூரியகாந்தி எண்ணெய் ரத்தக் கொதிப்பு நோய் உள்ளோர்க்கும் கொழுப்புச்சத்து உள்ளோருக்குகும், குறிப்பாக வயதானவர்களுக்கும், குழந்தைகளுக்கும் மிகச் சிறந்ததாகும்.

சூரியகாந்தி விதைகளை பயிரிடுபவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும் வகையில், இந்த விதைகளை டன் ரூபாய் 3,500, லிருந்து ரூபாய் 4,000 வரை வாங்கப்படுகிறது. எனவே எப்பருவத்திலும் பயிராகும் இச் சூரியகாந்தி விதையை விவசாயிகள் பயிர் செய்து பயன் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.



பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் பிழியும் தொழிற்சாலை ரூ. 21 இலட்சம் செலவில் நாமக்கல்லில் நிறுவப்பட்டது இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 25 டன் பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுக்கவும், அல்லது 15 முதல் 20 டன் அரிசித்தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன, பழுதுபட்டுள்ள கொதிகலன் சரி செய்யப்பட்டு இது தனது, உற்பத்தியை மார்ச்சு முதல் வாரத்தில் துவங்கும். புதுக்கோட்டை மாவட்டத்தில் புனரக் குளத்தில் இதைப்போலவே இரு மடங்கு திறன் கொண்டு அரிசித் தவிட்டிலிருந்தும், பிண்ணாக்கிலிருந்தும் எண்ணெய் பிழியும் மற்றுமொரு தொழிற்சாலை ரூ. 90 இலட்சம் முதலீட்டில் கட்டி வருகிறோம். ஏறக்குறைய 27 இலட்சம் ரூபாய் முதலீடு செய்துள்ளோம். தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களது கட்டளைப்படி இதனை 1982 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதியில் செயலுக்குக் கொண்டு வர முயன்று வருகிறோம். இத்தொழிற்சாலை மற்றும் இதனால் ஏற்படும் துணைத்தொழில்கள், ஆகியவற்றின் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏறக்குறைய 500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடும்.

இந்த நிறுவனம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு கடந்த 1980-81 ஆம் ஆண்டு தமது ஊழியர்களுக்குப் போனஸ் வழங்கிய பிறகும் ரூ. 2 இலட்சத்துக்கு மேல் நிகர லாபம் ஈட்டியுள்ளது. இந்த இணையகத்தில் பணி புரியும் திறமை மிக்க பொறியியல் வல்லுநர்களாலும், மற்றும் விற்பனையாளர்களாலும், அலுவலர்களாலும், பணியாளர்களாலும் நிர்வாகக் குழுவின் சீரிய அறிவுரைகளாலும், இந்த அக்ரோ நிறுவனம் முந்தைய காலத்தை விட, தற்போது மிகச் சிறபாகச் செயல்பட்டு, வருகின்றது. இந்த இணையகத்தின் முக்கிய குறிக்கோள் லாபம் சம்பாதிப்பது அல்ல. திறம்படச் செயலாற்றுவது, தரமான பொருள்களைத் தயாரிப்பது, நவீன விவசாயக் கருவிகள் தருவித்து ஏழை நடுத்தரவிவசாயிகளுக்குக்கொடுப்பது, கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் தீவனமாக அளிப்பது, விலை ஏற்றத்தைத் தடுப்பது போன்றவற்றைக் கொள்கைகளாகக் கொண்டு இந்த நிறுவனம் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. வளரும் தமிழகத்தில் தமிழ்நாடு அக்ரோ இணையகம் ஒரு சேவை நிறுவனமாக உழைத்து. தனது பணியை ஆற்றி வருகிறது. அதனை ஊக்கப்படுத்தும் வகையில், இந்நிறுவனத்திடம் கடன் பெற்றுள்ள அனைத்து விவசாயிகளும் தங்கள் கடனைச்செலுத்தி இதன் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளும்படி, தலைவர் என்ற முறையில் அன்புடன் வேண்டி, வளர்ந்து வரும் தமிழகத்தை வாழ்த்துகிறேன்.

**6-12-81-ல்**
**வானொலியில்**
**ஆற்றிய உரை**

# குமரியில் தன்னிறைவுத் திட்டம்

கிராமங்களின் வளத்தைப் பொறுத்தே நகரங்களின் வளம் அமைகிறது. கிராமம்-நகரம் இந்த இரண்டின் வளமே ஒரு நாட்டின் வளமும் நலமும் ஆகிறது.

இந்த உயரிய தத்துவத்தின் அடிப்படையில் — தமிழகத்துக் கிராமங்கள் அனைத்தும் எந்தக் குறையும் இல்லாததாக இருக்க வேண்டும் என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது தான் தன்னிறைவுத் திட்டம்.

தன்னிறைவுப் பாதையில் தமிழகக் கிராமங்கள் எல்லா நிறைவும் பெற்றுப் பொலிவுறவேண்டும் என்ற குறிக்கோளுடையதான இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள 376 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படுவதென்பது சாத்தியமல்ல.



எனவே இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக 69 ஒன்றியங்களிலும், இரண்டாவது கட்டமாக 150 ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டது; செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தச் சீரிய திட்டம் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் மிகுந்த அக்கறையோடும் ஆழ்ந்த நிதானத்தோடும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

தன்னிறைவுத் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகள் எவ்வாறு நிறைவேறி வருகின்றன என்பதை நேரிலேயே கண்டுணர்வதற்காக அண்மையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டோம்.

இரண்டாவது கட்டத் தன்னிறைவுத் திட்டப் பணிகளுக்கென, குமரி மாவட்டத்தின் நிதி இலக்கு ரூ. 84.52 இலட்சமாகும். கடந்த அக்டோபர் வரை அத்தொகையில் ரூ. 10.80 இலட்சம் செலவிடப்பட்டு குறிப்பிட்ட பணிகளில் 13 சதவிகிதம் நிறைவேற்றப் பட்டிருப்பதாக அரசின் குறிப்பு தெரிவிக்கிறது.

இம் மாவட்டத்தில்— தோவாளை, அகஸ்தீஸ்வரம், ராஜாக்கமங்கலம், குருந்தங்கோடு, கிள்ளியூர், தக்கலை, திருவட்டாறு, மேல்புரம், முன்சிறை ஆகிய ஒன்பது ஊராட்சி ஒன்றியங்களே உள்ளன.

இவற்றில் — அகஸ்தீஸ்வரம், ராஜாக்க மங்கலம், குருந்தங்கோடு, கிள்ளியூர் முன்சிறை ஆகிய ஐந்து ஒன்றியங்களிலும் தன்னிறைவுத் திட்டத்தின் முதற் கட்டப் பணிகள் நிறைவேற்றப் பட்டுவிட்டன.

இரண்டாவது கட்டத் தன்னிறைவுத் திட்டப் பணிகளைச் செயல்படுத்தவென தோவாளை, மேல்புரம் ஆகிய இரண்டு ஒன்றியங்களே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் உள்ளடக்கிய நவரத்தினம் போன்ற உயரிய ஒன்பது திட்டங்களில் குமரி மாவட்டத்தில் நிறைவேற்றப் பட்டு வரும் திட்டங்கள் பற்றிய விவரம் கீழ்வருமாறு:

இம் மாவட்டத்தில் 52.20கி.மீ இணைப்புச் சாலைகள் போடுவது என்கிற திட்ட இலக்கில், ரூ. 8,94,063 செலவில் 30.12.81 வரை 10.8 கி.மீ. சாலைகள் போடப்பட்டுள்ளன.

1.10 கி.மீ. தூரத்தில், ஆதி திராவிடர்கள் மயானம் செல்லும் சாலை வசதி செய்யப்பட்டு வருகிறது.

62 சிறு பாலங்கள் இம்மாவட்டத்தில் கட்டுவதென்ற திட்ட இலக்கில், மேற்குறித்த தேதி வரை 28 சிறுபாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

சிறுபாசன வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் 56ல் 9 நிறைவேறியுள்ளன.

18 குடிநீர் வசதித் திட்டங்கள் என்ற குறியீட்டில் 24 இலட்சம் ரூபாய் செலவில் 2 திட்டங்கள் முடிக்கப்பெற்றுள்ளன.

ஆதி திராவிடர்களுக்கு 200 வீடுகள் கட்டித் தருவது என்கிற திட்ட இலக்கில் கடந்த டிசம்பர் வரையில் 171 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் வீடுகளுக்கு மின் வசதி என்ற திட்டத்தின் கீழ் - தகுதியோடு பெறப்பட்ட விண்ணப்பங்கள் 424 ஆகும்.

—ராஜ்





குமரி மாவட்டத்தில், இப்பணி அனைத்தும் கடந்த அக்டோபரி லேயே நிறைவேற்றப்பட்டுவிட்டி ருக்கின்றன.

குமரி மாவட்ட ஆட்சித்தலை வர் அலுவலகத்தில் பெற்ற இந்த புள்ளிவிவரங்களைப் பத்திரப் படுத்துகிறோம். இரண்டாவது கட்ட தன்னிறைவுத் திட்டப் பணிகள் நிறைவேறிவரும் தோவாளை, மேல்புரம் ஆகிய இரு ஒன்றியங்களில் ஏதேனு மொன்றை அவ்வப்பகுதிகளுக்கு நேரில் சென்று காண விருப்பம் தெரிவிக்கிறோம்.

''எங்கள் ஒன்றியத்தை வந்து பாருங்கள்'' என்று, தோவாளை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. எஸ். தங்கப்பன், ஒன்றியப் பொறியாளர் திரு. ஜே. தங்க ராஜ் டேவிட் இருவரும் நம்மை அழைக்கிறார்கள்.செய்திமக்கள் தொடர்பு உதவி அலுவலர் திரு. பஷீரும் உடனிருந்து நாம் சில பல விவரங்களைப் பெற உதவு கிறார்.

தோவாளை ஊராட்சி ஒன்றி யத்தில் நமது பயணம் கொளுத் தும் வெய்யிலில் தொடர்கிறது.

இந்த ஒன்றியத்தில், பணி நடப்பதாகக் குறிப்பிடப்பட்ட பகுதிகளிலெல்லாம் ஆண்களும் பெண்களும் ஏதோ தங்கள் சொந்தப் பணிகளில் போல ஆர் வத்தோடு ஈடுபட்டிருப்பதை நம் மால் காணமுடிந்தது. வெளியே இருந்து வரும் கூலி ஆட்கள் மட் மல்லாமல் அந்தந்தக் கிராமத்தி லுள்ள வீட்டு மக்களே—குறிப் பாக வசதி படைத்த வீட்டு மக் களே கூட சில பகுதிகளில் திட் டப்பணிகளில் பெரு விருப்போடு ஈடுபட்டிருந்தார்கள்.

''எங்கும் வேலைகள் முடிவுற் றிருப்பதாகத் தெரிய வில்லையே?'' என்று நாம் குறை பட்டுக்கொள்ள-ஒன்றியப் பொறி யாளர், பல்வேறு ஆதாரப் பொருட்களைச் சேகரித்துக் கொள்ளவே சிறிது தாமத மாகி விட்டதென்றும், கடந்த அக்டோபருக்கு மேல் தான் பெரும்பாலான பணிகளே துவக்கப்பட்டன என்றும், எல்லா வற்றையுமே பிப்ரவரி கடைசிக் குள் முடித்துவிட முடியுமென்றும் நமக்கு நம்பிக்கையோடு தெரி விக்கிறார்.

தன்னிறைவுத் திட்ட இரண் டாவது கட்டப் பணிகளில் குமரி மாவட்டத்தில் எதுவுமே முடிந்த பாடில்லையா என்றால், சில பணி கள் நிறைவேறியுள்ளதை நம் மால் மறுக்கமுடியாது.


6.15 இலட்சம் ரூபாய் மதிப் பீட்டில் இப்பகுதியில் 39 சிறு பாலங்கள் கட்டுவது என்கிற திட்ட இலக்கில் 14 பாலப்பணி கள் நிறைவேறியுள்ளன.

ஒரு லட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபாய் செலவில் 7 சிறு பாசன மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றுவதென்ற குறியீட் டில் இரண்டு முடிவுற்றிருக்கிறது.

12.82 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 34 இணைப்புச் சாலைகள் போடப்பட வேண்டும் என்பதில் 6 சாலைகள் அமைக் கப்பட்டுள்ளன.

இவற்றில் மீதமுள்ள பணி களும்...

ரூ. 11.25 இலட்சம் செலவில் 9 பள்ளிக் கட்டிடங்கள்கட்டுவது, ரூ. 2 இலட்சத்து 24 ஆயிரம் செலவில் 4 தாய் சேய் நலவிடுதி கள் கட்டுவது, ஆதி திராவிடர் இடுகாட்டுப்பாதை வசதிகள் மூன்றை 89 ஆயிரம் ரூபாய் செல வில் நிறைவேற்றுவது போன்ற மற்ற பணிகளும் குமரிமாவட்டம் தோவாளை ஊராட்சியில் மிக விரைவாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



# இளைய பாரதம்

தொகுப்பு : **தமிழ்ப்பித்தன்**

பாரதி நூற்றாண்டு விழாவின் இரண்டாம் நாளான 12.12.'81ல் வலம்புரி ஜான் அவர்களின் தலைமையில் இளைஞர்கள் பங்கு பெற்ற 'இளைய பாரதம்' என்னும் நிகழ்ச்சி நடை பெற்றது.

தலைமை ஏற்ற வலம்புரி ஜான் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''பாரதி வாழ்ந்த காலத்தில் 30 கோடிப் பேர் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களில் அவருக்கு மட்டும் தான் நூற்றாண்டு விழா வருகிறது. காரணம், அவர், வாழ்க்கையை நம்பிக்கையின் அடிப்படையில் நடத்தினார். சிலர் வாழ்வதற்காகச் சாகிறார்கள். சிலர் சாவதற்காக வாழ்கிறார்கள்.

''பாரதி, தனது வாழ்க்கையிலே வெற்றி பெற்றான் என்று சொல்ல முடியாது. வெற்றிக்கு அவனது வாழ்க்கையில் எங்கே இடம் இருக்கிறது?

''விடுதலைக்கு அவன் குரல் கொடுத்தான். அவன் கேட்டபோது விடுதலை கிடைக்கவில்லை. இந்தியா என்றொரு பத்திரிகையை நடத்தினான்; அது வெற்றியடையவில்லை. சீட்டுக்கவி எழுதிச் சில்லறை சேர்க்க நினைத்தான், அதிலும் தோல்வியுற்றான்.

''கவிதைப்போட்டிக்கு'செந்தமிழ் நாடெனும் போதினிலே 'என்னும் கவிதையை அனுப்பினான். அதில் மூன்றாம், பரிசுதான் அவனுக்குக் கிடைத்தது.

''கவிராஜன் என அவன் நிமிர்ந்தான்; கடன்காரன் அவன் முதுகில் ஏறினான்.

''வாழ்நாள் முழுதும் தோல்விகண்ட ஒரு புலவன் அவன். என்றாலும் நாட்டுக்கு -நல்லவர்களுக்கு-தமிழ்ச் சமுதாயத்திற்கு-அகிலத்துக்கு அவன் எடுத்துச் சொன்னது ''எடுத்த காரியம் யாவினும் வெற்றி'' என்பதுதான். அதுதான் பாரதி! எந்தக் கவிஞனுக்கும் அவன் இளைத்தவனல்ல - சளைத்தவனல்ல.

''விடுதலை என்பது என்னவென்று சொல்லிச் சென்றவன் பாரதிதான்.'

''அதிகாரம் கைக்கு மாறுவது சுதந்திரமல்ல என்று தெரிவித்தான்.வையத்தலைமை, மாநிலத் தலைமை பாரதிக்கு உண்டு. அவன் எழுதிவிட்டுப் போகவில்லை-எழுதியபடி வாழ்ந்து காட்டிப் போனான்."

அவருக்குப் பின்னர், செல்வி லலிதா தரிணி 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுகையில், குறிப்பிட்டார்:

''பாரதி மானுட சக்தியைப் பாடினான். ஷெல்லி தாசனாக தன் வாழ்க்கையைத் தொடங்கிய பாரதி ஷெல்லியைப்போல நாத்திகனாக இருக்கவில்லை. ஆத்திகர்களுக்காகவும் குரல் எழுப்பினான்''

அடுத்து, 'இளைய பாரதத்தினாய் வா, வா' என்ற தலைப்பில் உரையாற்றிய செல்வன் எஸ். திருமகன் குறிப்பிட்டார்:

''தெய்வத்திடம் வ்ரம் கேட்டான் பாரதி. தனக்காக அல்ல; தனது சுற்றத்தினருக்காக அல்ல. நாட்டின் நன்மைக்காக!

கல்லை வயிரமணி ஆக்கல் - செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல்-வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல்-பன்றிப்
போத்தைச் சிங்கவே றாக்க-

வேண்டும் என்று கேட்டார். இவை எல்லாம் இளைஞர்களை ஊக்குவிப்பதற்காக.

"புதிய ஆத்திசூடி படைத்தான் பாரதி, ஔவை,'அறம்செய விரும்பு' எனத் தொடங்கியிருந்தாள்; அவன் ,''அச்சம் தவிர்' எனத் தொடங்கினான்."

அடுத்து, 'கொடுமையை எதிர்த்து நில்' என்ற தலைப்பில் உரையாற்றிய செல்வி ஹேமா குறிப்பிட்டார்:

''அக்காலத்தின் தேவை எதுவென அறிந்து அதைப்பாடினார் பாரதி. நாட்டு மக்கள் அச்சத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்தனர். அதனால், வீரம்தான் தேவை என உணர்ந்து அதனைப் பாடினார்.

''கொடுமையை எதிர்த்தார்; குழந்தைகளுக்கு அறிவுரை கூறும் போது'கொடுமைக்கு விலகி நில்' என்று சொல்லி வந்தார்.

பாதகம் செய்பவரைக் கண்டால்-நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா.
மோதி மிதித்துவிடு பாப்பா-அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா-

என்றுபாடினார்

''வறுமைக் கொடுமை, அறியாமைக் கொடுமை, ஜாதிக் கொடுமை, பெண் எதிர்ப்புக் கொடுமை—இப்படி பட்டியல் நீளுகிறது.

அத்தனை கொடுமைகளையும் எதிர்த்து நின்றவர் பாரதி''

அடுத்து, 'என்று தணியும் இந்த சுதந்தர தாகம்?' என்ற தலைப்பில் உரையாற்றிய செல்வன் டி. ராமலிங்கம் குறிப்பிட்டார்:

''அக்கினிக் குஞ்சு ஒன்று இந்த எட்டையபுர மண்ணிலே அவதரித்தது. அது பிறந்தவுடன் தாகம் எடுத்து அழுதது. அதன் கண்ணிலிருந்து பெருகி வந்த கண்ணீர் சுதந்தரப் பயிரை வளர்த்தது.

தண்ணீர் விட்டோ வளர்த்தோம்-
சர்வேசா இப்பயிரை
கண்ணீரால் காத்து நின்றோம்
கருகத் திருவுளமோ.
—என்று பாடினார் பாரதியார்

''ஒவ்வொரு குழந்தையும் குறிக்கோளுடன் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று விரும்பினார். அடிமைத் தனத்தின் மோகம் போக வேண்டும். சுதந்த்ர தாகம் தீரவேண்டும் என்று கூறினார். எல்லோரும் சமம் என்ற நிலை ஏற்பட்டால்தான் அவரது தாகம் தெளியும். பாரதி எண்ணியது எல்லாம் என்று நடைபெறுகிறதோ அன்றுதான் அவன் தாகம் தணியும்''.

அடுத்து, 'அன்பு கனிந்த கனிவே சக்தி' என்ற தலைப்பில் உரையாற்றிய செல்வி சுதா சேஷய்யன் குறிப்பிட்டார்:

''அன்பே சிவம் என்றார் திருமூலர். அன்பு கனிந்த கனிவே சக்தி என்றார் பாரதியார்.

"இறைவனை நான்கு வகையான மார்க்கங்களால் வணங்கலாம். தாசமார்க்கம், சத்புத்திர மார்க்கம், சகாமார்க்கம், சன்மார்க்கம் என்பவைதான் அவை.

"இறைவனை ஆண்டானாக எண்ணிப் பாடுதல் தாசமார்க்கம், அம்மையப்பனாக எண்ணிப் பாடுதல் சற்புத்திர மார்க்கம், தோழனாக எண்ணிப் பாடுதல் சகாமார்க்கம், தலைவனாக - நாயகனாக எண்ணிப்பாடுதல் சன்மார்க்கம்.

"பாரதியார் இந்த நான்கு மார்க்கங்களிலும் இறைவனை வணங்கினார்.

"அன்பு என்ற உணர்வு உள்ளத்தில் எழுந்து பொங்க, இறை அன்பைப் பாடிய புலவர்களில் உச்சக் கட்டத்தை எட்டிப் பார்த்தவர் பாரதியார்.

"மக்களிடம் மட்டுமல்ல, எல்லா ஜீவன்களிடமும் ஒவ்வொரு உயிரிடமும் அன்பின் ஆழத்தைக் கண்டவர் பாரதி. இறைவனைக் காண அன்பை அடிப்படையாக வைத்தார் பாரதி. கருத்துக்கும் கற்பனைக்கும் செயலுக்கும், சக்திக்கும் அடிப்படை அன்புதான்."

அடுத்து, 'எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே' என்னும் தலைப்பில் உரையாற்றிய செல்வன் வி.ராமசுப்பிரமணியம் குறிப்பிட்டார்:

"பாரதி பலருக்கும் புரியாத புதிராக இருந்தான். மாறுபட்ட கருத்துக்களைப் பாடி வந்த பேராசான் பாரதி.

"ஆங்கிலேயனுக்கும் இந்தியனுக்கும் வாக்குவாதம் நடை பெறுவதாக ஒரு பாடல் எழுதினான்.

"சாதிச் சண்டை போச்சோ' என்று ஆங்கிலேயன் கேட்கிறான். உடனே, 'ஆயிரம் உண்டிங்கு சாதி, எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி'', என்று இந்தியன் குமுறுகிறான்.

''தமிழா நீ தமிழ்ப் பற்று வை!'' என்று பாரதி சொன்னான். இவ்வாறு தமிழனைப் பார்த்துச் சொல்லக் கூடிய நிலையில் தான் தமிழன் அன்று இருந்தான்.

"நீ இந்தியன் என்ற நிலையில் வெளியில் வா! அதற்கும் மேலே மனிதன் என்ற நிலையில் வா என்று சொன்னார் பாரதி..



"படைக்கப்பட்ட பொருள்கள் அனைத்திலும் பரந்தாமன் இருக்கிறான் எனச் சொல்லியவர் பாரதி. உயிருள்ளவை - அல்லாதவை என்று பேதம் காட்டவில்லை - நீள்கடலும் மலையும் நமது கூட்டம் என்று பேசினார். ஆன்மிக வாதத்தில் மற்றவர்களிடமிருந்து அவர் மாறுபட்டார்."

தலைமை ஏற்ற வலம்புரி ஜான் அவர்கள் தமது முடிவுரையில் குறிப்பிட்டதாவது:

''கணக்கு மூளையைச் சோதிக்கிறது; கவிதைதான் இதயத்தைத் தொடுகிறது. இங்கு பேசிய இளைஞர்கள் காலக் காற்றின் நடுவே நம்பிக்கை விளக்கை ஏந்தி வருகின்றார்கள். தமிழ்ச் செடியின் வேர் பழமையானது. அதில் பூக்கின்ற பூக்கள் புதுமை நிறைந்தவை. அதற்குப் பாரதிதான் சான்றாக இருந்தான்.

''இலையில் சாப்பிடுவது வேறு, இலையையே சாப்பிடுவது என்பது வேறு. அந்த வேறுபாட்டை பாரதி எடுத்துச் சொன்னான்.

''இன்று புதிய சிந்தனைகள் வளர்ச்சியுற்று வருகின்றன; அவற்றை நாம் ஒதுக்கிவிட இயலாது. தமிழ்ச் செடியில் அவை புது மலர்களாகக் காட்சி தருகின்றன."

# கல்கத்தாவில் பாரதி நூற்றாண்டு விழா

கல்கத்தாவில் மகாகவி பாரதி நூற்றாண்டு விழா 19-12-81 அன்று மேற்கு வங்க ஆளுநர் மேதகு பி. டி. பாண்டே அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. ''மகாகவி பங்கிம் சந்திரரின் வந்தே மாதரம் பாடலை முதன் முதலில் மொழிபெயர்த்தார் என்றும் ''வங்கம் பாரதியின் வாழ்வில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றது'' என்றும் தமது துவக்க உரையில் கூறிய ஆளுநர் பாரதி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதன் மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மக்களிடையே ஒற்றுமையும் அன்பும் வளர்வதுடன் தேசிய ஒருமைப்பாடு ஓங்கும் எனவும் கூறினார்.

ஆளுநரது துணைவியார் திருமதி விமலா பாண்டே அவர்கள், குத்துவிளக்கை ஏற்றி வைத்து நூற்றாண்டு விழாவைத் துவக்கி வைத்தார்.

மகாகவி பாரதி நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் மாண்பு மிகு பிரசாந்தஸூர் அவர்கள் (மேற்கு வங்க அமைச்சர்) தமது வரவேற்புரையில் ''மகாகவி பாரதி மனிதகுலம் முழுமைக்கும் பொதுவானவர். கல்கத்தாவில் இவ்வாண்டுக்குள் பாரதி சிலை நிறுவப்படும்'' எனத் தெரிவித்தார்.

ஜாதி, இன, மத, மொழி அடிப்படையில் நாட்டைத் துண்டாடப் பார்க்கும் பிரிவினைச் சக்திகளினின்றும் நாட்டைக் காத்தலே பாரதிக்கு நாம் செய்யும் உண்மை அஞ்சலி எனக் கூறி மேற்கு வங்க அரசுச் செய்தித் துறை இயக்குநர் திரு எஸ். கே. சென்குப்தா ஐ. ஏ. எஸ். நூற்றாண்டு விழாக் குழுவின் சார்பில் பாரதியின் திருஉருவப் படத்தை ஜாதவ்பூர் பல்கலைக் கழகத்திற்கு அளித்தார்.



மேதகு மேற்கு வங்க ஆளுநர் உரையாற்றுதல்

படத்தைப் பெற்றுக் கொண்ட ஜாதவ்பூர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு மணீந்திர மோகன் சக்ரவர்த்தி அவர்கள் பாரதிக்கும் அரவிந்தருக்கும் இடையிலான தோழமை தமிழக மக்களுக்கும் வங்க மக்களுக்கும் இடையிலான பிணைப்பின் வெளிப்பாடே எனக் கூறினார்.

சாகித்ய அகாதமியின் முன்னாள் செயலாளர் டாக்டர் பிரபாகர் மாச்வே அவர்கள் திலகரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து பாரதியின் 'வாழ்க திலகர் நாமம் வாழ்கவே' எனும் பாடலின் மராட்டிய மொழி பெயர்ப்பைப் படித்துக் காட்டி, பாரதி தனது குருவாம் திலகர் பால் கொண்ட பக்தி எவ்வளவு ஆழமானது என்பதை விளக்கினார்.

இவ்விழாவின் சிறப்பு விருந்தினர் திரு. டி. என். இராமச்சந்திரன் அவர்கள் பாரதியின் உலகம் தழுவிய நோக்கினைச் சிறப்பித்துப்பேசினார். பேராசிரியர் திரு. கண. சிற்சபேசன் அவர்கள் பாரதியே பாரதம் எனக் கூறினார்.

இதன் பின் நூற்றாண்டு விழாக் குழுவின் உறுப்பினர்களான பல்வேறு அமைப்புக்களின் சார்பிலும் பாரதி திருஉருவப் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது. பாரதி பாடல் ஒன்றின் வங்க மொழியாக்கம் பாடப்பட்டது. பிறகு திருமதி நீரஜா பால் குழுவினரால் பாரதி பாடல்களைக் கொண்ட நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குப்பாரதி தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. மு. சீனிவாசன் அவர்கள் தலைமை வகித்து அண்மையில் வீசிய புயலால் அவதிப்படும் வங்க மக்களின் துயர் துடைக்க மேற்கு வங்க அரசு ஆற்றும் பணிகளுக்காக ரூ. 501 ஐ ஆளுநரிடம் அளித்தார்.

நூற்றாண்டு விழாக் குழுச் செயலாளர் திரு. பா. இராம்ஜி அவர்கள் நன்றி கூறினார்.

11-12-81 அன்று நூற்றாண்டு விழாக் குழுவின் சார்பில் தென் கல்கத்தாவின் முதன்மைச் சாலைகளின் வழியாக நன்கு அலங்கரிக்கப்பட்ட இரதம் ஒன்றில் பாரதி திருஉருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

13-12-81 அன்று பாரதீய பாஷா பரிஷத்துடன் இணைந்து நடத்திய நிகழ்ச்சியில் பாரதி பாடல்கள் பாடப்பட்டன. வங்க, மராட்டியக் கவியாக்கங்களும் இந்தியில் விளக்க உரையும் இடம் பெற்றன. இவ்வாண்டில் பாரதியின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளின் கவியாக்கம் இந்திய மொழி அனைத்திலும் வெளிவர பரிஷத், நூற்றாண்டு விழாக்குழுவிற்கு உதவும் எனப் பரிஷத்தின் செயலாளர் திரு. பரமானந்த் சூரிவாலா தெரிவித்தார்.

மேற்கு வங்க ஆளுநரின் துணைவியார் குத்துவிளக்கேற்றுதல்





# நெல்லை மாவட்டத்தில் தன்னிறைவுத்திட்ட இரண்டாவது கட்டப்பணிகள்

— பி. எல். ஆர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்ட இரண்டாவது கட்டப்பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு ரூ 494.80 இலட்சமாகும். இதில் இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ 423.80 இலட்சம். அதாவது 85%.

இணைப்புச் சாலைகளைப் பொறுத்த மட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் 876.4 கி. மீ. போடுவதெனத் திட்டமிடப்பட்டதில் 419 கி. மீ. தூரப்பாதைகள் போடப்பட்டு விட்டன.

ஆதி திராவிடர்களுக்கான மயானப் பாதைகள் 23.1 கி. மீ. தூரம் போடுவதென முடிவுசெய்யப்பட்டதில் எல்லாமே நிறைவுற்றிருக்கிறது.

1217 சிறுபாலங்கள் கட்டுவதென்று கணக்கிடப்பட்டதில் 550 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சிறுபாசன வசதி மேம்பாடு திட்ட இலக்கு 51 எனில் அவற்றில் சுமார் 40 முடிவுற்றிருக்கின்றன.

தாய்சேய்நல விடுதிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 44 ஆகும். 11 பள்ளிக் கட்டடங்கள், 44 சமுதாய நல நிலையங்கள், 17 ஊரக மருந்தகங்கள் ஆகியவை இம்மாதமே முடிவடையும் நிலையில் உள்ளன.

குடிநீர் வசதியைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 200. இதில் 135 முடிவுற்றிருக்கின்றன.

ஆதி திராவிடர்களுக்கு 1200 வீடுகள் கட்டித் தருவதெனத் தீர்மானிக்கப்பட்டதில் சுமார் 620 நிறைவு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் வீடுகளுக்கு மின் வசதி செய்து தருவதென இத்திட்டத்தின் சார்புத் திட்டமாகத் தகுதிபெற்ற 3344 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் 2694 வீடுகளுக்கு மின் இணைப்புத் தரப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பள்ளிக் கட்டடங்கள் போன்ற சில பணிகள், தேசிய கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாகவும் துரித கதியில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தன்னிறைவுத் திட்டம் மூலமான தாய் சேய் நலவிடுதி, மருந்தகங்கள், சிறுபாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், தடுப்புச்சுவர்கள் போன்ற பணிகளில் ஆங்காங்கே தேக்கம் ஏற்பட்டுள்ளதற்குக் காரணம் சிமெண்ட் தட்டுப்பாடே என்று பொறுப்புள்ள அதிகாரிகளால் மிகவும் கவலையோடு தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும், தன்னிறைவுத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக நெல்லை மாவட்டத்தின் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்ட மொத்தப் பணிகள் 2123ல், டிசம்பர் 20 வரையில் 957 பணிகள், அதாவது 50 சதவிகிதத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டன.


மற்ற எல்லாப் பணிகளும் 1982ல், முதல் இருமாதங்களில் நிறைவேற்றப்படத் தேவையான முயற்சிகளெல்லாம் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[3..ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெற்றுள்ளார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

கல்வி, மற்றும் சமூக நிலையில் பிற்பட்டவர்களை உயர்த்துவதோடு அல்லாமல் அவர்கள் பொருளாதார நிலையிலும் மேம்பாடு அடைய இந்த அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. இதற்கெனத் தமிழ்நாடு பிற்பட்டோர் மேம்பாட்டுக் கழகம் என்ற நிறுவனம் ரூ. 10 கோடி மூலதனத்துடன் இன்னும் ஒரு சில நாட்களில் செயல்பட இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந் நிறுவனம், பின் தங்கிய மக்கள் துவங்கும் தொழில்களுக்குக் குறைந்த வட்டி விகிதத்தில்கடன் கொடுத்தல், வங்கிக் கடன்பெற உத்தரவாதம் அளித்தல். பங்குத் தொகை கட்டுதல் முதலிய செயல்களில் ஈடுபடும். மேலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய வற்றின் அடிப்படையில் கொடுக்கும் மானியத்தைப் பயன்படுத்தி இக்கழகம் பிற்பட்ட மக்களின் வணிக வர்த்தக தொழில்முதலிய பொருளாதார மேம்பாட்டிற்குப் பாடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பட்டோர் நலன் கருதி ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த துறையைச் சார்ந்த பிற்பட்டோர் நல அதிகாரிகள் அரசினுடைய நோக்கத்தைப் புரிந்து கொண்டு செயல்பட்டதால், உழைப்பு, நேரம் ஆகிய அத்தனையையும் ஒருங்கிணைந்த முறையில் இந்த அரசினுடைய மிக நியாயமான கடமையை ஆற்றுகின்ற அளவிற்கு எந்தெந்த வகையில் திட்டங்களைத் தீட்டினால், நன்மை ஏற்படுமோ அந்த வகையில் பெருமைப்படுகிற அளவிற்குத் தமிழகத்தின் நிலை வளர்ந்து இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அண்டை மாநிலங்களிலிருந்து வந்த அமைச்சர்களும் பல்வேறு குழுக்களும் பார்வையிட்டு, மற்ற மாநிலங்களுக்கு தமிழகம் ஓர் எடுத்துக் காட்டாக இருக்கிறது என்று குறிப்பிட்டது மிக மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான். அது மேலும் சிறப்புடன் நடைபெறுவதற்கு குறைபாடுகளைக் களையவும், இந்தத் துறையில் உள்ள குறைகளை எப்படியெல்லாம் களைந்து திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றலாம் என்பதை ஆராய இங்கு கூடியிருக்கிறோம். ஆனால் அதற்கு போதுமான அளவிற்கு நேரம் இருக்குமா? அப்படி போதுமான நேரம் இல்லாவிடின் தொடர் கூட்டமாக சென்னையில் வைத்து அனைவருடைய



கருத்துக்களையும் முழுவதுமாக ஆராய்ந்து முடிவெடுக்கலாம் என்று கூட கருதிக் கொண்டிருக்கிறேன்.


பிற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கின்ற இந்த மாநிலத்திற்கு வெளி மாநிலங்களிலிருந்து அமைச்சர்களும், அதிகாரிகளும், பிற்பட்டவர்களுக்கு எந்தெந்த வகையில் வசதி வாய்ப்புகளைஇந்தமாநிலம் செய்து வருகிறது என்பதை கண்டு அறிந்து கொள்ளவும்,எந்த அளவிற்கு இப்பணியில் தமிழகம் வெற்றி பெற்று இருக்கிறது என்பதையும் நேரடியாக அறிந்து கொள்வது மூலமாக அந்தந்த நிலமைகளை ஆராய பல்வேறு குழுக்களும், பல்வேறு அமைச்சர்களும் வந்து பார்த்து பாராட்டு கின்ற அளவிற்கு நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

பிற்பட்டவர்கள், மிகவும் பிற்பட்டவர்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களின் நலன் கருதி அவர்களுக்கென ஒரு தனித் துறையும் இந்தியாவில் 22 மாநிலங்களில் 4 அல்லது 5 மாநிலங்கள் தான் பிற்பட்டோர் நலத்துறை என வைத்து தனிச்சலுகைகளை அளித்து வருகிறது. குஜராத், பீகார், ஒரிசா போன்ற மாநிலங்களில் இதுபோல் நடத்த முயன்று உயர்ந்த சாதிக்காரர்களின் எதிர்ப்பின் விளைவாக அங்கு துப்பாக்கிப் பிரயோகம் என்கிற அளவிற்கு வன்முறைகள்வளர்ந்து இன்னும் பிரச்சனைகள் தீர்க்கப் படாமல் இருப்பதை நாம் காண்கிறோம். ஆனால் தமிழகத்தை பொறுத்தவரையில் அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லாமல் சமுதாயத்திலே அனைவருக்கும் நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டிருக்கிறோம்.

பள்ளத்தில் விழுந்த யானையை பழகிய யானையின் உதவியைக் கொண்டு கைகொடுத்துத் தூக்கி விடுவதுபோல், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு கைகொடுத்து தூக்கி விட்டால்தான் முன்னுக்கு வருவான். ஆயிரம் ஆண்டுகாலமாக எந்தெந்த வகையில் ஒதுக்கப்பட்டார்களோ, அந்தந்த வகையில் தனிச் சலுகைகளை கொடுத்தால்தான், அவர்கள் முன்னுக்கு வர வசதியும்வாய்ப்பும் ஏற்படும். ஆனால் 40 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமை வேறு. தற்பொழுதுள்ள நிலைமை வேறு. பிற்பட்டோர் நிலையைப் பொறுத்த வரையில் சமுதாயத்தின் நிலையை தனிச்சலுகைகள் மூலமாகவும் எந்த அளவுக்கு மீண்டும் சமுதாயம் பெற வேண்டிய நியாயமான தன்மைகளைப் பெற்று இருக்கிறது என்பதையும் நம்மால் உணர முடிகிறது. ஆனாலும், பள்ளத்தில் விழுந்தவனுக்கு கையை நீட்டினால்தான் பள்ளத்தில் இருப்பவன் கரைக்கு வருவானே தவிர நீ சுயமாக மேல் எழுந்துவா, உன்னுடைய திறமையைக் காட்டு என்று கூறுவது சரியல்ல.

பிற்பட்ட வகுப்பினர் தங்களை மிகவும் பின் தங்கியவர்களாக அரசு பாவிக்க வேண்டும் என்பதும், மிகவும் பின் தங்கியவர்கள் தங்களைப் பழங்குடி மக்களாக கருதப்பட வேண்டும் என்பதும், குறிப்பாக சலவைத்

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.


டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.


## டான்சி
### தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI


DIPR



தொழிலாளர்கள், மீனவர்கள், தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில்சேர்க்கவேண்டும் என்று கோருகிறார்கள். இதைச் செய்ய வேண்டியது மத்திய அரசே தவிர, மாநில அரசு அல்ல. அதற்கென அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. ஆனால் உயர்ந்த சாதிக்காரர்களான சில வகுப்பினர் தங்களையும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவதைக் காண்கிறோம். எதற்கு இதை நான் சொல்ல வருகிறேன் என்றால், பொருளாதார வகையில் எடுத்துக் கொண்டால், இப்பொழுதுகூட 25 சாதியினர் பிற்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கோருகிறார்கள். இப்படி மேலும், மேலும் பல இனத்தவர்களையும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதன் மூலம் இருக்கக்கூடிய ஒதுக்கீட்டில் பலரும் பகிர்ந்து கொள்ள வேண்டிய கட்டாய நிலைமை ஏற்படுகிறது. இப்பொழுது தங்களில் சேர்க்க வேண்டுமென்று சொல்பவர்கள் தங்கள்பிள்ளைகள் மிக உயர்ந்த நிலைக்கு அதாவது பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்றவற்றில் பிற்பட்டோர்களுக்குரிய சலுகையைப் பெற்று வசதிகளைப் பெருக்கிக் கொள்ள விரும்புகிறார்கள். தமிழ்நாட்டில் தற்போது 177 பிற்பட்ட வகுப்பு பிரிவினர்கள் இருக்கிறார்கள். வசதி படைத்த சமுதாய வாய்ப்புகள் பெற்று இருக்கிற சுமார் 10 சமுதாயத்தினர்தான் பிற்பட்டோர்களுக்குரிய சலுகைகளை அனுபவித்து வருகிறார்கள் என்று திரு சட்டநாதன் அறிக்கை கூறுகிறது. மிக மிகச் சாதாரண மக்களுக்கு இச்சலுகைகள் செல்லவில்லை என்று எடுத்துக் கூறியதோடு திரு சட்டநாதன் அவர்கள் அப்படி ஆராய்ந்து பார்த்து அப்படிப்பட்டவர்களை பிற்பட்டவர்கள் பட்டியலிலிருந்து நீக்கிவிட்டால்கூட நல்லது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். பிற்பட்டவர்களுக்கு என 50 சதம் இட ஒதுக்கீடு ஒதுக்கினால்கூட வசதி படைத்தவர்களும் பிற்பட்டவர்கள் பட்டியலில் இருந்து கொண்டு அந்த இடங்களைப் பெற்றுக் கொண்டுபோகிறார்கள் வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, போன்றவற்றில் கிட்டத்தட்ட 82 சதம் அல்லது 2, 3 தலைமுறையாக சலுகைகளை அவர்களுடைய வீட்டுப் பிள்ளைகள் பெற்று வருகிறார்கள். எனவே புதிதாக பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதை கூடுமானவரை விட்டுவிட வேண்டும். மேலும் உண்மையான பிற்பட்ட மக்களுக்குச் சலுகைகள் போய்ச் சேரவேண்டுமே தவிர, யாருக்கோ போய் சேருவது தவிர்க்கப்பட வேண்டும். இதில் இயக்குநர் அவர்கள் பிற்பட்டோர் குழு ஒன்று ஆரம்பித்துச் செயல்படுத்தினால், லபமாகஇருக்குமா என்று தெரியவில்லை. குற்ற மரபினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்கள் என்ற சொல் மிக நீளமாக இருப்பதோடு அல்லாமல், ஒரு காலத்தில் இன்ன குற்றமிழைத்தவர்கள் என்றெல்லாம் குறிப்பிடுவதை மாற்றிச் சுருக்கமான ஒரு பெயரைமாற்றி அமைப்பது நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். மேலும் மிக முக்கியமான நம்முடைய நோக்கங்கள் செம்மையான முறையில் நிறைவேறவும், எடுத்த நோக்கம் நிறைவேற்றப்படாமல் கடலில் கரைத்த பெருங்காயமாக இல்லாமல், பலன்கள் யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ, அதற்கேற்ற வகையில் திட்டங்கள் தீட்டி, இந்த துறையின் பணிகள் அடி மட்டத்திலிருந்து உயர் மட்டம் வரையிலும் செம்மைப்படுத்த என்னென்ன செய்யலாம் என்பதை நாம் இங்கு கலந்தாலோசித்து, நல்ல பல முடிவுகளை எடுக்க இருக்கிறோம். நாம் எடுக்கும் முடிவுகள் பிற்பட்ட சமூகத்தினருடைய மேம்பாட்டிற்குப் பெரிதும் பயன்படும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. பிற்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காக இப்பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு சிறப்பாகப் பணி புரிய வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



# அமோக விளைச்சலுக்கு





# உரத்தைத் திறம்படப் பயன்படுத்துங்கள்



உயர் விளைச்சலுக்கு உரம் மிகவும் அவசியம். உரத்தின் விலையும் சாகுபடி செலவும் அதிகமாக உள்ள இந்நேரத்தில் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவது மிகவும் முக்கியம்.

1. முதலில் உங்கள் நிலத்துக்கும் பயிருக்கும் ஏற்ற சரியான உரத்தைத் தேர்ந்தெடுங்கள். மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி உரமிடுங்கள்.


2. ஒவ்வொரு பயிருக்கும் உரமிடும் முறைகள் வேறுபடும். அதை அறிந்து முறையாக உரமிட வேண்டும்.

3. பண்ணையில் கிடைக்கக்கூடிய தொழு உரம், பண்ணைக் கழிவுகள் போன்றவற்றையும் சிறந்த முறையில் சேகரம் செய்து பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.

4. மேலுரமாக யூரியாவை ஒரே தடவையில் இடாமல், இரண்டு-மூன்று தடவைகளில் பிரித்து இட வேண்டும். யூரியாவை வேப்பம் புண்ணாக்குடன் கலந்து இட வேண்டும்.

மேலும் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளையும், விரிவான சாகுபடி முறைகளையும் அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள் :

மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001






சமச்சீர் உரமிட

விஜய்

HTM-MFL-2526



# கல்லூரிக் கல்வியின் முன்னேற்றம்

கல்லூரிக் கல்வித்துறையானது 1981-82ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுப் பகுதியில் தொடர்ந்து மிகத் தீவிரமான முன்னேற்றம் அடைந்துள்ளது. கல்லூரிக் கல்வித்துறை 187 கலை/அறிவியல் கல்லூரிகளுக்கும், 23 கல்வியியல் கல்லூரிகளுக்கும், 23 மற்ற சிறப்புக் கல்வி நிறுவனங்களுக்கும் பொறுப் பேற்று நடத்துகிறது. இந்த சிறப்புக் கல்வி நிறுவனங்களுள் உடற்பயிற்சிக் கல்வியியல் கல்லூரிகள், கீழ்த்திசை மொழிக் கல்லூரிகள், இசைக் கல்லூரிகள் ஆகியவையும் அடங்கும் இந்தக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள். பயிலும் மாணவர்கள் விவரம் பட்டியலில் தரப்பட்டுள்ளது

இந்த ஆண்டில் புதிய கல்லூரி எதுவும் தொடங்க அனுமதிக்கப் படவில்லை எனினும் தற்போதுள்ள கல்லூரிகளில் புதிய பாட வகுப்புகள் தொடங்கப் பெற்றுள்ளன. இதன் மூலம் மேல் நிலைப் பள்ளிகளிலிருந்து பெருமளவில் தேர்ச்சி பெற்று வரும் மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்ய முடிகிறது. இந்தக் கல்வியாண்டின் 46 புதிய பட்டப் படிப்புப் பிரிவுகளும் 50 நிறை நிலைப் பட்டப் படிப்புப் பிரிவுகளும் இந்த மாநிலத்திலுள்ள அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் தொடங்கப்பட்டுள்ளன. ஒரு தனியார் கல்வியியல் கல்லூரிக்குப் புதிதாக 'எம். எட்' ( M.Ed. ) வகுப்புத் தொடங்க அனுமதி வழங்கப் பெற்றுள்ளது.

இந்த மாநிலத்தினை முழு அளவாக எடுத்துக் கொண்டால் பெரிய நகரங்களிலுள்ள கல்லூரிகளில் சில பாடப் பிரிவுகளில் இடம் பெறுவதில் கடும் போட்டியிருந்த போதிலும் கிராமப்புறக் கல்லூரிகளில் சில காலியிடங்கள் உள்ளன. தற்போதுள்ள அரசு கல்லூரிகளில் புதிய பாட வகுப்புகள் தொடங்குதல், சைக்கிள் நிறுத்திடமமைத்தல், குடிநீர் வசதியமைத்தல், நூலகம், ஆய்வகம் விரிவுபடுத்தல் போன்ற வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பெற்றது. தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரை புதிய கட்டடங்கள் கட்டுவதற்காகவும் அரசு நிதி உதவி செய்கிறது.

வேலூரிலுள்ள தனபாக்கியம் கிருஷ்ணசாமி முதலியார் மகளிர் கல்லூரியை அரசு இரண்டாண்டுகளுக்குத் தற்காலிகமாகத் தன் பொறுப்பில் ஏற்றுள்ளது. சென்னை மண்டலக் கல்லூரிக் கல்வித்துணை இயக்குநர் இந்தக் கல்லூரியின் பாதுகாவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிவகங்கையிலுள்ள மன்னர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரியை அதன் பழைய நிருவாகத்தின் இசைவுடன் அரசு நிரந்தரமாக 1-7-81 முதல் தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டுள்ளது. கல்லூரியின் பெயர் 'மன்னர் துரைசிங்கம் அரசுக் கல்லூரி' என மாற்றப் பெற்றுள்ளது.

கல்லூரிகளில் மாணவர் அமைதியின்மை காரணமாக ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாட இந்த மாநிலத்திலுள்ள அரசியல் கட்சித் தலைவர்களை அழைத்து மாண்புமிகு கல்வி அமைச்சர் இரண்டு கூட்டங்களை நடத்தினார். இந்தக் கூட்டங்களில் நடைபெற்ற ஆய்

வின் விளைவாக மாணவர் பேரவைத் தேர்தல்கள் நடத்துவது பற்றி சில வழிகாட்டு நெறிகள் வகுக்கப்பட்டன. இந்தக் கல்வியாண்டின் துவக்கத்திலேயே இம்மாநிலத்திலுள்ள அனைத்துக் கல்லூரிகளுக்கும் இந்த வழிகாட்டு நெறிகள் அனுப்பி வைக்கப்பட்டன. தங்கள் வசதிக்கேற்ப தேர்தல்களை நேரடியாகவோ நேரடியற்ற முறையிலோ அவர்கள் விருப்பம் போல் நடத்திக் கொள்ளலாம் என்றும் கல்லூரிகளுக்கு அறிவுரை தரப் பெற்றது. பெரும்பாலான கல்லூரிகள் வழிகாட்டு நெறிகளைப் பின்பற்றியமையால் மாணவர் பேரவைத் தேர்தல்கள் அமைதியான நிலையில் நடைபெற்றன. இந்தத் தேர்தல்களின் விளைவாக ஏற்படும் மாணவர் அமைதியின்மையும் மிகக் குறைந்த நிலையில் இருந்தது.

ஒவ்வொரு கல்லூரியிலும் ஆசிரியர்கள் மற்ற பணியாளர்கள், மாணவர்கள் இவர்களின் குறைகளைக் கவனிப்பதற்காகத் தனித் தனியே மூன்று 'நலக்குழுக்கள்' அமைக்க அரசு ஆணையிட்டது. இதன் மூலம் மாணவர், ஆசிரியர் போராட்டங்களால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென்பது கருத்தாகும்.

அரசுக் கல்லூரிகளில் [10 (ஏ) (1) பொது விதியின்படி] நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணிநிலையை ஒழுங்குபடுத்த தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் சிறப்புத் தேர்வு நடத்தப்பட்டது. இந்தக் குழு 224 உதவிப் பேராசிரியர்களையும், 160 பயிற்றுநர்/விளக்குநர்களையும் தேர்வு செய்ததன் அடிப்படையில் இவர்களின் பணிநிலை ஒழுங்குபடுத்தப்பட்டு வருகிறது.

மூன்றாண்டுப் பணிக்காலத்தை நிறைவு செய்த் நிறை 'நிலைப் பட்டம் பெற்ற 112 பயிற்றுநர்/விளக்குநர்கள் உதவிப் பேராசிரியர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

நிறைநிலைப் பட்டப் படிப்பு வகுப்புகளில் சேர்ந்து படிப்பதற்கு இளநிலைக் 'கல்வித்தகுதி பெற்ற பயிற்றுநர்கள் விளக்குநர்கள் ஆகியோரை முழுச் சம்பளம், படித்தொகைகளுடன் அனுப்பும் திட்டத்தையும் அரசு ஏற்றுள்ளது. இத்திட்டத்தில் நடப்பு ஆண்டில் இளநிலைப் பட்டம் பெற்ற முப்பது ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். பத்து ஆண்டுகளுக்கு மேல் தகுதியும் பணிக்காலமும் உடைய உதவிப் பேராசிரியர்கள் 1.4.80 முதல், பேராசிரியர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்தில் 1981 அக்டோபர் முடிய உள்ள காலத்தில் 1,153 உதவிப் பேராசிரியர்கள் பேராசிரியர்களின் நிலையை எய்தியுள்ளனர்.

உதவி பெறும் கல்லூரிகளில் எந்தெந்தப் பாடங்களில் உபரி ஆசிரியர்கள் இருந்தனரோ அவர்களுக்கு பணிமாற்று ஏற்பாடு செய்யும் திட்டம், இந்த ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுகிறது. அவ்வாறு உபரி ஆசிரியர்கள் இல்லாத பாடங்களைப் பொறுத்தவரை தனியார் கல்லூரி நிர்வாகங்களே பல்கலைக் கழகங்களின் அனுமதியுடன் காலியிடங்களை நிரப்பிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாண்டுகளில் இருந்ததைப் போலவே நடப்பாண்டிலும் பல்கலைக் கழக மானியக் குழுவின் தர - மேம்பாட்டுத் திட்டம் ( F.I.P. ) செயல்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் எம் ஃபில் ( M.Phil ) மற்றும் ஆராய்ச்சி ( Ph.D. ) படிப்புகளுக்காக 60 ஆசிரியர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

மத்திய மாநில அரசுகள் வழங்கும் பலதரப்பட்ட படிப்புதவித் திட்டங்கள் இந்த ஆண்டிலும் தொடர்ந்து செயல்பட்டன. இதனால் பெரும்பாலான மாணவர்கள் இடையீடின்றித் தங்களது படிப்பைத் தொடர முடிந்தது. மேல்நிலை வகுப்புகளில் அறுபது விழுக்காட்டுக்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்ற தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு இடைக்காலத் தகுதிக் கொடையாக ரூ. 300 வீதம் அனுமதித்து வழங்கப்படுகிறது. பயிற்றுமொழி தமிழில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்கத்தொகையாக ஆண்டுதோறும் ரூ. 180 வீதம் வழங்கப்படுகிறது. இதற்காக நடப்பாண்டிற்கு ரூ. 35 இலட்சம் ஒதுக்கீடு உண்டு.

சமுதாயத்தின் மிகப் பிற்பட்ட பிரிவுகளையும் கிராமப் புறங்களையும் சேர்ந்த தரம் குறைந்த மாணவர்களுக்கு உதவுவதற்காக இத்துறை பல்வேறு வகையான சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் தங்களைப் பல்கலைக் கழகத் தேர்வுகளுக்கு ஆயத்தம் செய்து கொள்வதற்காகச் சிறப்புப்பாட வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஆங்கில மொழியின் தரத்தை உயர்த்துவதற்காக ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன. அதேபோல் மாணவர்களின் தர உயர்வுக்காகவும் திட்டங்கள் செயல்படவுள்ளன. இத்திட்டத்தின் நோக்கம் மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை வலுப்படுத்துவதேயாகும். இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளனர். மேலும் மற்ற பல கல்லூரிகளிலும் இத்திட்டம் நடப்பாண்டில் விரிவுபடுத்தப் படவுள்ளது.

### கல்லூரிகளின் தொடர்பான புள்ளி விவரங்கள்—1980-81

| வகை | கல்லூரிகளின் எண்ணிக்கை | | மாணவர் எண்ணிக்கை | ஆசிரியர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | அரசு | தனியார் | | |
| கலை/அறிவியல் கல்லூரிகள் | 51 | 136 | 154,711 | 12,570 |
| கல்வியியல் கல்லூரிகள் | 7 | 16 | 3,354 | 231 |
| உடற்பயிற்சிக் கல்வியியல் கல்லூரிகள் | ... | 3 | 321 | 36 |
| கீழ்த்திசை மொழிக் கல்லூரிகள் | ... | 15 | 1,765 | 141 |
| சமூகப்பணிக் கல்விநிலையங்கள் | ... | 2 | 191 | 16 |
| இசைக் கல்லூரிகள் | 2 | ... | 542 | 51 |
| ஊரக உயர்கல்வி நிலையம் | ... | 1 | 583 | 70 |
| மொத்தம் | 60 | 173 | 161,467 | 13,115 |

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

—தொகுப்பு: தே. மணி

## 2—12—81

தமிழகத்தில் உள்ள ஆதிதிராவிடர் சமூகத்தினரின் வாழ்வு வளம்பெற மத்திய அரசு உதவியுடன் 10 கோடி ரூபாய் செலவில் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்று மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சர் திரு. விஜயசாரதி அவர்கள் அறிவித்தார்கள்.

## 3—12—81

மேற்கு மாம்பலம், நந்தனம் ஆகிய பகுதிகளில் கழிவுநீர் வடிகால்களைச் சீரமைக்கவும் இவ்வசதி இல்லாதஇடங்களில் புதிதாகக் கழிவுநீர் வடிகால்களை ஏற்படுத்தவும் 73 இலட்சம் ரூபாய் செலவில் புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. என்று மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. ராஜாமுகமது அவர்கள் அறிவித்தார்கள்.

## 4—12—81

தமிழக அரசு சார்பில் இந்த ஆண்டு கொடி தினத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட 8.14 இலட்சம் ரூபாய் 5546 முன்னாள் இராணுவத்தினர் நலனுக்காக வழங்கப்பட்டுள்ளது.

## 7—12—81

ஆண்டுதோறும் தொழிலாளர் நல நிதிக்கென அரசுச் சார்பில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் 2 ரூபாய் வீதம் செலுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் அறிவித்தார்கள்.

## 8—12—81

கோவையில் 25 இலட்சம் ரூபாய் செலவில் கலையரங்கம் கட்டப்படும் என்றும் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் கலையரங்கம் கட்டப்படும் என்றும் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்கள்.

சென்னை நகரில் வெள்ளத்தடுப்புப் பணிகளுக்காகத் தமிழக அரசு 60 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிட்டிருப்பதாக மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு ராஜா முகமது அவர்கள் அறிவித்தார்கள்.

## 10—12—81

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்குக் கடந்த அக்டோபர் மாதம் முதல் குறைந்த அளவு 6 ரூபாயிலிருந்து அதிக அளவு 30 ரூபாய் வரை ஓர் அகவிலைப் படி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

## 15—12—81

கதர் நெசவாளர்கள் 500 பேருக்குத் தமிழக அரசு இந்த ஆண்டு வீடுகட்டிக் கொடுக்கும் என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ்.என். ராஜேந்திரன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 18—12—81

தமிழ் நாட்டில் இந்த ஆண்டு வேலை நிறுத்தம் செய்யாத போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் தலா 260 ரூபாய் போனஸ் அளிக்கப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் அறிவித்தார்கள்.

வழக்கு மன்றங்களில் நிர்வாகம் விரைவில் நடைபெற வழக்கு மன்றங்களுக்கு 'டேப்ரிகார்டர்கள்' அளிக்கத் தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## 19—12—81

டூரிங் திரையரங்குகளின் உரிமத்துக்குரிய காலவரம்பை 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக நீட்டித்துத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மேற்பரப்புநீர் மற்றும் நிலத்தடிநீர் ஆகியவற்றை ஒருங்கிணைத்துப் பயன்படுத்தும் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு செயல்படுத்துகிறது என்று மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு ராஜாமுகமது அவர்கள் அறிவித்தார்கள்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு விரைவில் தமிழ் நூல்களை வெளியிடுவதற்கும் பெரிய நூலகம் ஒன்றை அமைக்கவும் அரசு 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கிடு செய்துள்ளது.

## 20—12—81

மின்சார வாரிய ஊழியர்கள் வீடுவீடாகச் சென்று மின்சார அளவைக் கணக்கிட்டு எவ்வளவு பணம் கட்டவேண்டுமென அங்கேயே பட்டியல் தயாரித்துக் கொடுக்கும் ( Spot billing system ) அட்டைப் பட்டியல் முறை வருகிற சனவரி 1-ஆம் தேதி முதல் அமுலுக்கு வருகிறது.

• மின்சாரப் பொருட்கள், மருந்துகள், வாகனங்களின் உதிரி உறுப்புகள் ஆகியவை தயாரிக்கும் தொழில்களை மாநிலத்தின் எந்தப் பகுதியில் தொடங்கினாலும், அத்தொழிற் சாலையின் முதலீட்டில் 10 விழுக்காடு மானியமாக வழங்கப்படும்என்று மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் திரு திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்கள்.

மதுரையில் புதிதாக ஒரு பல் மருத்துவக் கல்லூரி தொடங்கத் தமிழக அரசு தீர்மானித்துள்ளதுஎன்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் அறிவித்தார்.

அரக்கோணத்தில் சுமார் 1.5 கோடி ரூபாய் செலவில் தொழிற்பயிற்சிக் கல்லூரி ( Polytechnic ) கட்டப்படும் என்று மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சர் திரு விஜயசாரதி அவர்கள் அறிவித்தார்கள்.

# காமதேனுத் திட்டம்

குறள்:

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

பொருள்:

பொருளின் அளவறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை பல வளமும் இருப்பது போலத் தோன்றி இல்லாமல் மறைந்துவிடும்.

அளவறிந்து வாழும் வாழ்க்கையின் சிறப்பு அம்சம் சேமிப்பு!
கனரா வங்கியின் மேன்மையான சேமிப்புத்திட்டம் காமதேனுத்திட்டம்.
வட்டிக்கு வட்டி அளிக்கும் குதூகலத் திட்டம்.
உங்கள் அல்லல் நீக்கும் அற்புதத் திட்டம்.

SERVING TO GROW · GROWING TO SERVE · CANARA BANK

**கனரா பாங்க்**

(தேசீயமாக்கப்பட்ட பாங்க்)

**நாடெங்கிலும் 1341க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன**



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்---அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

தமிழரசு
Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676

# தமிழ்நாட்டில் தன்னிறைவுத் திட்டப் பணிகள்


சிறு பாசன வசதிகள்


தடுப்புச் சுவர்


இணைப்புச் சாலை


ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்


கிராம மருந்தகம்


பள்ளிக் கட்டிடம்


தாய் சேய் நல விடுதி


குடி நீர் வசதி


சிறு பாலம்


ஆதி திராவிடர் குடியிருப்பு —மயானப் பாதை